# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 32

சுடர் 33 கதிர் 220 ஆனி 20ஆம் நாள் புதன்கிழமை 04 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## மணிவண்ணனின் உறுப்புரிமையை நீக்கக்கோரி வழக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 4
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணனின் யாழ்ப்பாண மாநகர சபை >> 27

# பெரும் குற்றம் இழைத்த படையினர் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும்

### ஐ.நா.வதிவிடப் பிரதிநிதியிடம் இரா.சம்பந்தம் அழுத்தமாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4
நாங்கள் முழு இராணுவத்தையும் குற்றவாளிகள் என்று கூறவில்லை. பெரும் குற்றங்களை இழைத்த இராணுவத்தினர் தண்டிக்கப்படவேண்டும். இவ்வாறு எதிக்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இலங்கைக்கான ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி டெரன்ஸ் டி ஜோன்ஸிடம் அழுத்தமாகத் தெரிவித்தார்.
எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனை ஐ.நா.வதிவிடப்பிரதிநிதி டெரன்ஸ் டி ஜோன்ஸ் நாடாளுமன்றத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே இரா.சம்பந்தன் இவ்வாறு வலிறுத்தினார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் >> 27

## டெனிஸுக்கு மீள அமைச்சு: மன்றின் கட்டளை குரேயிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சராக சட்டப்படி பா.டெனீஸ்வரன் பதவி வகிக்க வேண்டும். அவரது அமைச்சுக்களைப் பகிர்ந்து கொண்டவர்கள் அந்தப் பதவிகளிலிருந்து உடனடியாக விலகவேண்டும் என்ற கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளை வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேக்கு நேற்றுக் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்து >> 27

## வீதியைக் கடந்த சிறுமி ஹைஏஸ் மோதிச் சாவு

### கிளிநொச்சியில் துயரம்

கிளிநொச்சி, ஜூலை 4
கிளிநொச்சியில் தரம் 3 இல் கற்கும் சிறுமி விபத்தில் உயிரிழந்துள் >> 06

## பொலிஸ் உத்தியோகத்தர் துப்பாக்கிச் சூடுபட்டு சாவு



யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியில் நேற்றுப் பி.ப. பொலிஸ் உத்தியோகத்தரொருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந் >> 27

# புலி உருவாக்கப் பேச்சால் பதவி இழக்கின்றார் கலா

### விசாரணை முடியும் வரை இடைநீக்க மைத்திரிக்குப் பரிந்துரைத்தார் ரணில்

கொழும்பு, ஜூலை 4
விஜயகலா மகேஸ்வரனை இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்குவதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குப் பரிந்துரைத்துள்ளார். >> 06

## கல்வித்துறையினர் போராட்டம் ஆதரவளிக்குமாறும் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4
வடக்கு உட்பட நாடு முழுவதும் 16 தொழிற்சங்கங்கள் இணைந்த கல்வித்துறையினர் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். >> 06

## விஜயகலா விவகாரத்தால் நாடாளுமன்றத்தில் அமளி

கொழும்பு, ஜூலை 4
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கை ஓங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை உடனடியாக அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கி, நாடாளுமன்ற அமர்வு >> 29

## விஜயகலா "பல்டி"

### வார்த்தை தடுமாறிவிட்டது என்று நேற்று விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்க வேண்டும், புலிகள் புத்துயிர் பெறவேண்டும் என்று கூறியது வார்த்தை தடுமாற்றத்தால் >> 29

## புலிகள் சேர்த்த பணத்தால் வறுமையைப் போக்குங்கள்

### பிரபாகரன் இறந்துவிட்டார் என அருட்தந்தை இமானுவேல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இறந்துவிட்டார். ஈழப் போராட்டத்துக்காக புலம்பெயர் நாடுகளில் >> 06

## கலா, விக்கி, சிவாஜியை புனர்வாழ்வுக்கு அனுப்புக

### ரஞ்சன் ராமநாயக்க கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 7
இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வட மாகாண சபை >> 29

## ஞானசாரரை விட்டுவிட்டு கலாவை பிடிப்பது ஏன்?

### அமைச்சர் மனோ கேள்வி

நல்லவர், வல்லவர். பிரபாகரனை அவசரப்பட்டுக்கொன்றுவிட்டோம் என்று ஞானசாரர் என்னிடம் சொன்னார் அவரை விட்டு விட்டு விஜயகலாவைப் பிடிப்பது ஏன்? இவ்வாறு அமைச்சர் மனோ கனேசன் கேள்வியெழுப்பியுள்ளார். >> 29

## 65 தமிழ்க் குடும்பங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு

### நாவற்குழியில் அத்துமீறி குடியேறியுள்ளனராம்

தென்மராட்சி, ஜூலை 4
நாவற்குழியில் வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் அத்துமீறிக் >> 06

## பெரமுனவின் நிகழ்வில் கோத்தபாய ராஜபக்ச

கொழும்பு, ஜூன் 4
2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைக்காரியாலயத்தில் இன்று நடைபெறவுள்ள நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வில் முன்னாள் அரச தலைவர் >> 27

## மனம் சரியில்லாத கலாவை அங்கொடையில் சேருங்கள்!

### சபையில் மரிக்கார் எம்.பி. கூச்சல்

கொழும்பு, ஜூலை 4
மனநிலை சரியில்லாத விஜயகலாவை அங்கொடை மருத்துவமனையில் சேருங்கள். தேசத்துரோக செயற்பாடுகளை முன் >> 06

சிறுத்தை அடித்துக் கொலை 10 பேருக்கும் மறியல் நீடிப்பு >> 06

## மோத வேண்டுமெனில் எம்முடன் மோதுங்கள்

### மகிந்த ராஜபக்சவுக்கு நியூயோர்க் டைம்ஸ் பதில்

கொழும்பு, ஜூன் 4
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபச தொடர்பில் எமது பத்திரிகை வெளியிட்ட செய்தி >> 27





மன்னார்


புதுக்குடியிருப்பு

# சிறுமி றெஜினா கொலையைக் கண்டித்து வன்னியில் கவனவீர்ப்புப் போராட்டங்கள்

யாழ்ப்பாணம். ஜீலை 4

யாழ்ப்பாணம். சுழிபுரத்தில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சிறுமி றெஜினாவுக்கு நீதி வேண்டியும். குற்றவாளிகளுக்கு அதிகூடிய தண்டனை வழங்கக் கோரியும் மன்னாரிலும். புதுக்குடியிருப்பிலும் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

சுழிபுரம். காட்டுப்புலத்தில் 6 வயதுச் சிறுமி சி.றெஜீனா கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். சிறுமி பாலியல் துன்புறுத்தல்களின் பின் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளார் என்று உடற்கூற்றுச் சோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுமிக்கு நீதி வழங்கக் கோரித் தொடர்ச்சியாக மக்கள் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**மன்னார்**

சிறுமியின் கொலைக்குக் கண்டனம் தெரிவித்து மன்னாரில் நேற்று அமைதி ஊர்வலம் நடத்தப்பட்டது. முருங்கனில் வர்த்தகர்கள் கடைகளை அடைத்து போராட்டத்துக்கு ஆதரவளித்தனர்.

முருங்கன் மருத்துவமனை முன்பாக ஆரம்பித்த ஊர்வலம். முருங்கன் பேருந்து நிலையம் வரை சென்றது. ஊர்வலத்தின் இறுதியில் அரச தலைவருக்கான மனு வடக்கு மாகாண சபை உறுப்பினரான பா.டெனீஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

ஊர்வலத்தில் அருட்தந்தையர்கள். மனித உரிமை செயற்பாட்டாளர்கள். பாடசாலை மாணவர்கள். பொது அமைப்புக்கள். அப்பிரதேச வர்த்தகர்கள். பெண்கள் அமைப்புக்கள். மற்றம் நானாட்டான் பிரதேச சபை தலைவர். பிரதேச சபை உறுப்பினர்கள். பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

**புதுக்குடியிருப்பு**

சிறுமி றெஜினாவின் கொலையைக் கண்டித்தும். போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தக் கோரியும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவர்களால் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

காலை பிரார்த்தனையின்போது றெஜினாவின் கொலைக்கு நீதி வேண்டியும், போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த கோரியும் கோசங்கள் எழுப்பப்பட்டன. உயர்தர மாணவர்களின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் கவனவீர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது.

புதுக்குடியிருப்பு நகர் மையத்திலிருந்து வீதியின் இருபுறமும் மாணவ. சிறுமி கொலைக்கு நீதி கேட்டும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த கோரியும் கோசங்கள் எழுப்பினர். புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து பாடசாலைவரை மாணவர்களின் கவனவீர்பு ஊர்வலம் சென்றது.

பெண் என்பவள் போதைப்பொருள்அல்ல. தொடருமா இந்த அவலம். கண்மூடியதா நல்லாட்சி. போதையில் ஆடும் கயவர்கள் ஒழிக்கப்படவேண்டியவர்கள்.அன்று வித்தியா இன்று றெஜினா.தொடரும் பள்ளிமாணவர்களின் வன்முறைக்கு முடிவில்லையா என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.

"யாழ்ப்பாணத்தில் றெஜினா என்ற மாணவ சிறுமியின் படுகொலையால் பாடசாலை சமூகம் துக்கத்துக்கு உள்ளாகியுள்ளது. சிறுமியின் கொலைக்கு நீதிவேண்டி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவர்களாகிய நாங்கள் குரல் கொடுகின்றோம்.

இவ்வாறான சம்பவங்களுக்கு போதைப் பொருள் பாவனையே முக்கிய காரணமாக அமைந்துள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சரியான நடவடிக்கை எடுக்காவிடின் பாடசாலை மாணவர்களின் வாழ்கை கேள்விக்குறியாகும். கூட்டரசு சரியான தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகின்றோம்." என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

(ந-ரி3.213.56)

## வேலைதேடும் பட்டதாரிகள் நேற்று முற்றுகைப் போராட்டம்


கண்டி, ஜீலை4

மத்திய மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் நேற்று கண்டி பல்லேகலை மத்திய மாகாண சபை கட்டட வாயிலை மறித்துப் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த வேலைதேடும் பட்டதாரிகளுக்கு உடனடியாக ஆசிரியர் நியமனம் பெற்றுத் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய மாகாண சபை மாதாந்த அமர்வு நடை பெற்றுக் கொண்டிருந்த வேளையே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எமக்குத் தீர்வு கிடைக்கும் வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் என ஆர்ப்பாட்டகாரர்கள் இதன் போது தெரிவித்தனர். (ந-ரி5)



# போருக்கு முன் இருந்த பாதுகாப்பு மீள உருவாக்கப்படுவது அவசியம்

### வடமாகாண சபை உறுப்பினர் பா.டெனீஸ்வரன் தெரிவிப்பு

மன்னார், ஜீலை4

போருக்கு முன்னர் எமது முன்னைய தலைவர்கள் இருந்தபோது எங்களுடைய சிறார்கள், பெண்களுக்கு இருந்த பாதுகாப்பு எவ்வளவு என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் அந்த பாதுகாப்பு இன்று இல்லை.

யாழ் மாவட்டத்தில் தொடர்ச்சியாக சிறுவர்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினர் பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.

சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் இடம் பெற்ற மாணவி றெஜினாவின் படுகொலையைக் கண்டித்தும் நாடு முழுதும் இடம் பெறும் பெண்கள் மற்றும் சிறுவர் மீதான வன்கொடுமைகளைக் கண்டித்தும் நேற்று மன்னார், முருங்கனில் அமைதி பேரணி இடம் பெற்றது.

பேரணி ஏற்பாட்டுக் குழுவினரினால் கோரிக்கை அடங்கிய மனு உரிய தரப்பினருக்கு கையளிக்கும் வகையில் வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பா.டெனிஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

மனுவைப் பெற்றுக்கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மாணவச் செல்வங்களை நாளைய தலைவர்களாக நல்ல முறையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற பொறுப்பு எம் எல்லோரிடமும் இருக்கின்றது.

குறிப்பாக பொது அமைப்பினர், பெற்றோர்கள் இந்த விடயங்களில் விழிப்புடன் இல்லை என்றால் இன்னும் எத்தனையோ சிறார்களை நாம் இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

போருக்கு முன்னர் எமது முன்னைய தலைவர்கள் இருந்தபோது எங்களுடைய சிறார்கள் மற்றும் பெண்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள், அவர்களுக்கு இருந்த பாதுகாப்பு எவ்வளவு என்பதை அனைவரும் அறிவோம். அனால் அந்த பாதுகாப்பு இன்று இல்லை.

கடந்த காலங்களில் தண்டனைகள் அதிகமாக இருந்ததால் குற்றச் செயல்கள் இடம் பெறவில்லை. நியாயமான தண்டனைகளுக்கு அப்பால் குற்றம் நிரூபிக்கப்படுமாக இருந்தால் குற்றவாளிக்கு அதி உச்ச தண்டனை வழங்கப்படவேண்டும். நீதித்துறை சுதந்திரமாக இயங்க வேண்டும்.

இவ்வாறான குற்றச் செயல்களுக்கு அதி உச்சத் தண்டனை வழங்கப்படுமாக இருந்தால் எமது பிள்ளைகளை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும். இவ்வாறான சம்பவங்களுக்கு விரைவாகத் தீர்ப்பு வழங்க வேண்டும்.

காலம் நீடித்து இழுத்தடிப்பு செய்யும் சந்தர்ப்பத்தில் இன்னும் எத்தனையோ சிறுவர்களையும்,பெண்களையும் பறிகொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

தற்போதைய கால கட்டத்தில் யாழில் கலாச்சார சீர் கேடுகள், சிறுவர்களின் உயிரிழப்புக்கள் நிகழ்வதற்கு வெளிநாடுகளில் உள்ள எங்களுடைய உறவுகள்தான் முக்கிய காரணம். தங்களுடைய சகோதரர்கள் மற்றும் உறவுகளுக்கு தேவைக்கு அதிகமாகப் பணம் அனுப்புகின்றார்கள். அவ்வாறான சம்பவங்களே இன்றைய கால கட்டத்தில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஒரு காரணமாகவும் அமைகிறது.

கலாசசாரத்தை பன்னாடுகளுக்கே எடுத்துக்காட்டிய வடமாகணம், அதுவும் யாழ். மாவட்டம் இன்று கலாசார சீரழிவின் உச்ச நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் நாங்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். என்றார்.

(ந.ரி2.56)

# எதற்குக் கூறினார் என்பதை விஜயகலாவே விளக்குவார்

## அமைச்சர் ஹரின் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 4**
**விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தோற்றம் பெற வேண்டும் என்று சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் விவகார அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கூறியதை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. அது தொடர்பில் அவரே உத்தியோகபூர்வ விளக்கத்தை வழங்குவார்.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.
ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கு மக்கள் தேசிய அரசைத் தோற்றுவிப்பதில் பெரும் ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். தற்போது நாட்டில் தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாடும் மேம்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது.
தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமாயின் விடுதலை புலிகளின் இயக்கம் மீண்டும் தலைத்தோங்க வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ள கருத்து நாட்டில் மாறு பட்ட கருத்துக்களை ஏற்படுத்தியுள்ளது.
இதனை எந்த நோக்கத்தில் குறிப்பிட்டார் என்று தெரியவில்லை. அது தொடர்பில் அவரே முறையான விளக்கத்தை வழங்குவார். அதன்பின்னரே அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஜனநாயக நாட்டில் கருத்து சுதந்திரம் அனைவருக்கும் காணப்படுகின்றது. அதை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்.
வடக்கு மாகாணம் தற்போது தனித்து அமைக்கப்பட்ட மாகாணமாக சர்வாதிகார போக்கில் செயற்பட்டு வருகின்றது என்று எதிர் தரப்பினர் கூறுகின்றனர். வடக்கில் பிரபாகரனையும் தெற்கில் ஹிட்லரையும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கம் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரு போதும் கிடையாது. பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி தூய்மையான நிர்வாகத்தையே ஐக்கிய தேசிய கட்சி முன்னெடுக்கின்றது. என்றார். (ற-61)

# கூட்டு எதிரணி, விஜயகலா கூறும் கருத்து ஒன்றேதான்

## அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4
கூட்டு எதிரணியினர் ஹிட்லர் வேண்டும் என கூறுவதைப் போன்றே இராஜாங்க அமைச்சர் விஜயகலா பிரபாகரன் வேண்டும் எனக் கேட்கின்றார். இருவரது கருத்துகளிலும் வித்தியாசம் இல்லை.
இவ்வாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.
வடக்கின் நிலைமைகளை பார்க்கையில் ஏற்பட்ட தாக்கத்தாலேயே அவ்வாறு கூறினேன் என்று என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது விஜயகலா தெரிவித்தார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.
நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் விடுதலைப்புலிகளை மீண்டும் உருவாக்க வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்ததை இந்த அரசு தனது கருத்தாக கூறுகின்றதா?. அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடா என்பதை கூற வேண்டும் என கேள்வி எழுப்பினார்.
அதற்குப் பதிலளித்தபோது அகிலவிராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கூறிய கருத்துக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்தோ அல்லது அரசின் கருத்தோ அல்ல. இது அவரது கருத்து மட்டுமேயாகும். அவர் முன்வைத்த கருத்தை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.
இந்த சம்பவத்தை அடுத்து நான் அவருடன் தொலைபேசியில் உரையாற்றினேன். வடக்கின் தற்போதைய நிலைமைகள் மற்றும் சூழலை பார்க்கையில் தன் மனதில் ஏற்பட்ட தாக்கமே தான் அவ்வாறு பேசக் காரணம் என தெரிவித்தார்.
இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் விடுதலைப்புலிகள் வேண்டும், பிரபாகரன் வேண்டும் என்று கூறுவதும், கூட்டு எதிரணியினர் ஹிட்லர் வேண்டும் என கூறுவதும் ஒரே கருத்துதான். இவர்கள் இருவரும் ஒரே நிலைப்பாட்டில் தான் உள்ளனர். ஆகவே மாற்றம் ஏதும் இல்லை. என்றார். அதையடுத்து சபையில் சர்ச்சை ஏற்பட்டது. (ற-61)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி ஜேர்மனில் போராட்டம்

வேள்ட்வின், ஜூலை4
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் 500 ஆவது நாளாக தொடரும் போராட்டத்துக்கு ஆதரவாக யேர்மன் தலைநகரத்தில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.




**இந்தப் போராட்டம் யேர்மன் தலைநகரத்தில் இடம்பெற்றது. கவனவீர்ப்பில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சில மக்களின் நிழற்படங்கள் உள்ளடக்கிய பதாதைகளைத் தாங்கியவாறு நீதி கோரினர். அத்தோடு போராட்டத்தில் கலந்துகொண்ட உயர்கல்வி மாணவர்களால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நீதிக்காக குரலெழுப் பப்பட்டது.**
**(ற-ரி5)**

## விஜயகலாவின் மீது இரு முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 4
தமிழீழ விடுதலை புலிகளை மீண்டும் உருவாக்க வேண்டும் என்பதே தமது முக்கிய நோக்கம் என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளதால் அவரை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இரு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் அலுவலகத்தில் இந்த முறைப்பாடு கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அது தொடர்பில் ஆராய்ந்து விரைவில் பொலிஸ் மா அதிபர் அடுத்தகட்ட நடவடிக்கையை எடுப்பார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர தெரிவித்தார்.
தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வண்ணம் சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்நடந்துகொண்டுள்ளதால் அவரை உடன் கைது செய்ய வேண்டும் என்று சிங்ஹல ராவய முறைப்பாடு செய்துள்ளது.
அரசியலமைப்பை மீறும், பயங்கரவாத தடைச் சட்டம், தண்டனை சட்டக் கோவை, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பிலான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் கீழ் தண்டனைக் குரிய குற்றத்தை இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் புரிந்துள்ளார் என்றும், அவரை உடன் கைது செய்ய வேண்டும் என்று உண்மையை கண்டறியும் அமைப்பு முறைப்பாடு செய்துள்ளது. (ற-71)

## தொற்றா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை4
தொற்றா நோய்களால் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
தொற்றா நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 9 ஆயிரத்து 500 நோயாளர்கள் தினமும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.
வருடந்தோறும் 3 மில்லியன் பேர் தொற்றா நோய்க்கு உள்ளாகின்றனர். தொற்றா நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
தொற்றாநோய் காரணமாக நாளாந்தம் 245 பேர் உயிரிழக்கின்றனர் என்று **தொற்றா நோய்ப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் திலக் சிறிவர்தன தெரிவித்துள்ளார்.**
(ற.ரி.4)

# எம்.பி. பதவியிலிருந்து கலாவை அகற்றுங்கள்

## கூட்டு எதிர்க்கட்சி வலியுறுத்துகின்றது

கொழும்பு, ஜூலை 4
இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தான் செய்துகொண்ட சத்தியப் பிரமாணத்தை மீறியுள்ளார். அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வகிக்கும் தார்மீகம் இல்லை. நீதிமன்ற நடவடிக்கைக்கு முன்னர் அரசு அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டு எதிர்க்கட்சி வலியுறுத்தியது.
கூட்டு எதிர்க்கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்டது. அதில் சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கருத்துத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது:
பொதுமக்கள் மயப்படுத்தப்பட்ட பொறுப்பொன்றை ஏற்கும்போது சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒற்றையாட்சி அரசுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். எமது நாட்டுக்குள் வேறு எந்தவொரு அரசும் அமைவதற்கு பேச்சளவிலும் செயற்பாட்டிலும் ஒத்துழைப்பு வழங்க முடியாது என்றும் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டியது கட்டாயமாகும். இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அந்த சத்தியப் பிரமாணத்தை மீறியுள்ளார்.
அவர் இது போன்ற கருத்துகளை இதற்கு முன்னரும் வெளியிட்டுள்ளார். நேற்று (நேற்று முன்தினம்) அவர் வெளியிட்டுள்ள கருத்து பயங்கரமானதாகும். அவர் கருத்து தெரிவிக்கும் போது குறித்த இடத்தில் அமைச்சரவை அமைச்சர்களான திலக் மாரப்பண மற்றும் வஜிர அபேவர்தனவும் அங்கிருந்துள்ளனர். அரசு ஏற்பாடுசெய்த உத்தியோகபூர்வ நிகழ்விலேயே அவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வைத்து முச்சக்கர வண்டியில் வெடிபொருள்கள் அண்மையில் சிக்கின. தமிழ் நாடு இராமநாதன் புரத்திலும் ஆயுதங்கள் சிக்கின. வடக்கில் கோவில் நிகழ்வொன்றின்போது ஈழத்துக்கான வரைபடம் ஏந்திச் செல்லப்பட்டுள்ளது. இப்படியான நிலையிலேயே இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் இந்த கருத்து தெரிவித்துள்ளார்.
**அவர் குறிப்பிடுவது போன்ற வேலைத்திட்டம் ஒன்று மீண்டும் படிப்படியாக அங்கு கட்டியெழுப்பப்பட்டு வருவது தெளிவாகிறது. 1976 ஆம் ஆண்டு** அல்பிரட் துரையப்பாவின் கொலையின் பின்னரே அங்கு நெருக்கடி நிலை ஆரம்பமானது. அந்த நிலை ஒரே தடவையில் பெருவளர்ச்சி காணவில்லை. படிப்படியாகவே வளர்ச்சி கண்டு வந்தது.
போரால் பயங்கரவாதத்தை நிறைவுசெய்து விட்டதாக எவராலும் திருப்திபட முடியாது. இந்தப் பிரச்சினை மீண்டும் ஏற்பாடாதெனத் திருப்திபடவும் முடியாது. நாட்டில் பலமில்லாத அரசே ஆட்சியில் உள்ளது. விஜயகலா மகேஸ்வரன் அவ்வாறான கருத்தை தெரிவித்த பின்னர் அவரால் தொடர்ந்தும் சட்டப்படி அமைச்சுக் கடமைளை முன்னெடுத்துச்செல்ல முடியாது. சகல விடயங்களுக்கும் நீதிமன்றம் செல்ல முடியாது. நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை உடனடியாக பெற்றுக் கொள்ள முடியாது. நீதிமன்றம் செல்ல முன்னர் அரசு விஜயகலாவுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளது?. அவருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசியலமைப்பினூடாக போதிய வழிவகைகள் உள்ளன.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆட்சியின் போது இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருப்பின் நடவடிக்கை எவ்வாறிருக்கும் என்பது குறித்து அனைவருக்கும் நன்கு தெரியும்.என்றார்.
செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கருத்துத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது
மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கும் பிள்ளைகளை சுதந்திரமாக பாடசாலைக்கு அனுப்புவதற்கும் மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்பு அதிகாரத்துக்கு வந்து தமது வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் எனக் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பொறுப்புக்கூற வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்தா இது எனவும் தெரிவிக்க வேண்டும்.
எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் சமஸ்டித் தீர்வு கோரி அஅதை அடைவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளனர். **ஆனால் மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்பை ஒருவாக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிடு கிறது.என்றார்.**
(ற-31)




# கடலோரப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் நீலப்பசுமை வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கடலோரப் பாதுகாப்புத் தொடர்பாக மயிலிட்டி மற்றும் தையிட்டிப்பிரிவுமக்களுக்கானவிழிப்புணர்வுநிகழ்வுதையிட்டிவடக்குஊறணிகனிஷ்டமகாவித்தியாலயமண்டபத்தில்கடந்தவெள்ளிக்கிழமை பிரதேசசெயலர் க.சிவசிறி தலைமையில் நடைபெற்றது. (9)




## கலந்துரையாடலும் பண்ணிசை நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரிக்கு இந்தியாவில் இருந்து வருகை தந்த பேராசிரியர் அனந்தராமன்; கல்லூரியின் சிவஞான வைரவர் ஆலயத்தில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதுடன். கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் மாணவர்களுடன் இணைந்து பண்ணிசை நிகழ்வு ஒன்றினையும்வழங்கியிருந்தார். (114)

## விளையாட்டுநிகழ்வு

யாழ்ப்பாணம்.ஜூலை 4

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வில் வலி. கிழக்கு கோப்பாய்பிரதேசஇளைஞர்களுக்கான நிகழ்வு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் கோப்பாய்ப் பிரதேச சம்மேளனத் தலைவர் செ.யசோதரன்தலைமையில்நடைபெற்றது.

இந்தநிகழ்வில்முதன்மைவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ்தேவானந்தாகலந்துகொண்டுவெற்றி பெற்றஇளையோருக்கு வெற்றிக்கேடயங்களை வழங்கினார். (113)



## கருத்தரங்கு

சாவகச்சேரி, ஜூலை 4

சாவகச்சேரிநகரசபையின் ஏற்பாட்டில் சபை உறுப்பினர்கள் மற்றும் நூலக அபிவிருத்திச் சபையினர் ஆகியோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நகரசபை பொன்விழா மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கருத்தரங்கில் 'இலத்திரனியல் நூலகமயமாக்கலின் முக்கியத்துவம் மற்றும் மாறிவரும் உலகியலில் நவீனநூலக அமைப்புவசதிகளும் தேவைப்பாடான சூழலும்' என்னும் தலைப்பில் இலங்கை நூலக சங்கத் தலைவர் சிறிகாந்தலட்சுமி அருளானந்தம் கருத்துரைகளை வழங்கவுள்ளார்எனத்தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# யாழ். மாவட்ட சந்தைகளில் பழுதடைந்த மீன் விற்பனை

### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை




யாழ்ப்பாணம், ஜூலை 4

**யாழ்ப்பாண மாவட்டத்தில் கடல் மீன் விற்பனை செய்யும் பல சந்தைகளில் குறைந்த விலையில்மீன்விற்பதாகக்கூறிபழையமீன்களையும் டைனமைட் வைத்து பிடிக்கப்பட்ட மீன்களையும் கலப்படம்செய்து விற்பனைஇடம்பொபெறுகின்றன என்று மக்கள் குற்றஞ்சாட்டி யுள்ளனர்.**

பண்ணை, நாவாந்துறை, குருநகர், பாசையூர், திருநெல்வேலி, குளப்பிட்டி, சுன்னாகம், காக்கைதீவு, அச்சுவேலி, கல்வியங்காடு, உள்ளிட்ட சந்தைகளில் இவை விற்பனை செய்யப்பட்டு வருவதுடன் வார நாள்களில் தொடர்ச்சியாக பழுதடைந்த மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் மீன்களும் விற்பனைசெய்யப்படுகிறன. மீனவர்கள் முதல்நாளில் விற்பனை செய்யப்பட்டுமிஞ்சுகின்றபழையமீன்களை புதிதாக இறக்குமதி செய்யும் மீன்களுடன்கலப்படம்செய்துவிற்பனை செய்வதனால்நுகர்வோர்பல்வேறு அசௌகரியங்ளுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளாகுகின்றனர்.

எனவே இது தொடர்பில் உரியவர்கள் கவனமெடுத்து, வாரத்தில் ஒரு தடவையேனும் மீன் சந்தைகளுக்குச் சென்று பரிசோதனைசெய்து நுகர்வோரின்அசௌகரியங்களுக்கு தீர்வு பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-26)

## குடமுழுக்கு

வடமராட்சி, ஜூலை 4

வடமராட்சிஅல்வாய்வேவிலந்தைசிறிமுத்துமாரிஅம்மன் கோவில் குட முழுக்கு நாளை வியாழக்கிழமை காலை 8.57 மணிதொடக்கம் 11 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமைகாலை0.30 மணிக்கு ஆரம்பித்தது. இன்று புதன்கிழமை மாலை4மணிவரைஇடம் பெறும். (173)

## ஞானச்சுடர் சஞ்சிகையின் இதழ் வெளியீடு

வடமராட்சி, ஜூலை 4

தொண்டைமானாறுசந்நிதியான்ஆச்சிரமசைவகலை பண்பாட்டுப்பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீகசஞ்சிகையின் ஆனி மாத இதழ் வெளியீட்டுநிகழ்வுநாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆச்சிரமப் பொறுப்பாளர்செ.மோகனதாஸ்சுவாமிகள்தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வெளியீட்டுரையை எஸ்.தியாகராஜா சர்மாவும்(நீர்வைமணி) மதிப்பீட்டுரையை இளைப்பாறியஆசிரியர்தி.நவரத்தினமும் நிகழ்த்து வார்கள். இந்தச்சஞ்சிகை246ஆவது இதழாகும். (எ-173)

# வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல்

*தாயும் மகளும் மருத்துவமனையில்*

வீட்டுக்குள்அத்துமீறிஉள்நுழைந்தோரால்தாக்கப்பட்டதாகக்கூறி தாயும் மகளும் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம் மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

வளவுக்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் தம்மை மோசமாகத் தாக்கிக்காயப்படுத்திவிட்டுதப்பியோடியுள்ளனர்எனவும்,தாக்கப்பட்டதில் தமக்குகாயங்கள்ஏற்பட்டுள்ளதால்சாவகச்சேரிபொலிஸ்நிலையத்தில்முறைப்பாடுசெய்தபின்னர்மருத்துவமனைக்குவந்ததாகவும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## கைகலப்பில் ஈடுபட்டனர்: 7 பேர் கைதாகிப் பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 4

சிறுப்பிட்டியில்கைகலப்பில்ஈடுபட்டகுற்றச்சாட்டில்7பேர்கைதுசெய்யப்பட்டனர். அவர்கள்விசாரணையின்பின்னர்மல்லாகம்நீதிமன்றில்முற்படுத்தப்பட்டனர். பிணையில் விடுவிக்கப்பட்ட அவர்கள் மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இறப்பு வீட்டுக்குச் சென்று திரும்பிய இரண்டு குழுவினரிடையே ஏற்பட்ட முரண்பாடே கைகலப்பாகியது. அவர்கள் தாவடி, கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று அச்சுவேலிப் பொலிஸார்தெரிவித்தனர். (4,26)

## புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூலை 4

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இந்த வருடம் ஐந்தாம் தரப்புலமைப்பரிசில்பரீட்சைக்குத்தோற்றவுள்ளமாணவர்களுக்கான இலவசசிறப்புப்பயிற்சிக்கருத்தரங்குநாளைமறுதினம்வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்குசாவகச்சேரிசிவன்கோவில்சாலையில்உள்ள தென்மராட்சி கலைமன்றக் கலாசார மண்டபம் மற்றும் சாவகச்சேரி மகளிர்கல்லூரி ஆகிய இடங்களில்; நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கியின் கொடிகாமம் கிளையின் முகாமையாளர் சி.மோகனச்செல்வன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் கலந்து கொள்ளவுள்ளார்.

கருத்தரங்கின் வளவாளர்களாக க.தவயோகராசா, பா.சந்திரமோகன் ந.மகிழ் ராஜன், எஸ்.நந்தகோபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-9)






காரை. பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில்

# போதைக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி

**யாழ்ப்பாணம், ஜூலை 4**

**போதைப்பொருள் தடுப்பு தேசிய வாரத்தை முன்னிட்டு காரைநகர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.**

யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேச செயலகத்தில் இருந்து, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமார் தலைமையில் ஆரம்பமான பேரணி காரைநகர் கதிர்வேலாயுதசுவாமி ஆலயம் வரை சென்று முடிவடைந்தது. பேரணியில், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், காரைநகர் தொழிற் பயிற்சி நிலைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். கலந்துகொண்டவர்கள் போதைக்கு எதிரான கோஷங்கள் எழுதப்பட்ட சுலோகங்களைத் தாங்கியிருந்தனர். பேரணி முடிவில், கதிர்வேலாயுதசுவாமி ஆலய வளாகத்தில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. இதில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ. சிவகுமார், போதைப்பொருள் தடுப்புக்குழுவின் வளவாளரான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.பாஸ்கரகுரு, ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் உபாலி, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ச.கருணாநிதி ஆகியோர் உரையாற்றினர். (எ)

*யாழ்ப்பாணப் பல்கலை*

## விஞ்ஞான பீடத்தின் பன்னாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி மாநாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் முதலாவது பன்னாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி மாநாடு பல்கலையில் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
பேராசிரியர் சி.குகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள மாநாட்டில் முதன்மை விருந்தினராக விஞ்ஞானத் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி மற்றும் கண்டி ,மரபுரிமைகள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவும் மதிப்புறு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர். மாநாட்டில் கலாநிதி எல்.வீரகுமாரி, பேராசிரியர் எஸ்.சோதீஸ்வரன், கலாநிதி எம்.பர்வதம், மற்றும் பி.சயந்தன் ஆகியோர் ஆதாரச்சுருதி உரையாற்றவுள்ளனர். பன்னாட்டு ஆய்வாளர்கள் தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்பிக்கவுள்ளனர். (எ)

## ஆசிரியரைத் தாக்கிய இருவருக்கும் பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 4
கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒரு மாதமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஒழுக்கக் கட்டுப்பாட்டுப் பொறுப்பாசிரியரும் உயர்தரக் கணித பாட ஆசிரியருமான நா.பிரதீபன் கடந்த 6ஆம் திகதி பாடசாலைக்கு அண்மையாக வைத்துத் தாக்கப்பட்டார். சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண நீதிவான் மன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். "வழக்கில் முன்னேற்றகரமான நடவடிக்கைகளைப் பொலிஸார் எடுக்கவில்லை" என்று தெரிவித்த நீதிமன்று நேற்றுமுன்தினம் இருவரையும் பிணையில் விடுவித்தது. (4)

## பிடியாணையிலுள்ளவரை பொலிஸார் தாக்கினரா?

*வாக்குமூலம் பெற உத்தரவு*

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாண நீதிமன்றுக்கு வழக்குத் தவணைக்கு வந்த சந்தேகநபரை நீதிமன்ற வாயிலில் வைத்துப் பொலிஸார் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தாக்கப்பட்டவருக்கு மற்றொரு வழக்கில் மன்றின் பிடியாணை உள்ளது. இந்தநிலையில், நீதிமன்ற இடைவேளையின்போது அவரைப் பொலிஸார் பிடித்துள்ளனர். பின்னர் பொலிஸார் கன்னத்தில் அடித்தனர் என்றும் அதனைத் தொடர்ந்து சந்தேகநபர் தப்பியோடிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. பொலிஸாரின் அச்சுறுத்தலால் வழக்கு தவணைக்கு மன்றில் முற்படாமல் அவர் தப்பித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அதனை ஆராய்ந்த நீதிவான் சந்தேகநபரின் வாக்குமூலத்தைப் பெற்று விசாரிக்குமாறு உத்தரவிட்டார். (4)

## தவறான முடிவெடுத்து இளம்பெண் உயிரிழப்பு

தென்மராட்சி, ஜூலை 4
பதிவுத் திருமணம் நடைபெற்ற ஒரு வாரத்தில் இளம்பெண் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார். என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. இதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் தனுசிகா (வயது 29) என்பவரே சாவடைந்தவராவார்.
இளம்பெண்ணின் சாவு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேசதிடீர் இறப்பு விசாரணை அதிகாரி மூலம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
"அக்காவின் முழுமையான சம்மதத்துடன் மன்னாரில் திருமணம் பேசி கடந்த 26ஆம் திகதி பதிவுத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ள வேளையில் தவறான முடிவெடுத்துள்ளார்.
சிறிது காலமாகத் தனித்திருக்கும் வேளையில் தனியாகக் கதைக்கும் பழக்கம் அக்காவுக்கு இருந்தது. அதற்காக மனநோய்ச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றும் வருகிறார்" என்று குறித்த பெண்ணின் சகோதரர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (எ-9)

## சடலத்தை பொறுப்பேற்கவும்

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள அடையாளம் காணப்படாத சடலத்தை உரித்துடையவர்கள் 7 நாள்களுக்குள் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவமனையின் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.
6ஆம் வட்டாரம், மண்டைதீவு பிள்ளையார் கோயில் மடத்தில் தூக்கிட்டு இறந்தவரான 411/70, பம்பலப்பிட்டி, கொழும்பு 04 எனும் முகவரியைக் கொண்ட ய. ஜசரட்ன மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலமானது உறவினர் எவரும் உரிமை கோரப்படாத நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் தீவகப் பிரதேச மரண விசாரணை அதிகாரியால் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டது.
(எ-159)

## புல்லாவெளி செபஸ்தியார் ஆலய திருநாள்

வடமராட்சி, ஜூலை 4
வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி புல்லாவெளி புனித செபஸ்தியார் தேவாலயப் பெருநாள் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 7ஆம் திகதி இரவு பெருந் திருவிழாவாக நடைபெற்று 8ஆம் திகதி காலை திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.
பயணிகளின் நலன்கருதி தனியார் சிற்றூர்திச் சங்கம் இலங்கைப் போக்குவரத்து சபையின் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. அத்துடன் அந்தப் பகுதியில் யாத்திரிகர்களாக வந்துள்ள பக்தர்களின் நலன்கருதி வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம் இந்தக் காலப் பகுதியில் பொருள்கள் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது. திருநாளுக்கான சுகாதாரவசதிகள், குடிதண்ணீர்வசதிகள், பாதுகாப்புவசதிகள் அனைத்தையும் வடமராட்சி கிக்கு பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (எ-160)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 4
மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு பாடசாலை முதன்மை மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் எஸ். இந்திரகுமார் தலைமையில்
இன்று புதன் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (எ-70)

## மணவாளக்கோல குடமுழுக்கு

வடமராட்சி, ஜூலை 4
வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் ஆழியவளை சிறி வெட்டுமுருகன் ஆலயத்தின் மணவாளக் கோல குடமுழுக்கு இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.
மதியம் மகேஸ்வர பூசையும் அதனைத் தொடர்ந்து மாலை வீதி உலாவும்.
இரவு கலைநிகழ்வுகளும் இடம் பெறும்.
(எ-70)

## உதவி பொருள்கள் வழங்கல்

தென்மராட்சி, ஜூலை 4
தென்மராட்சிப் பிரதேசத்தில் வாழும் நடக்க முடியாத 22 மாற்றுத் திறனாளிகளுக்கு இயற்கைக் கடன் கழிக்கக்கூடிய வகையிலான நாற்காலியும் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டு எழுந்து நடமாட முடியாத இருவருக்கு கழிப்பறை வசதியுடன் கூடிய மெத்தைகளும் நேற்று வழங்கப்பட்டுள்ளன.
வேள்ட் விஷன் லங்கா நிறவனத்தினரால் வழங்கப்பட்ட உபகரணங்கள் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு நேரடியாகக் கொண்டு சென்று வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
(எ-9)

## புலி...

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்துத் தொடர்பிலான விசாரணைகள் நிறைவடையும் வரை அவரை இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து தற்காலிகமாக நீக்குவதற்கே ரணில் விக்கிரமசிங்க நேற்று இரவு மைத்திரிபால சிறிசேனவிடம் பரிந்துரைத்துள்ளார்.

அதேவேளை இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்தில் அரசமைப்போ அல்லது தற்போதைய சட்டமோ மீறப்பட்டிருக்குமாயின் அது குறித்து ஆராய்ந்து உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபருக்கு சபாநாயகர் அறிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் என விஜயகலா மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் கருத்து வெளியிட்டிருந்தார். அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து, இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டார் என்று சபாநாயகர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கருத்து வெளியிட்ட சபாநாயகர் கரு ஜயசூரிய, விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படும் எனத் தலைமை அமைச்சர் ரணில் தமக்கு அறிவித்துள்ளார் என்று தெரிவித்திருந்தார். விஜயகலா மகேஸ்வரன் தொடர்பில் தாம் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் சபாநாயகர் குறிப்பிட்டிருந்தார். இந்தப் பின்னணியிலேயே நேற்று இரவு விஜயகலாவை தற்காலிகமாக இராஜாங்க அமைச்சு பதவில் இருந்து நீக்கக் கோரியுள்ளார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. (ற-21)

## வீதியைக்...

ளார். பாதசாரிகள் கடவையால் சிறுமி வீதியைக் கடந்தபோது ஹைஏஸ் வாகனம் மோதியே விபத்து நடந்துள்ளது.

கிளிநொச்சி, உமையாள் புரம் பகுதியில் நேற்றுக் காலை இந்த விபத்து நடந்துள்ளது. கிளிநொச்சி, பரந்தன் உமையாள்புரத்தைச் சேர்ந்த ராஜ்குமார் யதுர்சா என்ற மாணவியே உயிரிழந்தார்.

தாயுடன் துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்குச் சென்றார் யதுர்சா. பாடசாலைக்கருகில் உள்ள பாதசாரிகள் கடவையருகில் தாயாரால் அவர் துவிச்சக்கர வண்டியில் இருந்து இறக்கிவிடப்பட்டார். தாய் அங்கிருந்து வீடு திரும்பியுள்ளார். வீதிக்கருகில் காத்திருந்த மாணவி யதுர்சா பாதசாரிகள் கடவையைக் கடக்க முனைந்தார். அப்போது கிளிநொச்சியிலிருந்து ஏ-9 வீதிவழியாக யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக வந்த ஹைஏஸ் ரக வாகனம் யதுர்சாவை மோதியது. விபத்தை அறிந்த சாரதி வாகத்தை நிறுத்தினார். அந்த வாகனத்திலேயே மாணவி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் சிறுமி உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். கிளிநொச்சிப் பொலிஸார் சாரதியைக் கைது செய்தனர். வாகனத்தையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தனர். உயிரிழந்த மாணவி யதுர்சா குடும்பத்தில் ஒரேயொரு பெண் பிள்ளை என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-21,6,159)

## சிறுத்தை...

கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சியில் சிறுத்தை ஒன்று அடித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் சரணடைந்தும், கைது செய்யப்பட்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 10 பேருக்கும் மறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. நாளை வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்துக்குள் புகுந்த சிறுத்தை அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் அடித்துக் கொல்லப்பட்டது. அது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

சிறுத்தை கொலை செய்யப்பட்டதன் பின்னர் அதனைத் துன்புறுத்தி ஒளிப்படங்கள் எடுத்துக் கொண்டவர்களுக்கு எதிராகவே அந்த வழக்குத் தொடுக்கப்பட்டது. அதற்கான ஆதாரங்களை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் இறுவட்டு மூலம் மன்றில் சமர்ப்பித்தனர். ஒளிப்படத்தில் உள்ளவர்கள் அனைவரையும் கைது செய்யுமாறு மன்று பொலிஸாருக்குப் பணித்தது.

நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார் இருவரைக் கைது செய்திருந்தனர். நால்வர் பொலிஸ் நிலைவயத்தில் சரணடைந்தனர். அவர்கள் ஆறு பேரும் கடந்த 29ஆம் திகதி மன்றில் முற்படுத்தப்பட்டனர். அதன்பின்னர் நான்கு பேர் பொலிஸாரிடம் சரணடைந்தனர். அவர்கள் 10 பேரும் கடந்த 29ஆம்அதிகதி மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது. நேற்று வழக்கு மீள எடுத்துக் கொள்ளப்பட்டபோது 10 பேரையும் நாளைவரை விளக்கமறிலில்வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (ற-21,214,6, 35)

# முல்லைத்தீவில் காணி அபகரிப்பு; மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தம்

## தொல்பொருள் திணைக்களத்துக்குரியது எனக் கூறி அளக்க முற்பட்டதால் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு, செம்மலைப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களைக் கையகப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சி மக்களின் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டது.

தொல்பொருள் திணைக் களத்துக்கு உரியது என்று தெரிவித்து நில அளவைத் திணைக்களத்தினர் நேற்று அந்தப் பிரதேசத்தில் அளவீட்டு நட வடிக்கைகளை முன்னெடுக்க முனைந்தனர்.

இதை அறிந்த பிரதேச மக்கள் அங்கு கூடிக் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், வடக்கு விவசாய அமைச்சர் க.சிவநேசன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோரும் அங்கு சென்றனர்.

அளவீட்டுப் பணிகளை நிறுத்த வேண்டும் என்று மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் வலியுறுத்தினர். அளவீட்டுப் பணிகளுக்கான வந்திருந்த அதிகாரிகளுடன் தர்க்கப்பட்டனர். அதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் என்ற ரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் அளவீட்டுப் பணியை நிறுத்துமாறு கடிதம் வழங்கினார்.

ஒருங்கிணைப்புக் குழுவில் இது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்வரை அளவீட்டுப் பணிகளை இடைநிறுத்துமாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதையடுத்து அதிகாரிகள் தமது அளவீட்டுப் பணிகளை இடைநிறுத்தித் திரும்பினர் என்று தெரிவித்தனர்.

(ற-8-ரி3)

## புலிகள்...

திரட்டப்பட்ட நிதி அங்குள்ள வங்கிகளில் முடங்கியுள்ளன. அவற்றைக் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களின் வறுமையைப் போக்குங்கள். இவ்வாறு உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இமானுவேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஆயர் இல்லத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் ஈழ விடுதலைப் போராட்டம் 2009ஆம் ஆண்டுடன் மௌனிக்கப்பட்டு விட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இறந்துவிட்டார்.

ஈழப் போராட்டத்துக்காகப் புலிகள் புலம்பெயர் நாடுகளில் தொடர்புகளைப் பேணி நிதிகளைச் சேகரித்திருந்தனர். போராட்டம் முடிந்துள்ள நிலையில் அவை இன்று வெளிநாட்டு வங்கிகளில் முடங்கிக் கிடக்கின்றன.

போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் போராளிகளும், வன்னிப் பிரதேச மக்களும் இன்றும் வறுமையுடனேயே வாழ்கின்றனர். அவர்களின் வறுமையைப் போக்க அந்த நிதியைச் சரியாகப் பயன்படுத்தி தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்.

**அரசியல்வாதி இல்லை**

நான் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளேன் என்று சில இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதில் உண்மை இல்லை.

தற்போதைய மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் என்னை அண்மையில் நேரில் சந்தித்த போது நீங்கள்தானம் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் எனக் கூறப்படுகின்றது என என்னிடம் கூறினார். அதற்கு நான் அரசியல்வாதி அல்ல. அவ்வாறான எண்ணமும் நோக்கமும் எனக்கில்லை என அவரிடம் தெரிவித்திருந்தேன்.

நான் மக்களுக்குப் பொதுச் சேவையையே செய்ய விரும்புகின்றேன். நான் அரசியல்வாதி அல்ல. அரசியலுக்கு வந்துள்ள புதுமுகங்கள் தாம் ஆற்ற வேண்டிய பணிகளை மறந்து அடுத்த தேர்தலிலும் பதவியில் இருக்க வேண்டும் என்ற சிந்தையிலே இருக்கின்றன தவிர மக்களுக்கு எதையும் செய்வதாக இல்லை.

**இணைய வேண்டும்**

தமிழ் மக்களுக்காகப் பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அவர்கள் ஒவ்வொரு திசையிலும் பிரிந்து நிற்கின்றனர். அதிக கட்சிகள் இருப்பதால் என்னவோ எமக்குள் பல பிளவுகள் காணப்படுகின்றன. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பலமான சக்தியாகச் செயற்பட வேண்டும் - என்றார். (ற-8)

## கல்வித்துறையினர்...

கல்வியைப் பாதுகாக்கும் தமது கோரிக்கைக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று அந்தத் தொழிற்சங்கங்கள் கோரிக்கைவிடுத்துள்ளன.

அதேவேளை வழமைபோன்று பாடசாலைகள் இடம்பெறும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரசியல் தலையீடு காரணமாக தராதரமற்றோரைக் கல்வித் துறைக்குள் உட்புகுத்த எடுக்கப்படும் நடவடிக்கை மிகப்பாரதூரமானது. தராதரமற்றோர் கல்வித் துறைக்குள் வந்தால் கல்வித் தரம் மேலும் பின்னோக்கித் தள்ளப்பட்டுவிடும். அதற்கு இடமளிக்க முடியாது என்று கூறி நிர்வாக அதிகாரிகள் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட 16 தொழிற் சங்கங்கள் இன்றைய போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

"தராதரமற்றோரைக் கல்வித்துறைக்குள் நியமிக்க வேண்டாம் என்பது பற்றி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்றுப் பேசியபோதும் அது வெற்றியளிக்கவில்லை. நியமனம் வழங்குவதற்காக நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடையாதவர்களை எப்படி கல்வித் துறைக்குள் நியமிப்பது?. சாதாரண தராதரம்கூட இல்லாமல் அவர்களைக் கல்வித் துறைக்குள் எப்படி உள்வாங்கலாம்?. இது தவறு என்று கல்வி அமைச்சரிடம் எடுத்துக் கூறினால், தாம் தெரிவு செய்தது சரி என்று கூறித் தராதரமற்றோரை நியமிக்க முற்படுகின்றனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராடுகிறோம். பெற்றோர் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள வடக்கிலிருந்தும் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பலர் நேற்றிரவு கொழும்புக்குப் பயணமாகினர் என்று நிர்வாக அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். (ற-4)

## மனம்...

னெடுக்கும் அவரை ஏற்றுகொள்ளக் கூடாது. இவ்வாறு நாடாளுமன்றில் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார்.

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் புலிகளைப் பலப்படுத்த வேண்டும் என்று கூறிய கருத்தால் நேற்று நாடாமன்றத்தில் கடும் சர்ச்சை எழுந்தது. நேற்று ஒரு மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட நாடாளுமன்ற அமர்வுகள் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசமிடம் கல்வி சார்ந்த கேள்விகளை வினவிக்கொண்டு இருந்த நிலையில் திடீரென விஜயகலா மகேஸ்வரன் தொடர்பில் கேள்வி எழுப்பி சர்ச்சையை உருவாக்கினர். அதற்குப் பதில் தெரிவித்த அமைச்சர் அகிலவிராஜ், அவர் இருந்த மனநிலையில் அவ்வாறான கருத்தை முன்வைத்து விட்டார் என விளக்கம் கொடுத்தார்.

அதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் விஜயகலாவுக்கு மனநிலை சரியில்லை என்றால் அவரை அங்கொடை மனநோயாளர் வைத்தியசாலையில் அனுமதியுங்கள் என கோசம் எழுப்பினார். அதைத் தொடர்ந்து கூட்டு எதிரணி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கடும் சர்ச்சையை ஏற்படுத்தி சபையில் ஒத்திவைக்கும் வரையில் சபாநாயகருடன் முரண்பட்டனர்.

உடனடியாக விஜயகலாவை வரவழைத்து காரணிகளை கேட்கக் கோரினர். அதற்குப் பதிலளித்த சபாநாயகர், தான் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை வரவழைத்து அவர் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பாக விளக்கம் கோர நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ற-31)

## 65 தமிழ்க்...

குடியேறினர் என்று தெரிவிக்கப்பட்டு 65 தமிழ்க் குடும்பங்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் சாவகச்சேரி நீதிமன்றில் தனித்தனியாக நேற்று வழக்குகள் தாக்கல் செய்துள்ளார்.

ஐந்து வருடங்களுக்கு மேலாக நாவற்குழியில் உள்ள படைமுகாமை அண்டியுள்ள வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான பகுதியில் 65 தமிழ்க் குடும்பங்கள் குடியேறி வசிக்கின்றனர். அவர்களுக்கு எதிராகவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

காணிகளில் இருந்து வெளியேறுமாறு அறிவுத்தி அந்தக் குடும்பங்களுக்கு கடந்த மே 28ஆம் திகதி பதிவுத் தபால் அனுப்பப்பட்டது. வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட காலக்கெடுவுக்குள் 65 குடும்பங்களும் வெளியேறாததால் நீதிமன்றின் உதவியை வீடமைப்பு அதிகார சபை நாடியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21,9)

# நிதி பெறவேயில்லை என்றால் சத்தியக்கடதாசி கொடுங்கள்

## அமைச்சர் நவீன் திசநாயக்க சவால்

கொழும்பு, ஜூலை 4

2015 இல் அரச தலைவர் தேர்தல் பரப்புரைக்குச் சீனாவிடமிருந்து நிதியைப் பெறவில்லை என்று, மகிந்த ராஜபக்ச சத்தியக்கடதாசியைச் சமர்ப்பிக்கத் தயாரா? என்று சவால் விடுத்துள்ளார் பெருந்தோட்டத் துறை அமைச்சர் நவீன் திசநாயக்க.



நியூயோர்க் ரைம்ஸ் அண்மையில் வெளியிட்டிருந்த கட்டுரை ஒன்றில், அரசதலைவர் தேர்தலின்போது, சீன நிறுவனம் ஒன்றின் கணக்கில் இருந்து, 7.6 மில்லியன் டொலர் நிதி, மகிந்த ராஜபக்சவுக்குத் தேர்தல் பரப்புரைக்காக வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது. இதனைச் சீனாவும், மகிந்த ராஜபக்சவும் மறுத்திருக்கின்ற நிலையிலேயே அமைச்சர் நவீன் திசநாயக்க இந்தச் சவாலை விடுத்திருக்கிறார்.

"மகிந்தவுக்கு எதற்காக, சீன நிறுவனம் இந்தளவு பெருந்தொகையான நிதியைக் கொடுக்க வேண்டும்? அவ்வாறு நாங்கள் நிதி பெறவில்லை. அப்படியானால், முன்னர் பிரிட்டன் ஆட்சியில் இருந்த எமது நாடு இப்போது சீன ஆட்சியின் கீழா இருக்கிறது? மகிந்த ராஜபக்சவின் மீது நாங்கள் எந்தத் தவறையும் கூறவிரும்பவில்லை. அவர் நாட்டுக்காகப் பணியாற்றினார். போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். எனவே, இந்த நிதியை நீங்கள் பெறவில்லை என்றால் ஒரு சத்தியக் கடதாசியைச் சமர்ப்பியுங்கள். அப்போதுதான் உங்களை நம்புவோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

---

### வடக்கு மாகாணத்தில்

# சட்டம், ஒழுங்கு சீர்கேடாக இருக்கக் காரணம் கூட்டமைப்பும் மாகாண உறுப்பினர்களுமே!

## அட்மிரல் சரத்வீரசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 4

வடக்கில் சட்ட ஒழுங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வடக்கு மகாண சபை உறுப்பினர்களுமே தடையாக உள்ளனர் என்று அட்மிரல் சரத்வீரசேகர தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் மீண்டும் தழைத்தோங்க வேண்டும், அப்போதே தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ முடியும் என்று சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் விவகார அமைச்சர் விஜயகலா மகேஷ்வரன் குறிப்பிட்டுள்ளமை வன்மையாகக் கண்டிக்கத்தக்க விடயம்.

வடக்கில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாகச் சிறுவர் துஷ்பிரயோகங்களும் வன்கொடுமைகளும்நாளாந்தம் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன. மகளிர் விவகாரம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் இந்தப் பிரதேசங்களில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இவ்வாறான நிலமைகள் ஒருபோதும் தோற்றம் பெற்றிருக்காது.

தெற்கில் நடைமுறையில்உள்ளசட்டஒழுங்கு வடக்கில் நடைமுறைப்படுத்த முடியாமைக்கு முதன்மைக் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வடக்கு மகாண சபை உறுப்பினர்களுமே.

இவ்வாறான அரசியல்வாதிகள் என்ன நோக்கத்துடன் செயற்படுகின்றார்கள் என்பது குறித்துஎவரும்ஊகிக்க முடியாத நிலைப்பாடே காணப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு அவர்களது உரிமைகளைத் தருவதாகக் குறிப்பிட்டு அவர்களைத் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாக்கியே வருகின்றனர்-என்றார். (4)

---

### பிறை சர்ச்சையை தவிர்க்க வேண்டும்

அமைச்சர் ஹலீம் கோரிக்கை

சமூகத்தின் ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் பிறை சர்ச்சையைத் தவிர்க்க வேண்டும் என்று முஸ்லிம் சமய கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் கோரியுள்ளார்.

முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் நியமித்த பிறை விவகார ஆலோசனைக் குழுக்கூட்டம் முஸ்லிம் சமயம் கலாசார அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தலைமையில் முஸ்லிம் சமயம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின்போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மூன்று அமைப்பினரும் ஒன்றிணைந்து சமூகத்தின் ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் பிறை சர்ச்சையைத் தவிர்க்கும் வகையில் ஒரு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும் என்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதோடு இதற்கான அடுத்த ஆலோசனைக் கூட்டம் வெகு விரைவில் நடத்தப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (4)

---

# வரி விலக்குடன் உலகக் குப்பையை இறக்குமதி செய்ய அரசு திட்டம்

சிங்கப்பூர் நாட்டுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மூலம் உலக நாடுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை வரி விலக்குடன் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின்படி உலக நாடுகளிலுள்ள குப்பைகளை வரி விலக்குடன் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. சுகாதாரக் கழிவுகள், நகரக்கழிவுகள், மருத்துவமனை இரசாயனக்கழிவுகள் இதில் அடங்கும். அதன் மூலம் மின்சாரம் வழங்கல் மற்றும் வேறு சேவைகளுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை நாடாளுமன்றை ஏமாற்றும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது - என்றார். (4)

---



# 95 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள், பணம் திருட்டு

## அநுராதபுரத்தில் அரச வங்கியில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 4

அநுராதபுரம் தலாவ பகுதியிலுள்ள அரச வங்கியில் 95 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதெனிய அநுராதபுரம் முதன்மை வீதியில் தலாவ பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 750 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்த வங்கியில் கொள்ளையடிக்கப்பட்டமையை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் காலை வேளையிலேயே அறிந்துகொண்டனர்.

கொள்ளைச் சம்பவம் கடந்த சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இரும்பு வெட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவியொன்றைப் பயன்படுத்தி வங்கியின் பின்புற நுழைவாயிலை உடைத்து உள்ளே நுழைந்த கொள்ளையர்கள் மூன்றுபெட்டகங்களை உடைத்துள்ளனர். வங்கிக் கட்டடத்துக்குப் பின்புறமாகவுள்ள தனியார் காணி ஊடாகவும் சந்தேகநபர்கள் தப்பிச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது வீதிகளிலும் நேற்றுமுன்தினம் பொலிஸார் மோப்ப நாய்களை ஈடுபடுத்தித் தேடுதல் நடத்தினர்.

"இந்த வங்கியின் பாதுகாப்புக் கட்டமைப்பிலுள்ளநவீனதொழில்நுட்பம் மற்றும் சென்சர் கமராக் கட்டமைப்பைக் கொண்டே வார இறுதி நாள்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விடுமுறைநாள்களில் பாதுகாப்பு அதிகாரிகள் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதில்லை. விசாரணைகளை அடுத்தே இவர்கள் பயன்படுத்திய தொழில்நுட்பத்தைக் கண்டறிய முடியும். பின்னர் நாம் வங்கியின் பாதுகாப்புக் கட்டமைப்பை மேலும் பலப்படுத்த முடியும்" என்று இலங்கைவங்கி ஊழியர் சங்கத்தின் செயலர் உதய இமல்ஷான் தெரிவித்தார்.

அதிநவீன பாதுகாப்புக் கமரா மற்றும் ஒலிக் கட்டமைப்பு பொருத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட நிலையில், வீதிக் கருகிலுள்ள வங்கிக்குள் நுழைவதற்கான இயலுமை கொள்ளையர்களுக்கு எவ்வாறு கிட்டியது என்பதே மக்களிடம் எழுந்துள்ள கேள்வி என்று அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, பத்தர முல்லை-கொஸ்வத்துப் பகுதியிலுள்ள வர்த்தகரொருவரின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் 5 இலட்சம் ரூபா பணத்தையும் தங்கஆபரணங்களையும் கொள்ளையிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். துப்பாக்கிமுனையில் கொள்ளையிட்டுள்ள சந்தேகநபர்கள், அதிசொகுசு காரொன்றில் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பயன்படுத்திய கார் நேற்று முன்தினம் அதிகாலை கண்டுபிடிக்கப்பட்டது. சம்பவத்துடன் சந்தேகநபர்கள் நால்வர் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (4)

---

# ஏறாவூர் நகரசபைச் செயலர் கல்முனை ஆணையாளரானர்

## போராட்டங்களையடுத்து இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 4

ஏறாவூர் நகர சபைச் செயலராகச் சொற்ப காலம் கடமையாற்றிவந்த எம்.ஐ.பிர்னாஸ், உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் கல்முனை மாநகர சபையின் ஆணையாளராக நேற்றுமுன்தினம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண தலைமைச் செயலர் டி.எம்.எஸ். அபயகுணவர்தன இது தொடர்பில் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

தமது கொடுப்பனவுகள் வழங்கப்படாததைக் கண்டித்து ஏறாவூர் நகர சபையின் அனைத்துச் சுகாதார தொழிலாளர்கள், வேலையாள்கள் மற்றும் சாரதிகள் கடந்த மாதம் 30ஆம் திகதியும் 26ஆம் திகதியும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஏறாவூர் நகர சபையின் செயலர் தவறான அணுகுமுறையைக் கொண்டவர் என்று அவர்கள் குற்றஞ்சாட்டி அதனைக் கண்டித்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அமைய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் உரிய காலப்பகுதியில் வழங்கப்படாமை, சீருடைகள் விநியோகிக்கப்படாமை, பத்து மாதகால இடர்கடன் வழங்கப்படாமை மற்றும் செயலரும் நிதியுதவியாளரும் ஊழியர்களுடன் கடுமையாக நடந்துகொள்வதோடு தகாத வார்த்தைப்பிரயோகம் செய்தல் போன்ற பல்வேறு விடயங்களைத் தாங்கள் அனுபவித்து வருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் தெரிவித்திருந்தனர். இது குறித்து மாகாண ஆளுநரிடமும் மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோரிடமும் பல்வேறு தரப்பினரால் நகர சபைச் செயலாளருக்கு எதிராகப் பல தடவை முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (4)

கேலிச்சித்திரம்




# வடக்கு ஆயுதக் குழுக்களிலுள்ளோர் புலிகள் போன்று வந்துவிடுவார்களா?

**அவை மக்களுக்கு அச்சுறுத்தலாகவுள்ளன என்று கூறுகிறார் மகிந்த அணி உறுப்பினர்**



கொழும்பு, ஜூலை 4

வடக்கில் தற்போது தலைதூக்கியுள்ள ஆயுதக் குழுக்களால், 2009ஆம் ஆண்டு போரின்பின்னர் நிம்மதியாக வாழ்ந்த மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்தக் குழுக்களும் விடுதலைப்புலிகள் போல எதிர்காலத்தில் வந்துவிடுவார்களோ என்ற அச்சத்தில்தான் அங்குள்ள பொதுமக்கள் காணப்படுகின்றார்கள்.

இவ்வாறு ஒன்றிணைந்த எதிரணியின் உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வடக்கில் தற்போது ஆவா மற்றும் தனுரொக் குழுக்களின் அச்சுறுத்தல்கள் அதிகரித்துவிட்டன. 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து நிம்மதியாக வாழ்ந்த வடக்கு மக்களுக்கு இது பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கின்றது. இந்தக் குழுக்களும் விடுதலைப்புலிகள்போல எதிர்காலத்தில் வந்துவிடுவார்களோ என்ற அச்சத்தில்தான் அங்குள்ளபொதுமக்கள்காணப்படுகின்றார்கள். இவை தொடர்பில் அங்குள்ள அரசியல்வாதிகள் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

பொலிஸார், இராணுவத்தைக் கொண்டு இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அதனைத் தடுக்கும் வகையிலேயே செயற்படுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரான இரா. சம்பந்தன், மகிந்த காலத்தில் இடம்பெற்ற குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் தற்போது கருத்துக்களைத்தெரிவித்துவருகிறார். ஆனால், வடக்கில் காணப்படும் இந்த ஆயுதக்குழுக்கள்தொடர்பில்இதுவரை அவர் கருத்துக்களைக் கூறியுள்ளாரா? குறைந்தது. அரசுக்கு இது குறித்து ஏதேனும் அறிவித்துள்ளாரா? இல்லையே.

இவர்களுக்கு மக்களை அடகு வைத்து அரசியல் செய்ய வேண்டும் என்ற நோக்கம் மட்டும்தான் இருக்கின்றதே தவிர அவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றோ, வடக்குத் தமிழர்களை நிம்மதியாக வாழவைக்க வேண்டும் என்றோ எண்ணமில்லை" - என்று தெரிவித்துள்ளார். (4)

# அனுமதி பத்திரமின்றி பலரிடம் துப்பாக்கிகள்

**வைத்திருப்போரிடம் மீள்பதிவு விரைவில்**

கொழும்பு, ஜூலை 4

குற்றச்செயல்களுக்காகத் துப்பாக்கிகள் பயன்படுத்தப்படுகின்றமை அதிகரித்துள்ளன.

அனுமதிப் பத்திரமின்றிப் பலர் துப்பாக்கி வைத்திருக்கின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதனால் துப்பாக்கிக்கான அனுமதிப்பத்திரத்தை மீளவும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் படுகிறது.

துப்பாக்கிக்கான அனுமதியைக் கொண்டிருப்பவர்கள், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்து உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்புத் தெரிவிக்கிறது.

இதேவேளை, குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று மூத்த பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பில் தகவல்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்க முடியும் என்றும் பொலிஸார் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (4)

# மைத்திரி – நரேந்திரமோடி சந்தித்துப் பேச வாய்ப்புகள்

கொழும்பு, ஜூலை 4

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியும், இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் அடுத்த மாதம் சந்தித்துப் பேச்சு நடத்தும் வாய்ப்புக்கள் உள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிம்ஸ்ரெக் எனப்படும், பலதுறை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான, வங்காள விரிகுடா அமைப்பு நாடுகளின், தலைவர்களின் உச்சி மாநாடு நேபாளத்தில் வரும் ஓகஸ்ட் 30ஆம், 31ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பங்களாதேஷ், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து, பூட்டான், நேபாளம் ஆகிய ஏழு நாடுகள் அங்கம் வகிக்கும் இந்தப் பிம்ஸ்ரெக் அமைப்பின் தலைவர்களின் உச்சி மாநாடு கடந்த மார்ச் மாதம் நடைபெறவிருந்தது.

எனினும், நேபாளத்தில் உள்நாட்டு அரசியல் காரணங்களால் இந்த மாநாடு ஓகஸ்ட் 30ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டது.

இந்த மாநாட்டில், மைத்திரிபால சிறிசேன, நரேந்திர மோடி உள்ளிட்ட, தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருவரும் பங்கேற்றால், இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்தும் வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிலும், இலங்கையிலும், அடுத்த ஆண்டு ஆட்சியைத் தீர்மானிக்கும் முக்கியமான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், இந்தச் சந்திப்பில் முக்கிய விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (4)

# பணம் பெறவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கலாமே?

**மகிந்தவிடம் கேட்கிறார் அஜித்**

கொழும்பு, ஜூலை 4

நியூயோர்க் ரைம்ஸ் இதழுக்கு எதிராக மகிந்த ராஜபக்ச, முடிந்தால், சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சவால் விடுத்துள்ளார் அமைச்சர் அஜித் பெரேரா.

கொழும்பில் நேற்றுமுன்தினம் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அதன்போது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.



"முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சசீனாவிடம்இருந்து பணம் பெறவில்லை என்று, சீனா நேரடியாகத் தெரிவிக்கவில்லை. நியூயோர்க் ரைம்ஸ் இதழின்குற்றச்சாட்டுக்கள் பொய்யானால், மகிந்தராஜபக்சஅதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு அவர் தயாரா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். (4)

# தொடருந்துப் பெட்டி, ஆசனங்களை சேதப்படுத்தினால் இனிமேல் சிறை

**சிவில் உடையில் ஊழியர்களை நியமிக்க அமைச்சர் சிறிபால டி சில்வா நடவடிக்கை**

கொழும்பு, ஜூலை 4

தொடருந்தில் பயணம் செய்பவர்கள் பெட்டிகள் மற்றும் ஆசனங்களுக்குச் சேதம் ஏற்படுத்துவதைத் தடுக்கும் வகையில் சிவில் உடையில் பாதுகாப்பு ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அதற்கான நடவடிக்கை தொடர்பில் ஆராயப்படுகிறது என்று சிவில் விமான சேவைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சர்நிமால்சிறிபால டி சில்வா தெரிவித்தார்.



அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடருந்துத் திணைக்களத்துக்குச் சொந்தமான சொத்துகளுக்குச் சேதம் விளைவிப்பவர்களை அடையாளங் கண்டு அவர்களுக்கு எதிராகப் பொதுச் சொத்தைச் சேதப்படுத்தியமை, தொடர்பிலான சட்டத்தின் கீழ் சிறைத் தண்டனை விதிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

தொடருந்துச்சேவையை நடத்துவதற்காக அரசு பில்லியன் கணக்கில் பணத்தைச் செலவிடுகிறது. சேவையின் பயனை அனுபவிக்கும் பொதுமக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் - என்று அமைச்சர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (4)

# 18 வயது வரையான பிள்ளைகளை பாதுகாப்பது பெற்றோரின் பொறுப்பு

**சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கூறுகிறது**

பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பில் அதிககவனஞ்செலுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு 18 வயதாகும் வரை, அவர்களைப் பாதுகாப்பது பெற்றோர்களின் கடமை என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் அனோமா சிறிவர்தன தெரிவித்தார்.

இந்த வருடத்தின் 6 மாத காலத்துக்குள், துன்புறுத்தல் தொடர்பில் 4 ஆயிரத்து 831 முறைப்பாடுகள்கிடைத்துள்ளன.

சிறுவர்களைத் துன்புறுத்துவது தொடர்பில் ஆயிரத்து 201 முறைப்பாடுகளும் வன்கொடுமை தொடர்பில் 581முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், துன்புறுத்தல்கள் தொடர்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது சிறுவர்கள் மீதான துன்புறுத்தல் அதிகரித்து வருவதை உறுதிப்படுத்துகிறது.

எனவே, பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பில் அதிக கவனஞ்செலுத்த வேண்டும். பிள்ளைகளுக்குப் 18 வயதாகும் வரை, அவர்களைப் பாதுகாப்பது பெற்றோர்களின் கடமை - என்று பணிப்பாளர்நாயகம் மேலும் தெரிவித்தார். (4)



# மகிந்தவின் அரசியல்வாதிகள் ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, ஜூலை 4

அம்பாந்தோட்டைத் துறைமுகம் குறித்த செய்திகளுக்கான தகவல்களை வழங்கிய பத்திரிகையாளர்களை முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு நெருக்கமான அரசியல்வாதிகள் அச்சுறுத்திவருகின்றனர் என்று நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பான துல்லியமான புலனாய்வுச் செய்திக்கான தகவல்களை வழங்கிய இரு பத்திரிகையாளர்களை மகிந்தவுக்கு நெருக்கமான அரசியல்வாதிகள் பகிரங்கமாக விமர்சித்துள்ளனர் என்று நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது. (4)

# சாதாரணதர மாணவர்களின் பரீட்சைப் புள்ளிகள் பகுப்பாய்வு

## சித்திமட்டத்தை அதிகரிப்பதற்கான ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 4

**வடக்கு மாகாணத்தில் ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் ஒவ்வொரு பாடத்துக்குமான புள்ளிகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும், புள்ளிகளை உயர்த்துவதற்குமான சிறப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப் படவுள்ளதாக மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.**

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு ஆண்டும்ஜி.சி.ஈசாதாரணதரத்துக்குத் தோற்றும் மாணவர்கள், சில பாடங்களில்புள்ளிகள் மிகக்குறைவாகப்பெறுவதால்பரீட்சையில்தோல்வியடைகின்றனர். விஞ்ஞானம், கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மாணவர்க்ளின் புள்ளிகள் குறைவடைந்து செல்கின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாணத்தில் வலய ரீதியாகப் பாடசாலைகளில்மாணவர்களின்ஒவ்வொரு பாடங்களின் புள்ளிகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. தரம்10 இல்பெற்ற இரண்டு தவணைப் பரீட்சைப் புள்ளிகள் தரம் 11இல் முதலாம் தவணை பரீட்சைப் புள்ளிகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

இதன்அடிப்படையில்தற்போது உள்ள நிலையில் இருந்து மாணவர்களை அடுத்த படிக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வுள்ளன.

இதற்கான சிறப்புக் குழு வலயங்களுக்குச் செல்லவுள்ளன. காலையில் இருந்து மதியம் வரை வலயத்தில் உள்ள மாணவர்களின் பரீட்சைப் புள்ளிகள்பகுப்பாய்வுதொடர்பானநடவடிக்கைகள் எடுக்கப்படும். பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் மேலதிக வகுப்புகள்,ம ாதிரி பரீட்சைகள் போன்றஆக்கபூர்வமானநடவடிக்கைகள்முன்னெடுக்கப்படும்என்றுதெரிவிக்கப்பட்டது. (எ-7)



# பல்லாண்டுகள் பழமையான ஆலமரத்தை தறிப்பதற்கு சூழலியலாளர்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சி பழைய மருத்துவமனை வளாகத்தில் உள்ள பல்லாண்டுகள் பழமை வாய்ந்த ஆலமரத்தை அழிப்பதற்கான நடவடிக்கை சூழலியலாளர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சிபழையமருத்துவமனைவளாகத்தில்மகப்பேற்று விடுதிக்கு அருகாமையில் குறித்த ஆலமரம் உள்ளது. இதனைவெட்டிஅழிப்பதற்குப்பிராந்தியசுகாதாரசேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருவ்தாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதுபெரியமரம்ஆகையால்அருகில்உள்ளகட்டடங்களுக்கு ஆபத்து நேரிடலாம் என்ற நோக்கில் தந்திரமா்ன முறையில் வெட்டி அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரியவருகிறது.

2009க்கு முன் குறித்த ஆலமரத்துக்கு அருகில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் மரத்தை மையமாக வைத்தே அமைக்கப்பட்டன. இந்தநிலையில்தற்போதுமரத்தைஅகற்றமுற்படுவது பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இயற்கைவளங்களைப்பாதுகாப்பதற்குஅரசும்அரசசார்பற்ற தன்னார்வ நிறுவனங்களும் கடும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன. இந்தநிலையில்சுகாதாரத்திணைக்களத்தின் இந்த நடவடிக்கை சூழலியலாளர்களிடத்தே கவலையையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே பழமையான ஆலமரத்தைப் பாதுகாக்க உரிய தரப்பினர், ஆலோசனை வழங்க வேண்டும் என்று சூழலியலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிளிநொச்சிமாவட்டபிராந்தியசுகாதாரசேவைகள்திணைக்களப் பணிப்பாளரிடம் இது தொடர்பாகக் கேட்டபோது, மரத்தைச் சுற்றி நாலுபுறமும் பல்வேறு தேவையுடைய கட்டடங்கள் காணப்படுகின்றன. பழமை வாய்ந்த மரம் ஆகையால் சரிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது. அங்கு பாம்புகளின்தொல்லையும்அதிகமாகக்காணப்படுகின்றது. இதனால் இரவு நேரத்தில் அங்கு ஊழியர்கள் தங்குவதற்குப் பயப்படுகின்றனர்.

இதுபோன்றகாரணங்களால்தான் அதனை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் அது தற்போது நிறுத்தப்பட்டு மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (எ-6)

# பிரபாகரன் காலத்தில் கலைகள் நவீனத்துவம்பெற்று விளங்கின

## சிறீதரன் எம்.பி. பெருமிதம்



கிளிநொச்சி, ஜூலை 4

தமிழ்த்தேசிய இனத்தின் அடையாளமாக இருப்பது கலைகளே. தமிழர்களின் இலக்கிய காலங்களில் பொற்காலமாகக்கருதப்படும்சோழர்காலத்தில்கலைகள்சிறப்புற்று இருந்தாலும் எம் பெரும் தலைவன் பிரபாகரன் காலத்தில் கலைகள் நவீனத்துவத்துடன் சிறந்து விளங்கின என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தில் (தேசியப்பாடசாலை) அண்மையில்இடம்பெற்றபேசும்தூரிகை ஓவியக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனிதமனங்களைஆழமாகஊடுருவிச்செல்வதேகலைகள். கலைகளுக்குரிய தேசிய அடையாளங்களைக் கொண்டவர்கள்தான் தமிழர்களாகிய நாங்கள். நுண்கலைகளெல்லாம்தமிழர்களின்பாரம்பரியவாழ்வோடு உருவாக்கப்பட்டவை, உருவாகி வந்தவை.

ஆகவேஒருஇனத்தின்மிகமுக்கியமாகக்கருதப்படுவது அவர்களின் தேசிய் வாழ்வியலினுடைய மையங்கள்ான கலைகளும் கலாசாரங்களும் பண்பாட்டு அடையாளங்களும்வாழ்வியல்விழுமியங்களும்நிலைபேறானதாகப்பேணப்படவேண்டுமாகஇருந்தால்ஒருதேசிய இனம்தமதுகலைகளை இழக்க முடியாது.

அவ்வாறான கலைகளைப் பேணவேண்டும் என்பதற்காகமுழங்காவில்தேசியபாடசாலைமாணவர்களாகிய நீங்கள்உங்கள்தூரிகைகொண்டுஎம்இனத்தின்அடையாளங்களை உங்கள் மனக்கண்ணில் உதித்தவாறு பதிப்பித்திருக்கிறீர்கள்.

கலைகளில் மனிதனை ஆறுதல்படுத்துவதாகவும் சிந்திக்கவைப்பதாகவும்இருப்பதுஓவியக்கலைஆகும். ஒரு கருத்தைவிடஒருபடம்ஆயிரம்செய்திகளைச்சொல்லும் என்பார்கள். இதேபோல உங்கள் தூரிகைகள் மூலம் வந்தபடம்எத்தனையோஆயிரம்கருத்துக்களைஎமக்கு சொல்கிறது - என்றார். (எ-105)


கோப்புப்படம்

# அறுகுவெளியில் உப்பு விளைவு

தென்மராட்சி, ஜூலை 4

யாழ்ப்பாணம் , தென்மராட்சி தெற்கு அறுகுவெளி கடலோரியில் பெருமளவு உப்பு விளைந்துள்ளது. இவை பொது மக்களால்எடுக்கப்பட்டுவாகனங்களில்கொண்டுசெல்லப்படுகின்றன. அந்தப்பகுதியில்உப்பளம்அமைக்கப்படவுள்ளபகுதிக்கு அருகில்உள்ளகடலோரியில்மழைக்காலத்தில்கடல்நீர்தேங்கும்பகுதியில்நீர்வற்றியதால்பெருமளவுஉப்புவிளைந்துள்ளது எனவும் தினமும் பெருமளவு மக்கள் அவற்றை அள்ளி ஒன்றுசேர்த்து வாகனங்களில் வருவோரிடம் விற்பனை செய்கின்றனர்எனவும்தெரிவித்தனர். வருடாவருடம்இந்தக் காலப்பகுதியில் இந்தப் பகுதியில் உப்பு அதிகம் விளைவது குறிப்பிடத்தக்கது. (எ-9)

யாழ்ப்பாணத்துக்கு

# ஒதுக்கப்பட்ட வீடுகளை விடவும் மேலதிக 100 வீடுகளுக்கு நிதி

## தேசிய வீடமைப்பு அதிகாரசபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 4

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்ட வீடுகளை விட மேலதிகமாக நூறுக்கும் அதிகமான வீடுகள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டைதேசியவீடமைப்புஅதிகாரசபை வழங்கியுள்ளதாக சபையின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடப்பு வருடத்தில்350மில்லியனில்700வீடுகள் அமைப்பதற்கான நிதி கிடைத்தது. அதிலிருந்து 7 பிரதேசசெயலக பிரிவுகளில் பயனாளிகள் தெரிவுகள் இடம்பெற்று அமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. தவிர இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தில் 12 மில்லியனில் 24 வீடுகளும், சிறப்பு நிதியின் கீழ் கரவெட்டிப் பிரதேசசெயலத்துக்கு உட்பட்ட வள்ளாவத்தைப்பிரதேசத்தில் 9 மில்லியனில் 25 வீடுகள் அமைக்கும் பணிகளும் நடைபெற்றுவருகின்றன.

இதைவிட வீடுகள் இல்லாதவர்களும் சபைக்குக் கோரிக்கைகளை விடுத்த வண்ணம்உள்ளனர். இதனைக்கருத்திற்கொண்டு எமதுஅமைச்சுக்குத்தெரியப்படுத்தினோம். நாட்டின் பல பகுதிகளுக்கும் இந்தப் பிரச்சினை காணப்படுவதால்மேலதிகநிதிஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் நடப்பு வருடத்தில் ஒதுக்கப்பட்ட நிதிக்குமேலதிகமாகசுமார்150 வீடுகளை அமைக்கக் கூடிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றுதெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளின் ஊடாக509வீடுகள்கடந்த வருடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-7)

செவ்வண்டுத் தாக்கத்திலிருந்து தென்னைகளைப் பாதுகாக்க

# ‘மொனோ கொரட்டோ பொஸ்’ மருந்தைப் பயன்படுத்துங்கள்

## தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூலை 4**

**வடக்குமாகாணத்தில்தென்னை மரங்களைக் குறுகிய காலத்தில் அழிக்கும் செவ்வண்டுத் தாக்கத்துக்கான மருந்தைப் பயன்படுத்துவதன் மூலம் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்று யாழ்ப்பாண தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை தெரிவித்துள்ளது.**

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

செவ்வண்டுதாக்கத்தில்இருந்து மரத்தைப் பாதுகாக்க வேண்டும்என்றால்தென்னைப்பயிர்ச் செய்கைச்சபையைப்பயனாளிகள் உடனடியாக நாட வேண்டும். சபையில் மட்டுமே இந்த நாசினி உள்ளது.

மரத்தில்உள்ளதேங்காய்களைப் பிடுங்கிய பின்னர் ‘மொனோ கொரட்டோ பொஸ்’ மருந்தை 40 மில்லி லீற்றர் வரை உறுஞ்சியில் எடுத்து மரத்தின் அடியில் இருந்து 3 அடி மேலே துளையிட்டு இந்த மருந்தை மரத்தின் உள்ளே செலுத்த வேண்டும். 3 மாதத்தில் இதன் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள்வரும். முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இதன் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. இதுதொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றுபுதுக்குடியிருப்புப்பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு மாகாணத்தில் வளர்ந்துவரும்தென்னைமரங்களை அழிக்கும் வல்லமை கொண்டசெவ்வண்டுத்தாக்கம் தற்போதுஅதிகரித்துள்ளது. அதிகரித்தவெப்பநிலைகாரணமாக இதன் தாக்கம் தற்போது 20 வீதம்வரை இனம் காணப்படுகின்றது.

தென்னையின் 3 தொடக்கம் 15 வயது வரையான காலப்பகுதியில் இந்த வண்டின் தாக்கம் அதிகமாகக்காணப்படுகின்றது. மரத்தின் வேர் தொடக்கம் நுனி வரைஇதன்தாக்கம்பரவிஇருக்கும். ஒரு வண்டு 300 முட்டைகளை இட்டுபுழுக்களைத்தோற்றுவிக்கக்கூடியது. இந்தப் புழுக்கள் மரத்தைப் படிப்படியாக அழிக்கும். மரம் விழும்போது தான்பயனாளிகளால்உணரக் கூடியதாக இருக்கும்.

இதுதவிர, தென்னை ஓலைகளின் அடி, தேங்காய்க் குலையின் அடியில் தாக்கி அவை விழும் போதும் வண்டின் தாக்கம் உணரப்படும். இந்தத் தாக்கத்தால் மரம் முற்றாக அழிந்துவிடும். தென்னை மரங்கள் உள்ள இடங்களைச்சூழ உள்ள பழைய மரக் குற்றிகள் மற்றும் பச்சை சாணம் ஆகியன இதன் உற்பத்திக்குக் காரணமாக அமைகின்றன. ஆகவே தென்னை வளரும் சூழல் சுத்தமாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)



# அடிக்கடி இடமாற்றம் செய்யப்படும் சதுரங்க

## செல்லுமிடமெல்லாம் குற்றங்கள் குறைப்பு பிரதேச மக்கள் புகழாரம், பாராட்டு

கிளிநொச்சி, ஜூலை 4

பொலிஸ்அதிகாரிசதுரங்கஅடிக்கடி இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகிறார். அவர் செல்லுமிடங்களில் சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதால் மக்கள் அவரைப்பிரிவதற்கும், மாற்றுவதற்கும் இடம்கொடுக்க மறுக்கின்றனர்.

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியவர் சதுரங்க. அங்கு மணல், மாடுகடத்தல், கஞ்சா, கசிப்பு விற்பனை போன்ற குற்றச்செயல்களைக்கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வந்தார்.

மக்களுடைய பிரச்சினைகளை முன்னின்று தீர்க்கும் சிறந்த மனிதர். இதனால்தர்மபுரம் மக்களுக்கு மிகவும் பிடித்துப்போனார். தர்மபுரம் பொலிஸ் காவலரணாக இருந்தபோதேஅவர்அங்குபொறுப்பதிகாரியாகநியமிக்கப்பட்டார். அவருடைய காலத்திலேயே தர்மபுரம் பொலிஸ் காவலரண் பொலிஸ் நிலையமாக மாற்றப்பட்டது. சிறிது காலத்திலேயேஅங்கிருந்துசதுரங்க அக்கராயனுக்குஇடமாற்றப்பட்டார். தர்மபுரம் மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இடமாற்றப்பட்டதன் பின்னர் சதுரங்கவுக்குப் பிரியாவிடை செய்திருந்தனர்.

அக்கராயனுக்குச் சென்ற சதுரங்க அங்கும் போதைப் பொருள் ஒழிப்பு விடயத்தில்கூடியஅக்கறைகொண்டு அவற்றைக் கட்டுப்படுத்தினார். தற்போது மீண்டும் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த இடமாற்றத்தை நிறுத்துமாறு அக்கராயன்மக்கள்வலியுறுத்தியுள்ளனர். இதுதொடர்பில்மக்கள்கடந்த ஞாயிற்றுக்கிழமைவடக்குமாகாண மூத்த பொலிஸ் மா அதிபரிடம் நேரில் சென்று மனுக் கையளித்தனர்.

அந்த மனுவில், “அக்கராயன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்ககடமையைப்பொறுப்பேற்றுக் குறுகிய காலத்துக்குள் இந்தப் பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத நடவடிக்கைகளைப் பெருமளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார். சட்டவிரோதமணல்அகழ்வு, கசிப்புஉற்பத்தி; களவு போன்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி வருகின்றார்.

அவர்தொடர்ந்தும்இந்தப்பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரியாகப் பணியாற்றினால் சட்டவிரோதச் செயற்பாடுகளைப்பெருமளவுக்குக்கட்டுப்படுத்தி அமைதியான பிரதேசமாக அக்கராயன் பிரதேசத்தை மாற்றிவிடுவார் என்ற நம்பிக்கையுண்டு. எனவே பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்று குறுகிய காலத்துக்குள் அவருக்கு வழங்கும் இடமாற்றத்தை நிறுத்தவேண்டும்”என்றுள்ளது. (எ-21,35)





# உயிரிழந்த யானைகளின் எச்சங்கள் மீட்பு

வவுனியா, ஜூலை 4

வவுனியாவில்உயிரிழந்தஇருயானைகளின் எச்சங்கள்நேற்றுமீட்கப்பட்டுள்ளன. வவுனியா கள்ளிக்குளம் கிராமத்தில் குடியிருப்புக்கு பின்புறமாக பற்றைகள் நிறைந்த பகுதியில் இருந்தேகுறித்த இரண்டுயானைகளும் உயிரிழந்து அழுகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. குறித்தபகுதியில்யானைகளின்நடமாட்டம்வழமை. இந்தநிலையில்நேற்றுக்காலை அந்தப்பகுதியால்சென்றஒருவர் வெட்டப்பட்ட குழி ஒன்றில் இருந்து துர்நாற்றம் வருவதை அவதானித்துசென்றுபார்த்தபோதுகுழிக்குள் இருயானைகள்உயிரிழந்துஅதன்பாகங்கள் அழுகிய நிலையில் காணப்பட்டதை அவதானித்தார்.

பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கபட்டது. மாமடுமற்றும்வவுனியாபொலிஸாரும்வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர். இரு யானைகளும் ஒரு மாதத்துக்கு முன்னரே இறந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். குழியில் விழுந்தமையால் யானைகள்உயிரிழந்தனவாஅல்லதுதந்தங்கள் பெறும் நோக்கோடு கொல்லப்பட்டனவா என்றகோணத்தில்பொலிஸார்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். யானையின் சடலங்கள் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளன எனத்தெரிவிக்கப்பட்டது. (எ-110)

மாகாண சபையில்நிலவும்சர்ச்சைக்குத்தீர்வாக

# பழைய அமைச்சர்களை மீளவும் நியமிக்கலாம்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்கு மாகாண சபையில் தற்போது நிலவும் அமைச்சரவை தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வாகவும் ஒற்றுமையின் எடுத்துக் காட்டாகவும் பழைய அமைச்சர்களைமீளவும்நியமிக்கலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முதலமைச்சருக்கு அனுப்பி வைத்த மின்னஞ்சலை முதலமைச்சர்சகலஅமைச்சர்களுக்கும்அனுப்பி வைத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையில் ஏற்பட்ட கசப்பான பழைய காலங்களை மறந்து புதிய மாற்றம் ஒன்றைஏற்படுத்தநீங்கள்விரும்பினால்வடக்கு மாகாண சபைக்கு ஆரம்பத்தில் நியமித்த 4 அமைச்சர்களையும்மீண்டும்அமைச்சர்கள்ஆக நியமிப்பதன்மூலம்ஒருதீர்வைஎட்டமுடியும்என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ்ப்பாண மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்ஒருவர்கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11.38க்கு முதலமைச்சருக்கு மின்னஞ்சல் அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த மின்னஞ்சலைப் பார்வையிட்ட வடக்கு மாகாண முதலமைச்சர் குறித்த ஆலோசனையைத் தற்போதைய அமைச்சர்களுக்கு நேற்றுமுன்தினம்அதிகாலை6.36க்குஅனுப்பி வைத்துள்ளார்.

இதன் மூலம் மேற்படி ஆலோசனையை முதலமைச்சர்ஏற்றுக்கொண்டுள்ளாரா?என்றகுழப்பம் தற்போதைய அமைச்சர்கள் சிலரிடையே ஏற்பட்டுள்ளது. (எ-105)

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின்

# பிரமாண அடிப்படை நிதியிலிருந்து 2018இல் 2031 வேலைத்திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்குமாகாணசபைஉறுப்பினர்களுக்குநடப்புவருடத்தில்வழங்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் 2 ஆயிரத்து 31 வேலைத்திட்டங்கள் நடைபெறவுள்ளனஎன்றுமாகாண சபையின் பேரவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நடப்புவருடத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான பிரமாணஅடிப்படையிலானமூலதன நன்கொடைநிதிதலா 6 மில்லியன் ரூபாவீதம்மொத்தமாக 198 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில்தேவைகளின்நிமித்தம்அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான செயற்றிட்ட அறிக்கையை அவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

செயற்றிட்டமுன்மொழிவுகளுக்கு ஏற்ப இந்த வருடம் 2ஆயிரத்து 31 திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இது தவிர இன்னமும் 8 மில்லியனுக்கான திட்ட முன் மொழிவுகள் கிடைக்கப்பெறவில்லை.

அவையும் கிடைத்தவுடன் நடப்பு ஆண்டுக்கானமொத்தவேலைகள் கணிக்கமுடியும்என்றுதெரிவிக்கப்பட்டது. கடந்த வருடம் 2 ஆயிரத்து 122வேலைத்திட்டங்கள்நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-7)

# திருடர்கள் அரசியல் செய்தால் மக்களுக்கே இறுதியில் சிரமம்

ஊவா மாகாணசபை உறுப்பினர் சமந்த வித்தியரத்ன தெரிவிப்பு



**பதுளை, ஜூலை 4**

**திருடர்களை அரசியலுக்கு கொண்டு வருவதால் மக்கள்தான் இறுதியில் கஷ்டப்படுகின்றனர். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்தியரத்ன தெரிவித்தார்.**

பதுளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால் நாட்டுக்குஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் நன்கு அறிந்திருந்தாலும் அவர்கள் மீண்டும் அதே அரசியல்வாதிகளுக்குவாக்களிக்கின்றனர். ஊழல்வாதிகளுக்கும் திருடர்களுக்கும் தண்டனை வழங்குவதாக தெரிவித்து இந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் தற்போது ஊழல்வாதிகளும் திருடர்களும்சுதந்திரமாகவெளியில் இருக்கின்றனர். மக்கள் இதனை மாற்றும் வரையில் நாட்டை முன்னேற்ற முடியாது. (ந-ரி5)

## காயங்களுடன் பெண் சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூலை4

மீகொட பிரதேசத்தில் வீடொன்றிலிருந்து கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்ட காயங்களுடன் பெண்ணொருவரின் சடலம் ஒன்று மீகொட பொலிஸாரால் மீட்கப்பட்டது.

50 வயதுடைய வனிகாபந்துகே மாலாஎன்பவரே இவ்வாறுசடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சடலம் அவரது வீட்டின் அறையிலிருந்து மீட்கப்பட்டது. இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட சடலத்தின் மீது கூரிய ஆயுதங்களினால் தாக்கப்பட்ட காயங்கள் காணப்படுவதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது கண்டறியப்பட்டுள்ளது.

உயிரிழப்புக்கானகாரணம்கண்டறியப்படவில்லை என்பதோடு அது தொடர்பில்வரும்கைதுசெய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலதிகவிசாரணைகளைமீகொட பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (நரி5)

## சிறுவன் உயிரை பறித்த ரம்புட்டான்

சிலாபம், ஜூலை4

சிலாபம் ஆலங்குடாப் பிரதேசத்தில் ரம்புட்டான் விதை தொண்டையில்சிக்கிசிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச்சம்பவம் நேற்று நடந்தது.

ஆலங்குடா பிரதேசத்தைச் சேர்ந்த சிறப்புத் தேவையுடையமுஹம்மது நிஜாம் ரிகாஸ்தீன்(வயது-6)என்றசிறுவனே உயிரிழந்துள்ளார். சிறுவன் ரம்புட்டான் விதை தொண்டையில்சிக்கியே உயிரிழந்துள்ளார் எனப் புத்தளம் மற்றும் கற்பிட்டி பிரிவின் இறப்பு விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (ந-ரி5)

## கொலைச் சம்பவம் குற்றவாளிக்குத் தூக்கு

திருகோணமலை, ஜூலை4

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிக்கு திருகோணமலை நீதிமன்று தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதுதிருகோணமலைமேல்நீதிமன்றநீதிபதிமாணிக்கவாசகம் இளஞ்செழியனால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

திருகோணமலை, ஆண்டாங்குளம்பகுதியைச்சேர்ந்த ஏ.எச்.சமீரலக்மால்(வயது-38)என்பவருக்கே நேற்று இந்தத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இவர் தனது தாயின் இரண்டாவது கணவரை கத்தியால்வெட்டிகொலைசெய்தாரெனகுற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் பகுதியில், கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதியே, இந்த கொலைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில், சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவந்த நிலையிலேயே, நேற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ந-ரி5)

## அளுத்கமகே வழக்கை விசாரிக்க சிறப்பு மன்று

சட்டமா அதிபர் திணைக்களம் கோரிக்கை



கொழும்பு, ஜூலை4

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்துள்ள வழக்கை எதிர்காலத்தில் அமைக்கப்படவுள்ள மூன்று நீதிபதிகளைக் கொண்ட சிறப்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதியரசரிடம் கோரப்பட்டுள்ளது என சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

கடந்த அரசதலைவர் தேர்தலின்போது சதொச ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட ரூபா நான்கு கோடிக்கும் அதிக பெறுமதி கொண்ட சதுரங்க மற்றும்கெரம்பலகைகளை அரசியல்நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியமை தொடர்பில் இந்தவழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு மேலதிக விசாரணைகளுக்காக செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ந-ரி5)

## யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை4

வெலிகந்த டோசர்வெட்டியவனப்பகுதியில்காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வனப்பகுதி வழியாகச் சென்று கொண்டிருந்த வேளையே நேற்று யானைத் தாக்குதலுக்கு இலக்கானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வாகரை பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதான நபரேதாக்குதலில்உயிரிழந்துள்ளார். இந்தச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)

## வர்த்தகரின் வீட்டில் கொள்ளை

கொழும்பு, ஜூலை4

கொழும்பின் புறநகர்பகுதியானபத்தரமுல்லையில்நேற்றுமுன்தினம்கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வர்த்தகர் ஒருவரின் வீட்டிலேயே பணம் மற்றும்தங்கநகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கொள்ளையர்கள் மோட்டார் வாகனம் ஒன்றில் தப்பி சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தப்பிச் சென்ற மோட்டார்வாகனம் எஹெலியகொட உடுபில பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)

## கட்டுப்பாட்டை இழந்த லொறி மரத்துடன் மோதி விபத்து

ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பில் மியன்குளம் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

லொறி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதி விபத்தில்லொறியின் சாரதி உட்பட மூவர் காயமடைந்து வாழைச்சேனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சைபலனின்றி சாரதி உயிரிழந்துள்ளார்.

பொலன்னறுவைப் பிரதேசத்தைசேர்ந்த35வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார் எனத் தெரியவருகிறது. விபத்து தொடர்பானவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ந-ரி5)

## போதைப்பொருளுடன் மூன்று நபர்கள் கைது

கொழும்பு, ஜூலை4

100கிராமுக்கும்அதிகநிறையுடையஹெரோய்ன் போதைப்பொருளுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

ராஜகிரிய மற்றும் பொரள்ளை பிரதேசங்களில் வைத்துநேற்றுமுன்தினம் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டசந்தேகநபர்களில்ஒருவரிடம் இருந்து 85 கிராமும் 910 மில்லிகிராம் ஹெரோயினும், மற்றொருவரிடமிருந்து11 கிராமும் 160 மில்லிகிராம்ஹெரோயினும் மற்றொருவரிடமிருந்து 3 கிராமும் 540 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டன.

இவர்கள் அதேபிரதேசங்களைச் சேர்ந்த 37மற்றும் 35 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் நேற்றுநீதிமன்றத்தில்முற்படுத்தப்பட்டனர்எனப் பொலிஸார் தெரிவித்தனர். (நரி5)



## எமில் ரஞ்சனுக்கு மீண்டும் மறியல்

கொழும்பு, ஜூலை4

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைச் சம்பவம்தொடர்பில்கைதுசெய்யப்பட்டசிறைச்சாலைகள் முன்னாள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்தின் பரிசோதகர்நியோமால்ரங்கஜீவ ஆகியோர்மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான்முன்னிலையில்முற்படுத்தப்பட்டபோதே எதிர்வரும்17ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

2012 ஆம் ஆண்டுநவம்பர்மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலை யில் இடம்பெற்ற மோதலில் 27 கைதிகள் உயிரிழந்தனர். (ந-ரி5)




# முன்னாள் குடியேறிகள் வைத்ததுதான் சட்டமா?

அமெரிக்காவில் சட்ட விரோதமாகக் குடியேறியவர்களின் குழந்தைகளும் பெற்றோரும் தனித்தனியாகப் பிரித்து வைக்கப்பட்டனர். இதற்கு உலகம் முழுவதும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. குழந்தைகளை அவர்களது பெற்றோரிடம் சேர்க்கச் சொல்லி உத்தரவிடப்பட்டது. ஆனால் அதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இன்னொரு பக்கம் சட்ட விரோதமாகக் குடியேறியவர்களைக் குடும்பத்துடன் கைதுசெய்யும்நடவடிக்கைகள்தொடர்ந்து வருகின்றன. அமெரிக்காவின் குடியேற்றக் கொள்கையைக் கண்டித்து, வொஷிங்டனில் வெள்ளை மாளிகை முன்பு மாபெரும் போராட்டம் நடத்தப்பட்டது. அமெரிக்கா முழுவதும் 700 நகரங்களில் இருந்து சுமார் 50 ஆயிரம் பேர் போராட்டத்தில் கலந்துகொண்டனர். இதில் ஸ்பெய்னைச் சேர்ந்த 12 வயது லியாகயாஜோமேடையில்பேசியதுஅனைவரையும் கலங்கச் செய்துவிட்டது.

"நான் மியாமியில் இருந்து வந்திருக்கிறேன். வீட்டு வேலை செய்பவரின் மகள் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கிறேன். என் அம்மா வேலைக்குச் செல்வது எங்கள் குடும்பத்துக்கு அவசியமானது. வேலை செய்யும் வீட்டில் உள்ள குழந்தைகளைப் பத்திரமாகவும் அன்பாகவும் ஆரோக்கியமாகவும் பார்த்துக் கொள்கிறார் அம்மா. அதற்குப் பரிசாக இந்த அரசு அவரது குழந்தைகளைப் பெரும் துயரத்தில் தள்ளியிருக்கிறது. தினமும் அம்மா வேலைக்குச் சென்று எப்போதுதிரும்புவார்என்றுகாத்திருக்கிறோம். எங்களையும் அம்மாவையும் பிரித்து விடுவார்களோ என்று ஒவ்வொரு நொடியும் அச்சத்தில் கழிக்கிறோம். நாங்கள் நிம்மதியாகச் சாப்பிட்டு நீண்ட காலமாகி விட்டது. ஒருநாள்கூட தூக்கம் வருவதில்லை. பாடத்தைப்படிக்கமுடிவதில்லை. மிகுந்த மன அழுத்தத்தில் தவிக்கிறோம். ஒவ்வொரு நாளும் குழந்தைகள் பிரிக்கப்படுவதையும் அவர்கள் துயரத்தில் இருப்பதையும் காணும்போது நெஞ்சே வெடித்துவிடும் போலிருக்கிறது. இதை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். குழந்தைகளுக்குப் பெற்றோரைவிட வேறு யாரும் பாதுகாப்பும் நிம்மதியான வாழ்க்கையையும் தரமுடியாது. நாங்கள் எங்கள் குடும்பத்தையும் பெற்றோரையும் எவ்வளவு நேசிக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியுமா? குழந்தைகளின் மனநிலையை ஏன் கருத்தில் கொள்ள மறுக்கிறீர்கள்?

எங்களை ஏன் துன்புறுத்துகிறீர்கள்? மோசமான கூண்டுகளில் அடைக்கப்பட்டுள்ள குழந்தைகளையும் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெற்றோரையும் பார்க்கும்போது இதில் சிறிதும் நியாயம் இல்லை என்று தோன்றவில்லையா? அம்மாவிடமிருந்து பிரிந்து விடுவேனோ என்ற பயத்திலேயே வாழ்ந்துகொண்டிருக்கிறேன். என் அம்மா உறுதியானவர், அழகானவர், தைரியமானவர். அநியாயத்தைக் கண்டால் உரக்கப் பேசவும் கற்றுக் கொடுத்திருக்கிறார். இனிமேலும் எங்கள் குடும்பங்களும் குழந்தைகளும் துன்பப்படுவதை எங்களால் அனுமதிக்க இயலாது.

எல்லோரும் ஒன்றாகப் போராடினால் நாம் நல்ல மாற்றத்தைக் கொண்டு வரலாம். எல்லைகளில் வாழ்பவர்களும் மனிதர்களே. எல்லைகளில் வாழும் குடும்பத்தின் குழந்தைகளும் குழந்தைகளே. என் போன்ற அனைத்து குழந்தைகளின் சார்பாகவும் இங்கே பேசியிருக்கிறேன். பெற்றோரிடமிருந்து குழந்தைகள் பிரிக்கப்படுவதை நிறுத்தும்வரை போராடுவேன். நான் அரசிடமிருந்து கருணை கேட்கவில்லை. பெற்றோருடன் குழந்தைகள் இருப்பதும் அமைதியாக வாழ்வதும் குழந்தைகள், பெற்றோரின் உரிமை" என்று 2 நிமிடங்கள் அழுது கொண்டே பேசி முடித்தார் லியா.

"குடியேறிகளால் உருவான நாடுதானே அமெரிக்கா. எனில் அமெரிக்காவில் உள்ள அனைவரும்குடியேறிகள்தானே. அப்படியிருக்க முன்னாள் குடியேறிகள் இன்நாள் குடியேறிகளைக் கட்டுப்படுத்தலாமா?" என்று கருத்ததுத் தெரிவித்து வருகின்றனர் சமூக வலைத்தள வாசிகள். (ம)

# கற்பனை மீறிய அட்டூழியங்களை எதிர்கொண்டுள்ள ரொஹிங்யர்கள்

## குத்தேரஸ் வருத்தம்



> பங்களாதேஷில் உள்ள ரோஹிங்கிய முஸ்லிம்களின் நிலமை பரிதாபமாக உள்ளது. கற்பனைக்கு எட்டாத அளவில் அங்கு அட்டூழியங்கள் நடந்துள்ளதை நான் பார்த்தேன்.

டாக்கா, ஜூலை 4

பங்களாதேஷில் தங்கவைக்கப்பட்டுள்ள ரொஹிங்யர்கள் கற்பனையில் அடங்காத அட்டூழியங்களைச் சந்தித்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் குத்தேரஸ். பௌத்த நாடான மியன்மார் சிறுபான்மை மக்களான ரொஹிங்யர்களை இனச் சுத்திகரிப்புச் செய்ததை அடுத்து லட்சக் கணக்கான ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குள் அடைக்கலம் தேடினர். இதன்படி சுமார் 6 லட்சம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குள் உள்ளனர் என்று கணக்கிடப்படுகிறது. இவர்கள் பங்களாதேஷுக்குள்ளும் பல்வேறு நெருக்கடிகளையும் துன்பங்களையும் எதிர்கொள்கின்றனர் என்று பன்னாட்டு அமைப்புக்கள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன. பங்களாதேஷுக்குச் சென்று அங்குள்ள ரொஹிங்யர்களை நேற்றுமுன்தினம் சந்தித்த குத்தேரஸ் ரொஹிங்யர்கள் அதிகளவில் துன்பங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று தனது கீச்சகத்தில் குறிப்பிட்டார்.

"பங்களாதேஷில் உள்ள ரோஹிங்கிய முஸ்லிம்களின் நிலமை பரிதாபகரமாக உள்ளது. கற்பனைக்கு எட்டாத அளவில் அங்கு அட்டூழியங்கள் நடந்துள்ளதை நான் பார்த்தேன். பங்களாதேஷின் காக்ஸ் பஜார் பகுதியில் உள்ள ரோஹிங்கிய முஸ்லிம்கள் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் முகாம்களில் பெண்கள் மீதான பலாத்கார சம்பவங்களும் நடந்துள்ளன. அவர்கள், தங்களுக்கான நீதியைக் கேட்கிறார்கள். மேலும் பாதுகாப்பாக நாடு திரும்பவும் அவர்கள் உதவி கோருகின்றனர். உலகில் அதிக அளவில் பாகுபாடு பார்க்கப்படும் இனங்களில் ஒன்றாக ரோஹிங்கியா முஸ்லிம்கள் இருக்கின்றனர். ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு ஏராளமானோர் ஆதரவு தெரிவித்தனர். வங்கதேச மக்கள் காட்டிய இரக்க குணத்தாலும், தாராள மனதாலும் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் காப்பாற்றப்பட்டனர்" என்று குத்தேரஸ் மேலும் தெரிவித்தார். (ம)



அமெரிக்க அரசின் அகதிகள் மீதான கொள்கையைக் கண்டித்து அமெரிக்க அதிபரின் இல்லமான வெள்ளை மாளிகைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் சுமார் 50 ஆயிரம் மக்கள் கலந்துகொண்டனர். (ம)

## பாழடைந்த குகையில் சிக்கியிருந்த

# தாய்லாந்து சிறுவர்கள் பாதுகாப்பாக மீண்டனர்




தாய்லாந்தில் குகை ஒன்றில் சிக்கிக் கொண்டிருந்த கால்பந்து அணியைச் சேர்ந்த 12 சிறுவர்களும், அவர்களது பயிற்சியாளரும் 10 நாள்கள் நடந்த பல போராட்டக்களுக்குப் பிறகு நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளனர்.

தாய்லாந்து நாட்டின் மா சே நகரில் தாம் லுவாங் என்ற குகை உள்ளது. இந்தக் குகை 10 கி.மீ நீளம் உடையதாகும். இந்தக் குகைக்குள் கடந்த வாரம் 11வயது முதல் 16 வயதுவரை உடைய 12 சிறுவர்கள் கொண்ட கால்பந்து அணியைச் சேர்ந்தவர்கள் சிக்கிக் கொண்டனர். இந்தச் சிறுவர்களுடன் சேர்ந்து அணியின் துணைப்பயிற்சியாளரும் சென்றார்.

பருவமழை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து குகையைவிட்டு வெளியேற அவர்களார் முடியவில்லை. குகைப்பகுதி முழுவதையும் வெள்ள நீர் சூழ்ந்தது. இந்தச் சிறுவர்களையும், பயிற்சியாளரையும் காணாமல் பல்வேறு இடங்களில் அணி நிர்வாகம் தேடியுள்ளது. தாய்லாந்து நாட்டின் கடற்படை, பேரிடர் மீட்புப்படையினர் வரவழைக்கப்பட்டுத் தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டது. பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளும் தாய்லாந்துக்கு உதவிக்கரம் நீட்டின. நாட்டின் பல பாகங்களிலும் பிரார்த்தனைகள் நடைபெற்றன. ஒன்பது நாள்களின் போராட்டத்தின் பின்னர் பத்தாவது நாளன்று சிறுவர்கள் மீட்கப்பட்டனர்.

சிறுவர்கள் உயிருடன் இருகக் குறைந்தளவு வாய்ப்பே உள்ளது என்று கருதப்பட்ட நிலையில் அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டமை நாடெங்கும் இன்ப அதிர்ச்சிகளை ஏற்படுத்தியுள்ளது.

"மீட்கப்பட்ட அனைவரும் பாதுகாப்பாக இருக்கிறார்கள். ஆனால் இன்னும் எங்கள் பணி முடியவில்லை. எங்களது அடுத்த பணி அவர்களைப் பத்திரமாக அவர்களது இல்லத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். மீட்கப்பட்ட அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது" என்று மீட்புப் பணியில் ஈடுபட்டவர்களின் கட்டளை அதிகாரி தெரிவித்தார். (ம)



## பாலியல் குற்றத்தை மறைத்ததால் கத்தோலிக்கப் பேராயருக்கு சிறை

கான்பெரா, ஜீலை 4

1970களில் பாலியல் தேவைகளுக்கு தேவாலயச் சிறுவர்களைத் தவறாகப் பயன்படுத்திய பாதிரியார் ஒருவரின் குற்றத்தை மூடி மறைத்ததாக குற்றம்சாட்டப்பட்ட கத்தோலிக்கப் பேராயர் ஒருவருக்கு ஆஸ்திரேலியாவில் 12 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதே நேரம் தண்டனையை அனுபவிக்க அவர் சிறைக்குச் செல்வதைத் தவிர்க்க வாய்ப்பு உள்ளது என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. எனவே, அவர் 12 மாதங்களும் வீட்டுச் சிறையில் வைக்கப்படலாம் என்றும், ஆறு மாதத்துக்குப் பிறகு அவர் பிணை பெற முடியும் என்றும் ஆஸ்திரேலிய ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.


நியூ சௌத்வேல்ஸ் பகுதியைச் சேர்ந்த பாதிரியார் ஜேம்ஸ் பாட்ரிக் ப்லெட்சர் என்பவர் தேவாலயத்தில் பணியாற்றிய சிறுவர்களைப் பாலியல் தேவைகளுக்குப் பயன்படுத்திய குற்றத்தைப்பற்றி பொலிஸாரிடம் தெரிவிக்கத் தவறினார் என பிலிப் வில்சன் மீது குற்றம் சாட்டப்பட்டது. தாம் குற்றவாளி என்று தீர்ப்பு வந்த பிறகு பேராயராக தாம் ஆற்றவேண்டிய கடமைகளில் இருந்து அவர் விலகிக் கொண்டார். ஆனால் பதவி விலகவில்லை. குற்றம் நடந்தபோது இளம் பாதிரியாராக இருந்த வில்சன், குற்றத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பணியில் இருந்து நீக்கினார். திருச்சபையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படக்கூடாது என்பதால் தாம் அப்படிச் செய்ததாக அவர் ஒப்புக் கொண்டார்.

சிறுவர்களை பாலியல் தேவைகளுக்குப் பயன்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்ட ப்ளெட்சர் இது போன்ற ஒன்பது குற்றச்சாட்டுகளில் 2004ஆம் ஆண்டு தண்டனை பெற்று இரண்டாண்டுகளுக்குப் பிறகு சிறையிலேயே இறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## உலகில் மிகவும் உயரமான சிறுவன்

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் லேசான் பள்ளியில் 6ஆம் ஆண்டு படிக்கிறான் ரேன் கேயூ. 11 வயதிலேயே 2.06 மீற்றர் உயரம் இருக்கிறான். பூமியிலேயே இந்த வயதில் இவ்வளவு உயரம் இருக்கக்கூடிய ஒரே சிறுவன் இவன் தான்.

"எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்தே என் வயதுக் குழந்தைகளைவிட மிக உயரமாகவே இருந்தேன். அதனால் சிலர் என்னுடன் விளையாடத் தயங்குவார்கள். பள்ளியிலும் வயது அதிகமானவன் என்று கருதி புது ஆசிரியர்கள் என் வகுப்புக்குப் போகச் சொல்வார்கள். பள்ளி நாற்காலியில் அமர முடியவில்லை. அதனால் பெரிய நாற்காலி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். என்னுடன் படிக்கும் சக மாணவர்கள், என் இடுப்பு உயரமே இருக்கிறார்கள். மனதளவில் நான் அவர்கள் அளவுக்கு இருந்தாலும் உயரத்தால் அவர்களை விட்டு விலகியிருப்பதாகத் தோன்றுகிறது. சாலைகளில் நடக்கும்போது எல்லோரும் என்னை அதிசயமாகப் பார்ப்பார்கள். ஆனாலும் இந்த உயரம் தான் கின்னஸ் சாதனை புத்தகத்தில் என்னை இடம்பெற வைத்திருக்கிறது" என்கிறான் ரேன் கேயூ. (ம)








தாய்லாந்துக் குகையில் சிக்கிய கால்பந்து அணியினரை மீட்கும் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டன. மீட்புப் பணிகளையும் கால்பந்து அணியினருக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற பிராத்தனைகளையும் ஒளிப்படக் கோர்வையாக வெளியிட்டுள்ளது பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ். (ம)

## உலக வர்த்தக அமைப்பில் இருந்தும் வெளியேறிச் செல்லுமா அமெரிக்கா?

வொஷிங்டன், ஜீலை 4



"பன்னாட்டு வர்த்தக அமைப்பு, ஏனைய நாடுகளைக் காட்டிலும் அமெரிக்காவை மிகவும் மோசமாக நடத்துகிறது" என்று குற்றம் சாட்டியுள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

அமெரிக்காவில் இறக்குமதி செய்யும் அதே அளவுக்கு பிற நாடுகள் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை வாங்க வேண்டும். இல்லையெனில் கூடுதல் வரி விதிக்கப்படும் என சீனா, கனடா மற்றும் ஐரோப்பிய யூனியனில் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் டொனால்ட் ட்ரம்ப் வர்த்தகப்போர் நடத்தி வருகிறார். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக சீனா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கப் பொருள்களுக்கான இறக்குமதி வரியை பல மடங்கு உயர்த்தியன. இதன் காரணமாக உலக வர்த்தகம் சீர்குலையக் கூடும் என பொருளாதார நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறிருக்க வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ட்ரம்ப், "உலக வர்த்தக அமைப்பில் இருந்து வெளியேறும் எண்ணம் தற்போதைக்கு இல்லை. ஆனால், அமெரிக்காவை வர்த்தக அமைப்பு ஒழுங்காக நடத்தவில்லை. சூழ்நிலையை பொறுத்து எங்கள் எதிர்கால முடிவு அமையும்" என்று ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பொருளற்றபேச்சுக்களை அரசியல்வாதிகள் தவிர்க்க வேண்டும்

தமிழ்ப்பெண்கள், சிறுமிகள்பாதுகாப்பாகஉயிருடன்வீடு திரும்பவேண்டுமானால், தமிழர்கள் நிம்மதியாக வாழ வேண்டுமானால்வடக்கு–கிழக்கு மாகாணங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும்.

இப்படிக் கூறியிருப்பவர் வேறு யாருமல்லர், மகளிர் விவகார இராஜாங்கஅமைச்சர்விஜகலாமகேஸ்வரன். தெற்கில்இருந்து வந்திருந்த சிங்கள அமைச்சர்களையும் மேடையில் வைத்துக்கொண்டு அவர் இதனைக் கூறினார். இதன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மெச்சினார். அமைச்சர் விஜயகலாவின் கருத்துக்கு அவர்களும் அமைதி காத்தனர். அதாவது ஆட்சியில் இருக்கும் தமது அரசு கையாலாகாத ஒன்று என்று அந்த அமைச்சர்கள் அனைவரும் மக்கள் முன்பாக ஏற்றுக் கொண்டனர்.

பதவியில் உள்ள அமைச்சர் ஒருவரே, தனது அரசு சட்டம் ஒழுங்கைப்பேணுவதற்கு இலாயக்கற்ற, கையாலாகாத ஒன்று என்று மக்கள் முன் பகிரங்கமாக ஒப்புக்கொள்வது எவ்வளவு பெரிய வெட்கக்கேடு. மேலோட்டமான பார்வைக்கு இந்தக் கூற்று விடுதலைப் புலிகளை மெச்சுவதாகத் தோன்றினாலும், அதற்கூடாக இன்றைய அரசை மிகக் கீழ்த்தரமாக விமர்சிப்பதாக அமைந்திருக்கிறது.

அண்மைக் காலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்றுவரும் சகிக்கமுடியாத காட்டுமிராண்டித்தனமான குற்றங்களைக் கட்டுப்படுத்த விடுதலைப் புலிகள்தான் மீண்டும் வரவேண்டும் என்பது யாழ்ப்பாணத்தவர்களின் பொதுக் கருத்தாக இருக்கின்றபோதும், அமைச்சர் ஒருவர் அதனைக் கூறுவது மிகவும் விசித்திரமானது.

அதே நேரத்தில் மற்றொரு கேள்வியும் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை நோக்கி எழுகிறது. சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியாத, பெண்கள் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத ஓர் அரசில் அவர் அமைச்சராக ஏன் தொடர்கின்றார்? உண்மையிலேயே மக்கள் மீதான அக்கறையோடுதான் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார் என்றால், புலிகளால்மட்டும்தான்பெண்களினதும், சிறுமிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்றால், பின்னர் இந்த அரசில் அமைச்சராக அதிலும் மகளிர் விவகார அமைச்சராக அவர் நீடிப்பதில் அர்த்தமே இல்லையே!

மகளிர் விவகார ராஜாங்க அமைச்சராகப் பெண்களினதும் சிறுமிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கையை முழுமையாக எடுப்பதை விட்டுவிட்டு, தனது பொறுப்பைத் தட்டிக்கழித்துவிட்டு, உணர்ச்சிவசப்பட்ட பேச்சு மூலம் அரசியல் நடத்திவிட்டுச் சென்றுவிடலாம் என்கிற அற்ப ஆசையுடைய அரசியல்வாதிகளைப் பெற்றிருப்பது தமிழர்கள் செய்த முன்வினைப் பயன்தான்.

இதுபோன்ற முக்கிய பிரச்சினைகளில்கூட, வெறும் வாக்கு அரசியலை மனதில் கொண்டு இவ்வாறு அரசியல்பேசுவதை இவர்கள் நிறுத்திவிட்டாலே பல பிரச்சினைகளுக்கு இலகுவில் தீர்வு கண்டுவிடலாம். பிரச்சினையின் ஆழ அகலத்தை அறிந்து, அதற்கான காரணங்களை அறிந்து, அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, மக்களைத் திருப்திப்படுத்துகின்றேன் பேர்வழி என்று எதையாவது பேசிவிட்டுப் போவதை இந்த அரசியல்வாதிகள் முதலில் நிறுத்த வேண்டும். இது தமக்கு வாக்களித்த மக்களைமேலும்மேலும் முட்டாள்களாக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

இந்தக் கருத்தை முன்பின் யோசித்துத்தான் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தாரா என்பது அவருக்கே வெளிச்சம். பொருள் உணர்ந்துதான் அவர் பேசினார் என்றால், சட்டம் ஒழுங்கைக்கூட சரிவரப் பேணமுடியாத ஓர் அரசில் அமைச்சராக, அதுவும் மகளிர் விவகார அமைச்சராக இருப்பதற்கு வெட்கப்பட்டு அவர் தனது பதவியில் இருந்து விலகவேண்டும். அதைச் செய்வாரா?

இல்லையேல், அமைச்சராக இருந்துகொண்டே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள எப்படி அவர் கட்டியெழுப்பப் போகிறார் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

# கோத்தாவுக்கு எதிரான அறிக்கையை அமெரிக்கா கவனத்தில் கொள்ளக்கூடுமா?

இந்துமதி


கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்தபோது புரிந்ததாகக் கூறப்படும் பாரதூரமான குற்றங்கள் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றை அமெரிக்க அரசுக்கு அனுப்பி வைப்பதில் அரசு தீவிரமாக ஈடுபாட்டுள்ளதாக ஊடகமொன்றில் செய்தி வெளியாகியுள்ளது. கோத்தபாய அமெரிக்கப் பிரசாவுரிமையையும் கொண்டுள்ளவர் என்ற வகையில் இந்த அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுவுள்ளதாகவும் தெரிகின்றது.

கோத்தபாயவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம், நடத்திய விசாரணைகள் தொடர்பான விபரங்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்த அறிக்கை தொடர்பாக அமெரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமானால், கோத்தபாய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையொன்று உருவாகிவிடுமெனவும் தெரிய வருகின்றது.

**கோத்தபாய தொடர்பான அரசின் அறிக்கை இறுதிப் போர்க் குற்றங்கள் குறித்து எதனையும் உள்ளடக்காது**

இறுதிப் போரின்போது படையினர் போர்க் குற்றங்களிலும், மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஐ.நா மனித உரிமைகள் சபையிலும் அது தொடர்பாக விசாரிக்கப்பட்டு இலங்கைக்கு எதிரான தீர்மானமும் நிறை வேற்றப்பட்டுள்ளது. ஆனால் இலங்கை அரசு இதையொரு பாரதூரமான விடயமாகக் கருதுவதாகத் தெரியவில்லை. மாறாக தமது பொறுப்பிலிருந்து விலகிச் செல்வதையும் காண முடிகின்றது. படையினர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நீதியான விசாரணைகள் இடம்பெறுமானால், முன்னாள் அரச தலைவர், பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தலைவர் உள்ளிட்ட படைகளின் தளபதிகள் விசாரணைகளை எதிர் கொள்ளவேண்டியதொரு நிலை உருவாகிவிடும். இதை ஒருபோதுமே தென்பகுதி அரசியல் தலைவர்கள் விரும்பமாட்டார்கள். இலங்கை அரசு கோத்தபாய தொடர்பாக அமெரிக்க அரசுக்கு அனுப்பி வைக்கவுள்ள அறிக்கையில், இறுதிப் போர்க் குற்றங்கள் தொடர்பாக எதுவுமே இருக்க மாட்டாதென்பதை அனுமானித்துக் கொள்ள முடியும். கோத்தபாய புரிந்த ஏனைய குற்றச்சாட்டுக்கள் மட்டுமே இந்த அறிக்கையில் இடம் பெறு மென்பதையும் உணர்ந்து கொள்ள முடியும். 2020 ஆம் ஆண்டு இடம்பெறவிருக்கும் அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் கோத்தபாய போட்டியிடுவாரென அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை அரசின் அறிக்கை அவருக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும். அதேவேளை மகிந்தவின் இன்னொரு சகோதரரான பசில் ராஜபக்ச மீதும் ஊழல் குற்றச்சாட்டு க்கள் தெரிவிக்கப்பட்டு விசாரணைக ளும் இடம்பெற்றன. இவரும்





அமெரிக்கப் பிரசாவுரிமை பெற்றவர் என்ற வகையில் இவரது விடயத்திலும் அமெரிக்கா அக்கறை செலுத்துமென எதிர்பார்க்க முடியும்.

**மகிந்தவின் ஆட்சி ஒரு குடும்ப அரசியல் ஆட்சியே**

மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை ஒரு குடும்ப ஆட்சியாகவே கருதமுடியும். அவரது நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் முக்கிய பொறுப்புக்களில் அமர்த்தப்பட்டனர். பாதுகாப்புச் செயலர் பதவியை வகித்த கோத்தபாய, படையினர் மற்றும் பொலிசாரைத் தமது முழுக் கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தார். வெள்ளை வான் கடத்தல்களுக்கு இவரே உத்தரவிட்டதாகக் கூறப்படுவதுண்டு. சர்ச்சைக்குரிய அரசியல்வாதியான மேர்வின் சில்வா, அண்மையில் கோத்தபாய மீது கொலையொன்றுக்கு உத்தரவிட்டதாகக் குற்றம் சாட்டியிருந்தமை கவனத்தில் கொள்ளத் தக்கது. பிரபல பத்திரிகையாளரான லசந்த விக்கிரம துங்கவின் படுகொலையிலும் இவருக்குத் தொடர்பு இருந்ததாகக் கூறப்படுவ துண்டு. ஆனால் கோத்தபாய எதற்காகவும் இதுவரை கைது செய்யப்படவில்லை. நீதிமன்றத்தின் மூலமாக கைது செய்யப்படுவதிலிருந்து விலக்குப் பெறுவதற்கான தடையுத்தரவை அவர் பெற்றுக் கொண்டிருப்பதால் அவரை நெருங்குவதற்கு எவராலும் முடியவில்லை.

இந்த நிலையில், கோத்தபாய அரச தலைவர் பதவியை வகிப்பதால் ஏற்படக்கூடிய பாதகமான நிலை தொடர்பான அச்சவுணர்வுகள் இப்போதே எழத்தொடங்கிவிட்டன. இதேவேளை கோத்தபாய தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்குப் பல மில்லியன் ரூபா பணத்தைச் செலவிடுவதாக நிதியமைச்சர் மங்களசமரவீர பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். தான்யாரென்பது மங்களவுக்குத் தெளிவாகத் தெரியுமென கோத்தபாய பதிலளித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**கூட்டு அரசின் பலவீனம், குற்றவாளிகளது அச்சத்தை போக்கும் வகையிலானது**

மைத்திரி தலைமையிலான அரசின் பலவீனம் குற்றவாளிகளென இனம் காணப்பட்டவர்களது பயத்தைப் போக்கியுள்ளதுடன், அவர்களைத் துணிவுடன் செயற்படவும் வைத்துவிட்டது. இந்த அரசு பொறுப்பேற்றவுடனே உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் பல விடயங்களுக்கு எப்போதோ முடிவு கிட்டியிருக்கும். தற்போதுகூட, கோத்தபாயவுக்கு எதிரான அறிக்கை அமெரிக்க அரசிடம் சமர்ப்பிக்கப்படுமா? என்பதில் கூட சந்தேகம் எழுந்துள்ளது. கூட்டு எதிரணியில் கோத்தபாய முக்கியமான பங்கு வகிப்பதால் அவருக்குப் பாதிப்பு ஏற்படுவதை கூட்டு எதிரணியினர் அனுமதிக்கவே மாட்டார்கள். அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தவே அவர்கள் விரும்புவார்கள். இதை அரசு சமாளிக்குமா என்பதும் தெரியவில்லை. இலங்கை அறிக்கை சமர்ப்பித்து அதன் மீது கோத்தபாயவுக்கு எதிராக அமெரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமானால் அவரது அரச தலைவர் கனவு கலைந்து போய்விடுவதற்கும் வாய்ப்புள்ளது. அடுத்த அரச தலைவருக்கான தேர்தலில் இதனால் பெரிய மாற்றங்கள் ஏற்படுமென்பதையும் மறுத்துக் கூற முடியாது.

சேரலாதன்



# தமிழர்களின் சொந்த நிலங்கள் அவர்களிடமே சேரவேண்டும்

தாம் வாழ்ந்த தமது சொந்த இடங்களைப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் பார்க்கின்ற மக்களின் மன உணர்வுகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.
அண்மையில் வலிகாமம் வடக்கில் சுமார் 70 ஏக்கர் நிலப்பகுதி மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காடு மண்டிய நிலையில் காணப்படுகின்ற தாம் வாழ்ந்த நிலங்களைப் பார்க்கின்ற ஆவலுடன் அந்த மக்கள் அங்குமிங்குமாக அலைந்து திரிந்ததைப் பார்த்தபோது கண்களில் கண்ணீர் வராதவர்கள் இருக்க முடியாது.

**வளம் மிக்கது வலிவடக்குப் பிரதேசம்**

குடா நாட்டின் வட திசையில் அமைந்துள்ள வலிகாமம் வடக்குப் பிரதேசம் சிறந்த மண் வளத்தையும், கடல் வளத்தையும் கொண்டது. இங்கு வாழ்ந்த மக்கள் விவசாயத்திலும், கடற்றொழிலிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு செழிப்பான வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். கொடிய போர் அவர்களின் மகிழ்ச்சியான வாழ்க்கையைச் சீர் குலைத்தது. கூடு கலைக்கப்பட்ட தேனீக்கள் போன்று அந்த மக்கள் திக்குத்திசை தெரியாது வடபகுதியின் நாலா புறமும் சிதறி ஓடினார்கள். தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண்ணை விட்டுக் கலங்கிய கண்களுடன் அவர்கள் சென்ற காட்சி கல் நெஞ்சங்களையும் கலங்க வைத்தது. 28 ஆண்டுகள் என்பது நீண்டதொரு காலப்பகுதியாகும். இந்தக் காலப்பகுதியில் அந்த மக்களில் ஏராளமானோர் அகதிகள் என்ற அவப்பெயருடன் அங்குமிங்கும் அலைய நேரிட்டது. தொடர்ந்து இடம் பெற்ற போர் அவர்களை நிம்மதியாக வாழவிடவில்லை. தமது உறவுகள் பலரை இழந்த நிலையில் நிம்மதியான வாழ்வுக்கு இவர்கள் ஏங்கி நின்றனர்.
அவர்கள் உலவிய மண்ணில் அந்நியரின் காற்பாதங்கள் பதித்து கிடந்தன. எட்டி நின்று கூடத் தாம் வாழ்ந்த இடங்களை அவர்களால் பார்க்க முடியவில்லை. ஏக்கமும், கவலையும் அவர்களை வாட்டி வதைத்தன.

வலிகாமம் வடக்கின் சிறு பகுதி மட்டுமே படையினரால் விடுவிக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. பெருமளவு நிலப்பரப்பு இன்னமும் அவர்கள் வசமே உள்ளது. இதை முழுமையாக விடுவிப்பதற்கான உத்தரவாதம் எதையும் தற்போது எதிர்பார்க்க முடியவில்லை.

**தாம் பிறந்து வளர்ந்த சொந்த மண்மீது பற்று வைக்காதவர் எவருமிலர்**

சொந்த மண் என்பது மக்களின் உணர்வுகளுடன் பிணைந்த ஒன்று. மானமுள்ள எந்த மனிதனும் தனது சொந்த மண்ணை இழப்பதற்கு விரும்ப மாட்டான். மண் மீட்புக்கான போர்கள் உலகில் அதிகம் இடம்பெற்றிருக்கின்றன. தற்போதும் நடந்து கொண்டிருக்கின்றன. எமது அண்டை நாடான இந்தியா நிலம் தொடர்பான பிரச்சினைகளால் பாகிஸ்தானுடனும், சீனாவுடனும் முரண்பட்டு நிற்கின்றது. இந்த நாட்டிலும் குடியேற்றம்



என்ற போர்வையின் கீழ் தமிழர்களின் தாயக பூமி சிறிது சிறிதாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. தமது மண் மீதான உரிமையை அந்த மக்கள் இழந்து கொண்டிருக்கின்றனர். காலப்போக்கில் தமக்குச் சொந்தமான நிலமென எதையும் உரிமை கோர முடியாத நிலையில் தமிழர்கள் வாழப்போகின்றனர். போரைக் காரணம் காட்டி ஓர் இனத்தின் இருப்பைச் சிதைத்து விடுவதற்கு முயற்சி செய்வதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.
கலிங்கத்துடனான போரில் பெரு வெற்றியைப் பெற்ற மாமன்னன் அசோகன் போர் அழிவுகளைக் கண்டு மனம் வெதும்பினான். தானாகத் தொடக்கிய போர் காரணமாக கலிங்க மண்ணில் நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழந்து கிடந்ததையும், ஏராளமானவர்கள் தமது உடல் அங்கங்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் குருதி வெள்ளத்தில் தோய்ந்து கிடந்ததையும் கண்ட அவன் தனது நிலை மறந்து கதறி அழுதான். தனது தவற்றுக்குப் பிராயச்சித்தம் தேடி அலைந்தான். பௌத்த மதம் அவனை அரவணைத்துக் கொண்டது. பௌத்தமாக மாறிவிட்ட அசோகன் பௌத்த மதத்தைப்பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டான் தலைபிள்ளைகளான மகிந்தனையும், சங்கமித்திரையும் இலங்கைக்கு அனுப்பி அங்கும் பௌத்தத்தைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டான். அதே பௌத்த மதத்தைத் தனது வேதமாகக் கொண்ட இந்த நாட்டில் அன்பையும், இரக்கத்தையும்கருணையையும்காண முடியவில்லை.

**இறுதிப் போரில் தமிழர்களது உயிரிழப்புக்கள் குறித்து தென்னிலங்கை கவலைப்படவில்லை**

இறுதிப் போரின்போது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட போதிலும், ஏராளமானவர்கள் தமது அங்கங்களை இழந்து தவித்த போதிலும் தெற்கில் உள்ள எவரும் அதற்காக வருத்தப்படவில்லை. மாறாக பால்சோறு வழங்கித்தமதுமகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டதோடு வெற்றிக் கொண்டாட்டங்களிலும் ஈடுபட்டனர். மகிந்தனும், அவனது சகோதரியும் இதை இங்குள்ளவர்களுக்கு நிச்சயமாகப் போதித்திருக்கமாட்டார்கள்.

தமிழர்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட நிலங்கள் திரும்பவும் அவர்களிடமே வந்து சேர வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் அநாதைகள் போன்று அலைந்து கொண்டிருக்க, அவர்களுக்குச் சொந்தமான நிலங்களில் அந்நியர்களைக் குடியேற்றுவதும், வியாபார முயற்சிகளில் ஈடுபடுவதும எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்க செயல்களாகத் தெரியவில்லை. வலிகாமம் வடக்கில் மட்டுமல்ல ஏனைய இடங்களில் அபகரித்து வைக்கப்பட்ட நிலங்கள் யாவும் அந்த மக்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். தமது சொந்த நிலங்களில் அந்த மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.
இன்னுமொரு ஆயுதப்போரை இந்த நாடு தாங்க மாட்டாது என்பதால் மண்ணுக்கான போர் ஒன்று ஏற்படுவதற்கு அரசு வழி வகுக்க மாட்டாது என்றே நம்பலாம்.

## ஆசிரியருக்கான கடிதம்

# பட்டது போதுமே!


நாட்டின் இன்றைய அரசியல் சூழ்நிலையில் நாட்டு மக்களது மற்றெல்லாப் பிரச்சினைகளைவிடவும், கூட்டு எதிரணி தரப்பின் சார்பில் .எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடப்போகும் வேட்பாளர் யார்என்பது குறித்த எதிர்வுகூறல்கள், கருத்துவெளிப்பாடுகளே முக்கிய இடம் பிடித்துள்ளன. எத்தனைமுறை தோற்று மண் கவ்வினாலும், விட்டேனா பார் என்ற தோரணையில், எத்தகைய எதிர்ப்புக்கள் வந்த போதிலும், ஐ.தே.கட்சியின் சார்பான அரச தலைவர் வேட்பாளர் தானே என்று நெஞ்சை நிமிர்த்திக்கொண்டுகாய் நகர்த்துகிறார் ரணில்.

அதேசமயம் சிங்கள பௌத்த மக்களது தலைமையையும் இருப்பையும் உறுதி செய்யத்தக்க ஆளுமை மிக்க வேட்பாளர் கோத்தபாயவாகத்தான் இருக்க முடியும்என்ற பிம்பத்தை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கி பேரினவாதச் சிந்தனையைச் சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்தெடுக்க முனையும் தரப்பினர்கள் தமது நோக்கத்தில் கண்ணும் கருத்துமாகச் செயறப்பட்ட ஆரம்பித்துவிட்டுள்ளமையைத் தெளிவாக உணரமுடிகிறது.
இடையிடையே இலவுகாத்த கிளிகளாய், நம்பி நம்பி ஏமாந்து, இன்றைக்கு நட்டாற்றில் விடப்பட்டுத் தவிக்கும் ஈழத் தமிழ் மக்களை 'தாஜா' செய்யும் வகையில் கெஹகலிய றம்புக்வல, ஜீ.எல்.பீரிஸ் மற்றும் பசில் ராஜபக்ச போன்றோர், மகிந்த தரப்பின் ஆட்சி அமைந்ததும் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்று 'தண்ணி' காட்டப் புறப்பட்டுள்ளனர்.
அதேசமயம், தமிழர் தரப்புத் தலைவர்களோ, நாட்டின் வடபகுதியில் தமிழ்மக்கள் அச்சம், பதற்றம்எவையுமின்றி தமது நாளாந்த இயல்பு வாழ்க்கை யைத் தொடர வழிசெய்ய இயலாதநிலையில், விழிப்பாக இருந்து, 'விழிப்புக்குழு'க்களாகச்செயற்பட்டு தமிழ்மக்கள் தமது பாதுகாப்பைத் தாமே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறுமளவுக்கு, யாரொடு நோவேன், யார்க்கெடுத்து உரைப்பேன் என்று ஒரு புறம் தமிழ் மக்களை தாஜா பண்ணிக் கொண்டாலும், அடுத்த வடக்கு முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு குறித்து ஆளுக்காள் கருத்து வெளியிடுவதில் காலத்தைச் செலவிடுவதாக எண்ணத் தோற்றுகிறது.
இந்த நிலையில் தத்ததமது வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்துச் சிந்திப்பதா? அன்றன்றைய தமது வாழ்க்கைப் பிரச்சினைகள் குறித்துச் சிந்திப்பதா? அல்லது தமதும் தமது குடும்ப உறவுகளதும் பாதுகாப்புக் குறித்துச் சிந்திப்பதா என்று தலையைச்சொறிந்து கொள்ளும்நிலையில் வடபகுதித் தமிழ்மக்கள் இருப்பதாகக் கொள்வதில் தப்பேதும் இல்லை.
இந்த நிலையில் நாட்டின் அரசியல் குறித்து சிந்திக்கும் நிலையிலா இன்று எம்மவர்கள் இருக்கிறார்கள்? எனக் கொள்வதில் தவறென்ன?

*வ.தவலிங்கம், கைதடி.*

# பாடகராக மாறிய நடிகர் சூர்யா!

வெங்கட் பிரபு இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'பார்ட்டி' என்ற படத்திற்காக ஒரு பாடலை நடிகர் சூர்யா பாடியுள்ளார். நடிகர் ஜெய், மிர்ச்சி சிவா, நிவேதா பேத்துராஜ், சஞ்சிதா செட்டி உள்ளிட்ட நட்சத்திரங்கள் இந்த படத்தில் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இந்நிலையில் சூர்யா, கார்த்தி இணைந்து பாடியுள்ள இந்த பாடலை படக்குழு சமூகவலை தளங்களில் வெளியிட்டுள்ளது.



கோவிலில் செருப்பு தொலைஞ்சு போனா உடனே கடவுளைத் திட்டக் கூடாது சுத்தி தேடிப் பாக்கனும்



அதைவிட காஸ்ட்லி செருப்புக் கிடைக்கும்...

ஏய்யா 'வைபை' சரியில்லை எண்டு சொல்ல சொன்னா





வைபுக்கு சரியில்லை எண்டு சொல்லியிருக்கிறியா....

போஸ்ட் மேன் எப்படா இன்டர்வியூ கார்ட் கொண்டு வருவார்னு காத்திருந்த காலம் போய்





போஸ்ட்டுக்கு எத்தன பேருடா லைக் போடுவாங்கனு காத்திருக்கும் காலமா ஆச்சு..



## உலகை வசீகரித்த ஹிட்லரின் வாசகங்கள்

- தோற்றவன் புன்னகைத்தால் வெற்றியா ளன், வெற்றியின் சுவையை இழக்கிறான்.
- பின்னால் இருந்து நீ விமர்சிக்கப்பட்டால் நினைத்துக்கொள் நீ முன்னால் இருக்கி றாய் என்று.
- நீ நண்பனாக இரு. உனக்கு எவரேனும் நண்பனாக இருக்க வேண்டும் என ஆசை கொள்ளாதே.
- வெற்றிபெறுவதுஎப்படிஎன்றுயோசிப்பதை விட தோல்வியடைந்தது எப்படி என்று யோசித்துப்பார்.
- மடையனுடன் விவாதிக்காதே. மக்கள் உங் கள் இருவரையும் பிரித்தறிவதில் தவறி ழைத்துவிடலாம்.
- புகழை மறந்தாலும் நீ பட்ட அவமானத்தை மறக்காதே. இன்னொரு முறை உன்னை அவமானப்படாமல் காப்பாற்றும்.
- நீவெற்றிபெற்றுவிட்டால்யாருக்கும் விளக் கம்சொல்லத் தேவையில்லை. தோல்வி அடைந்துவிட்டால் விளக்கங்கள் சொல்ல நீயே தேவையில்லை.
- நாம்எல்லோரும்நிலவைப்போன்றவர்கள். அதற்கு இருளான ஒரு பக்கமும் உண்டு.
- பேசப்படும் சொல்லை விட எழுதப்படும் சொல்லே வலிமை வாய்ந்தது
- பல முட்டாள்கள் சேர்ந்து நடத்துவதுதான் ஜனநாயகம் என்றால் அதை விட ஒரு புத்தி சாலியின் சர்வாதிகாரம் மேல்.
- என்னை யார் தோற்கடித்தது என்று பார்த் தேன். வேறு யாரும் அல்ல கோபம்தான் என்னைத் தோற்கடித்தது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**இடபம்:** பேச்சு, செயலில் உற்சாகம் வெளிப்படும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் உயரும். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை சந்திப்பர்.

**கடகம்:** சிலர் உங்களிடம் உதவி கேட்டு அணுகுவர். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ற முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**சிங்கம்:** நண்பர், உறவினரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**கன்னி:** குடும்பத்தினர் ஆதரவு வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. இலாபம் சுமார்.

**துலாம்:** மனதில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வெகுநாள் விரும்பிய பொருள் வாங்குவர்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட பணிகளில் கவனம் கொள்வது நல்லது. தொழில் வியாபார நடைமுறை மந்தகதியில் இயங்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** குடும்பத்தினர் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூற்றை உடனுக்குடன் சரி செய்வது நல்லது. லாபம் சுமார்.

**மகரம்:** நண்பர் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் அதிகாரிகளின் மத்தியில் நற்பெயர் காண்பர்.

**கும்பம்:** மற்றவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபார விஷயமாக வெளியூர் செல்ல நேரிடும். பெண்களுக்கு நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மீனம்:** அனுபவசாலிகளின் அறிவுரையை ஏற்று நடப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். இலாபம் பெருகும்.

## twitter

**கடைநிலை ஊழியன்**

"செல்வம்" என்று சொன்னதும் உங்கள் மனதில் பணத்தைப் பற்றிய சிந்தனை தோன்றினால், நீங்களும் என்னைப் போல் ஒரு சராசரி மனிதன் !!



**ஆசிரியர்:** பாபுளங்கிருந்து எதுவரை முகலாயர்கள் ஆண்டார்கள்?

**பாபு:** 16ஆம் பக்கத்திலிருந்து 25 ஆம் பக்கம் வரைக்கும் சேர்...

**ஆசிரியர்:** ?????

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 8 | | 9 | | | | 5 |
| | | | | 4 | | | 8 | |
| 1 | | 5 | | | 8 | 6 | | |
| | 2 | | | | | 4 | | |
| | | 9 | 1 | | 7 | 3 | | |
| | | 6 | | | | | 2 | |
| | | 2 | 8 | | | 1 | | 3 |
| | 6 | | | 1 | | | | |
| 8 | | | | 5 | | | 4 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 1 | 6 | 3 | 4 | 2 | 5 | 7 |
| 5 | 7 | 2 | 8 | 9 | 1 | 4 | 3 | 6 |
| 6 | 3 | 4 | 2 | 5 | 7 | 9 | 1 | 8 |
| 7 | 1 | 8 | 3 | 2 | 6 | 5 | 9 | 4 |
| 9 | 2 | 3 | 4 | 8 | 5 | 6 | 7 | 1 |
| 4 | 6 | 5 | 1 | 7 | 9 | 3 | 8 | 2 |
| 2 | 8 | 6 | 5 | 1 | 3 | 7 | 4 | 9 |
| 3 | 4 | 7 | 9 | 6 | 8 | 1 | 2 | 5 |
| 1 | 5 | 9 | 7 | 4 | 2 | 8 | 6 | 3 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

உதயன்
புதன் பொய்கை
ஜூலை 04 2018
Uthayan Print
newuthayan.com
@UthayanPrint

# கம்பராமாயணப் பாடல்களில் இழையோடும்

# கம்பரின் கவித்துவமும் இலக்கிய நயமும்

இரா. நிசாந்தன்

இலக்கியம் என்பவை மனிதனை வாழ வழி சமைப்பனவாகும். மனித உள்ளத்தில் இன்ப அலைகளை அளித்திடும் அட்சயபாத்திரம் இலக்கியம் எனலாம் அத்தகு தமிழ் இலக்கிய வரலாற்றில் தோற்றம் பெற்ற இலக்கியங்களை எண்ணற்ற புலவர்கள், இலக்கிய ஆசிரியர்கள் ஆகியோர் ஒன்றாக சோர்ந்து சமைத்துள்ளனர். அத்தகு புலவர்களில் தனித்துவமான கவியாற்றல் படைக்கும் ஆற்றல் உடையவர் கம்பர். ஆகவே தான் கவிச்சக்கரவர்த்தி எனும் பட்டத்தினை பெற்றுக் கொண்டார். கம்பரின் கவித்துவச் சிறப்பினை எடுத்துரைக்கும் ஈடு இணையில்லாத காப்பியம் இராமாயணமாகும்.

வால்மீகி முனிவரால் இயற்றப்பட்ட இராமாயண இதிகாச காவியத்தினை தமிழில் கம்பராமாயணம் எனும் பெயரில் இயற்றுதல் செய்தார் கம்பர். அத்தகு கம்பராமாயணத்தில் கற்பனை செய்து பார்க்க முடியாத நயமும், கவித்துவச் சிறப்புக்களையும், இரசனையினையும், வர்ணனைகளையும் பல பாடல்களில் ஊடுரச் செய்திருக்கின்றார். கம்பரமாயணத்தில் ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு சிறப்பும், நயமும், கவித்துவமும் இழையோடும் தன்மை உள்ளத்தில் உவகை சேர்க்கும். அத்தகு சில உதாரணங்களை இங்கு கண்ணுறுவோம்.

ஆசை கொண்டு பாடலுற்றேன் இராம கதையை கம்பராமாயணத்தில் அவையடக்கப் பாடல் ஒன்றினைப் பாடுகின்றார் கம்பர்.

**ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று ஒரு**
**பூசை முற்றவும் நக்குப் புக்கென**
**ஆசை பற்றி அறையலுற்றேன் மற்று இக்**
**காசு இல் கொற்றத்து இராமன் கதை ஆரோ**

அதாவது, ஆரவாரம் மிக்க பாற்கடலின் கரையில் ஒரு பூனை சென்று, அந்தப் பாற்கடலில் உள்ள பாலை தன் நாவினால் நக்கிக் குடித்து விடுவேன் என தனக்குள் எண்ணியதாம். அது போல (கம்பர்) தானும் ஈடு இணையற்ற இராமனின் கதையினை தமிழில் பாடுவதற்கு முயன்றுள்ளேன் எனப் பாடினார்.

இந்தப் பாடலில் கம்பரின் கவித்துவத்தை நோக்கும் போது, பாற்கடலை அடைகின்றது ஓர் பூனை. சிறிதளவு பாலைக் கண்டாலே ஆசை கொள்ளும் பூனை பாற்கடலையே கண்டால் அதன் ஆசை எப்படியிருக்கும். அது உடனே அந்தப் பாற்கடலில் உள்ள பால் முழுவதையும் தன் நாக்கினால் நக்கிக் குடித்து விடுவேன் என தன்னுள் எண்ணியதாம். ஆனால் அது இயலாத காரியம் என்பதை அந்தப் பூனை அறியாது. அது போலே குற்றமில்லாத, பெருமை நிறைந்த இராமனின் கதையினை தானும் ஆசை கொண்டு பாடுவதற்கு முற்படுகின்றேன் எனக் கம்பர் கூறுகின்றார்.

### அழியாத அழகுடையவன் இராமன்

இராமபிரான் தன் தந்தையின் ஆணை ஏற்று தன் மனைவி சீதையுடனும், தன் இளவல் இலக்குவனனுடனும் வனவாசம் செல்கின்றார். அவ்வாறு இராமபிரானின்; வனவாச காலத்தில்,ஒரு நாள்காலைப் பொழுது ஒன்றில் நடந்து செல்கின்றார். அப்போது இராமபிரான் மேனியில் சூரியனின் ஒளிக்கதிர் பட்டுத் தெறிக்கின்றது. இந்த நிலையில் இராமபிரான் திருமேனியழகினை அழகுறப் பாடுகின்றார்.

**வெய்யோன் ஒளி தன் மேனியின்**
**விரி சோதியில் மறைய**
**பொய்யோ எனும் இடையாளோடும்**
**இளையானொடும் போனான்**
**மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ**
**ஐயோ இவன் வடிவு என்பது**
**ஓர் அழியா அழகு உடையான்**

அதாவது, சூரியனின் ஒளிக்கதிர்கள் தன் மேனியில் வெளிப்படும் சோதியுடன் இணைந்து கொள்ள, இருக்கின்றதோ, இல்லையோ என்று சொல்லும் படியான சிறிய இடையினைக் கொண்ட சீதையுடனும், தம்பி இலக்குவனனுடனும் செல்கின்றான். மையோ அல்லது மரகதமோ, அலைகளையுடைய கடலோ, கரிய மழைமுகிலோ, ஐயோ இவன் அழகு என்பது என்றும் அழியாத தன்மை கொண்டதாக விளங்குகின்றதே என்கின்றார் கம்பர்.

இந்தப் பாடலில் வெளிப்படும் கம்பரின் கவித்துவச் சிறப்பினை கண்ணுறுவோம். இராமன் திருமேனியில் இருந்து வெளிப்பட்ட ஒளியானது சூரியனின் ஒளிக்கதிர்களையும் மங்கச் செய்து விடுகின்றனவாம். மேலும் இராம பிரான் திருமேனியின் அழகினைப் பாடுவதற்கு கம்பனே பல வார்த்தைகளைத் தேடுகின்றான். ஒவ்வொன்றாக சொல்லுகின்றான். முதலில் மையோ அதாவது மையின் நிறமோ என்றால் அது இல்லை. பின் மரகதத்தின் நிறம் படைத்தவனோ என்றால் அதுவும் இல்லை. பின் கடலின் நிறம் கொண்டவனோ என்றால் அதிலும் திருப்தியில்லை. பின் மழை மேகம் போன்ற வண்ணம் படைத்தவனோ என்கின்றான் கம்பர். அதிலும் நிறைவில்லை அவனுக்கு இறுதியில் ஐயோ எனச் சொல்லியே விடுகின்றான் கம்பர். இவன் அழகினை எவற்றுடன் ஒப்பிடுவது என கம்பனே தடுமாற்றம் அடைகின்றான். இராமன் அழகினைப் பாடுவதற்கு பல வார்த்தைகளை கோர்த்தாலும் அவை எதுவும் இராமனின் அழகிற்கு இணையாகவில்லையே என ஆதங்கம் கொள்கின்றான் கம்பர். இறுதியில் என்றும் அழிவில்லாத அழகு படைத்தவன் இராமன் என ஒருவாறு நிறைவு கொள்கின்றான் கம்பர். ஆக நாமும் நிறைவு பெறுவோம்.



> கவியாற்றல் படைக்கும் ஆற்றல் உடையவர் கம்பர். ஆகவே தான் கவிச்சக்கரவர்த்தி எனும் பட்டத்தினை பெற்றுக் கொண்டார். கம்பரின் கவித்துவச் சிறப்பினை எடுத்துரைக்கும் ஈடு இணையில்லாத காப்பியம் இராமாயணமாகும்.

**கை வண்ணம் அங்கு கண்டேன்**
**கால் வண்ணம் இங்கு கண்டேன்**

கம்பரின் மிகச் சிறந்த கவித்துவத் தன்மைக்கு எடுத்துக் காட்டு இதுவாகும். கௌதம முனிவரின் சாபத்தின் காரணமாக கல்லாகக் கிடந்த அகலிகை



எனும் பேதைக்கு இராமபிரான் தன் திருப்பா தங்கள் வாயிலாக சாபவிமோசனம் நல்கினான்.
இராமனின் பாதம் பட்டதும் கல்லாகக் கிடந்த அகலிகை பெண்ணாக மாற்றம் பெற்றாள். இந்தக் காட்சியைக் கண்ணுற்ற விஸ்வாமித்திர முனிவர் இராமனைப் புகழ்ந்து பாடல் பாடினார். இதனைக் அப்படியே கம்பர்,

**இவ் வண்ணம் நிகழ்ந்த வண்ணம்**
**இனி இந்த உலகுக்கு எல்லாம்**
**உய் வண்ணம் அன்றி மற்று ஓர்**
**துயர் வண்ணம் உறுவது உண்டோ**
**மை வண்ணத்து அரக்கி போரில்**
**மழை வண்ணத்து அண்ணலே**
**உன் கை வண்ணம் அங்கு கண்டேன்**
**கால் வண்ணம் இங்கு கண்டேன்**

எனவாறு அழகுறப் பாடல் சமைத்தார்.

இதன் பொருள், இந்த நிகழ்வு முற்காலத்தில் நடந்த முறையாகும். இனி இந்த உலகில் உள்ள உயிர்களுக் கெல்லாம் துன்பம் நீங்கி அதிலிருந்து விடுபடும் வழி தான் இல்லாமல் அதற்கு வேறானதொரு துன்பத் தின் வழி உண்டோ (இல்லை), மை போன்ற கரிய நிறத்தை உடைய தாடகை எனும் அரக்கி யோடு நடந்த போரில் கரிய மழை மேகம் போன்ற திருமேனி படைத்த இராமனே, உன் கையின் வலிமையை அங்கே கண்டேன் (தாடகையை கையில் தாங்கிய வில்லால் கொன்றமை) உன் திருப்பாதங்களின் தன்மையினை இங்கே கண் டேன் (அகலிகைக்கு விமோசனம் அளித்தல்) என அமைவுறுகின்றது.
இந்தப் பாடலில் கம்பர் வண்ணம் எனும் சொல்லை எட்டு இடங்களில் காப்பியம் செய்திருக்கின் றார். இது இப்பாடலில் அழகிய கம்பரின் கவித்துவத்தை எடுத்துரைக்கின்றது. அவையாவன, இவ் வண்ணம், நிகழ்ந்த வண்ணம், உய் வண்ணம், துயர் வண்ணம், மை வண்ணம், மழை வண்ணம், கை வண்ணம், கால் வண்ணம் என்பனவாகும். இறைவனை எண்கு ணத்தான் என கூறுவதை நாம் அறிவோம்.
இதில் மை வண்ணத்து அரக்கி மற்றும் மழை வண் ணத்து அண்ணல் எனும் இரு இடங்களும் நயம் பொதிந்தவை. தாடகை எனும் அரக்கியையும், இராமனையும் கருமை நிறம் படைத்த வண் ணமாகவே காண்கின்றான் கம்பர். மை போன்று தீய குணங்களால் நிறைந்த கரிய நிறத்தை தாடகைக்கும், பிறருக்கு கொடுப்பதற் காக நீரைச் சுமந்து கருமை நிறம் கொண்ட கருமேகத்தை இராமனுக்கும் உவமை செய்த கம்பனின் கவித்திறன் வியக்கத்தக்க தாகும்.

### வஞ்சமகள் வந்தாள்

கம்பரின் மற்றுமொரு கவித்துவத் தன்மை பொதிந்த இடம் இதுவாகும். இராமபிரான் தன் மனைவி சீதை மற்றும் தம்பி இலக்குவனனு டன் வனவாசம் மேற்கொண்டுள்ள காலத்தில், ஒரு முறை வனத்தில் இராவணன் தங்கை சூர்ப்பனகை இராமனைக் காண்கின்றாள். கண்டதும் இராமன் மீது மையலுற்றாள். உடன் தன் விருப்பத்தை இராமனிடம் கூறுவ தற்கு முற்பட்டாள். ஆனால் தான் கொண்டுள்ள அரக்கி வடிவத்தில் இராமனிடம் சென்றால் அவன் தன்னை ஏற்க மறுப்பான் என்பதனால் தன் மாயசக்தியினால் அழகிய பெண் வடிவம் எடுத்து இராமனிடம் நடந்து வருகின்றாள்.

அழகு என்றால் அப்படியொரு அழகு. இதனை கம்பர்,

**பஞ்சி ஒளிர் விஞ்சு**
**குளிர் பல்லவம் அனுங்கச்**
**செஞ் செவிய கஞ்சம்**
**நிகர் சீரடியள் ஆகி**
**அஞ் சொல் இள மஞ்ஞை என அன்னம் என**
**மின்னும் வஞ்சி என நஞ்சம்**
**என வஞ்ச மகள் வந்தாள்**

எனப் பாடினார்.

அதாவது, பஞ்சு போன்ற மென்மையான பாதங்கள் பட்டு குளிர்ச்சியான தளிர்களும் வருந்தும் படியாக, செக்கச்சிவந்த செந்தா மரை போன்ற மெல்லிய பாதங்களை அடி வைத்து, அழகும் இளமையும் பொருந்தியதும் இனிமையாக அகவுகின்ற மயில் போலவும், நடைக்கு புகழ் பெற்ற அன்னம் போலவும், மின்னுகின்ற வஞ்சிக் கொடி போலவும், கொடிய விசம் போன்ற உள்ளத்தில் வஞ்சனை கொண்டு சூர்ப்பனகை இராமன் முன்பாக நடந்து வந்தாள். இங்கு கம்பனின் கவித்தி றனை கண்ணுறுவோம். சூர்ப்பனகை அழ கிய பெண் உருவம் எடுத்து வருகின்றாள். அவள் அழகு நலன்கள் அனைத்தும் உண் மையானவை. ஆனால் அவள் உள்ளத்தில் வஞ்சனை நிறைந்திருக்கின்றது. இராமனை எப்படியும் அடைய வேண்டும் எனும் எண்ணமே அதுவாகும். ஆகவே தான் வஞ்சமகள் வந்தாள் என கம்பர் சொல்லா டல் செய்தார். சூர்ப்பனகையின் நடையழகு, உடைய ழகு, உடலழகு எல்லாமே உண்மை. ஆனால் அவள் எண்ணம் மட்டும் வஞ்சனை. என்ன ஒரு கற்பனை.

### அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்

இலக்கியம் படிக்கும் அனைவரும் அறிந்து கொண்டுள்ள தாரக மந்திரம் இந்த அண்ணலும் நோக்கினன், அவ ளும் நோக்கினள் என்பதாகும். கம்பர் வடித்த இந்த வரிகள் எல்லோர் மனதிலும் நிறைந்திருப்பதற்கு அதில் உள்ள கவித்துவச் சிறப்பே காரணமாகும். இராமபிரான் விஸ்வாமித்திர முனிவருடன் அரக்கர் அழிவினை ஆரம்பித்து வைத்து மிதிலை நகரை வந்தடைகின்றனர். மிதிலை சீதை வாழும் இடம். அங்கே கன்னிமாடத்தில் சீதை தோழியருடன் நிற்கின்றாள். கீழே வந்த இரா மனை கண்டு கொண்டாள் சீதை. இராமனும் சீதை யைத் தன் கண்களால் கண்ணுற்றான். அவர்கள் இரு வரிடமும் அன்பு ஊற்றெடுத்தது. இருவரது பார்வைக ளும் ஒன்றாக பின்னிப்பிணைந்தன. பாடலை அழகுற காண்பிக்கின்றார் கம்பர்.

**எண்ண அரு நலத்தினாள் இனையள் நின்றுழி**
**கண்ணொடு கண் இணை கவ்வி ஒன்றை ஒன்று**
**உன்னவும் நிலை பெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்**



அதாவது, அழகின் எல்லை இது தான் என எம் மனத் தால் நினைப்பதற்கு அரியதான அழகினையுடைய சீதை பெரும் அழகு படைத்தவளாக கன்னி மாடத்தில் நின்ற பொழுது, (இராமன் மற்றும் சீதையின் ) ஒருவர் கண்க ளொடு மற்றவர் கண்கள் ஒன்றையொன்று பற்றி (கவ்வி) உண்ணவும் அவர்கள் இருவரது பார்வைகளும் ஒன்று பட்டு கலக்கவும் இராமன் சீதையைப் பார்த்தான், சீதை யும் இராமனை நோக்கினாள்.
இதில் என்ன நயம் உள்ளது எனக் கேட்கலாம். கண் ணொடு கண் இணை கவ்வி ஒன்றை ஒன்று உண்ண வும் எனும் வரிகளை காணுங்கள். இராமனின் கண்க ளும் சீதையின் கண்களும் ஒன்றையொன்று பார்த்தன. பின் ஒருவர் கண்கள் மற்றவர் கண்களை கவ்விக் கொண்டன. பின் அவர்கள் கண்கள் ஒன்றை ஒன்று உண்டு கொண்டன என்கின்றார் கம்பர். கண்களும் கண்களை உண்ணும் என்பதை காப்பியம் செய்த கம் பனின் கவியாற்றல் வியக்க வைக்கின்றதல்லாவா?

### உடல் புகுந்து தடவியதோ ஒருவன் அம்பு

இராமனின் அம்பு பட்டு யுத்த பூமியில் வீழ்ந்து கிடக்கின் றான் இராவணன். இதனைக் கண்ணுற்ற அவன் மனைவி மண்டோதரி அவன் நிலையினைக் கண்டு அழுது புலம்புகின்றாள். அந்தப் புலம்புலையும் ஓர் இலக் கியச் சிறப்புடன் பாடல் கொண்டு அமைத்தார் கம்பர்.

**வெள் எருக்கம் சடை முடியான் வெற்பு எடுத்த**
**திருமேனி மேலும் கீழும் எள் இருக்கும் இடம்**
**இன்றி உயிர் இருக்கும் இடம் நாடி இழைத்தவாறோ?**
**உயிர் இருக்கும் இடம் நாடி இழைத்தவாறோ?**
**கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை**
**மனச் சிறையில் கரந்த காதல் உள் இருக்கும்**
**எனக் கருதி உடல் புகுந்து தடவினவோ ஒருவன் வாளி**

இந்தப் பாடலுக்கு கம்பர் பின்வருமாறு பொருள் தருகின் றார். வெண்மையான எருக்கம் மலரைச் சூடிய சடாமுடி படைத்த சிவபெருமானின் கைலாயமலையைப் பெயர்த் தெடுத்தவனாகிய இராவணனின் உடலில் மேலும், கீழும் எள் அளவும் மீதம் இல்லாமல் உயிர் இருக்கும் இடம் தனை தேடி அறிந்தவாறு, தேன் நிறைந்துள்ள மலர்களைச் சூடிய கூந்தலைக் கொண்:ட சீதையை மனம் எனும் சிறையில் வைத்து அவள் மீது கொண்ட காதலானது உடலில் எங்கெல்லாம் இருக்கின்றாதோ என இராமனின் அம்பானது துருவித் துருவி தடவிப் பார்த்துள்ளதோ? என புலம்புகின்றாள் மண்டோதரி.
இந்தப் பாடலில் இழையோடும் கம்பனின் கற்பனைத் திறனை நோக்கும் போது, இராவணன் சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருக்கைலாய மலையினையே பெயர்த் தெடுத்த வலிமை படைத்தவன். அத்தகு இராவணனின் திருமேனியில் இராமனின் ஒப்பற்ற இராமபாணம் சென்று அவன் உயிர் இருக்கும் இடத்தை தேடி தாக்கிய தாம். ஆனால் இதற்கு மேலாக கம்பர் காட்டும் இடமே நயக்கத்தக்கது. இராமனின் அம்பு இராவணனின் உயிர் எங்குள்ளது என்பதை மட்டும் தேடவில்லையாம். அவன் உள்ளத்தில் எங்காவது சீதையின் மீதான காதல் உள்ளதோ என உடல் முழுவதும் தட வித் தேடியதாம் என்கின்றார். அதாவது தேன் நிறைந்துள்ள மலர்க் கூந் தலையுடைய சீதையைத் தன் மனம் எனும் சிறையில் வைத்தவன் இராவணன். ஆக சீதை மீதான காதல் அவன் உடல் முழுவதும்நிறைந்திருந்தது. ஆகவே தான் இராமனின் அம்பானது இராவணன் உடல் முழுவதும் துருவித் துருவி சென்று சீதை மீதான காதல் எங்கெல் லாம் உள்ளது என தடவித் தேடியதாம் என்கின்றார் கம்பர்.
இவ்வாறு கம்பரின் கவியாற்றலுக்கு சான்று பகிரும் ஒரு சில பாடல்களை நாம் இங்கு கண்ணுற்றோம். இவை தவிர இன்னும் ஏராளமான பாடல்கள் கம்பராமாயணத் தில் கம்பரின் கவித்துவச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக அமையப் பெறுகின்றன. இவற்றை மேலோட்டமாக படித்தால் அதில் இழையோடும் நயத்தையோ, இரசனை யையோ கண்டறிய முடியாது. மாறாக பாடலை ஆழ மாக கருத்தூன்றி படியுங்கள், அப்போது அதில் புலப்படும் கவித்துவச் சிறப்பினையும், இலக்கிய நயத்தையும் நீங்களும் சுவைத்து உவகை அடைவீர்கள் என்பதில் ஐயமில்லை.

> “இலக்கியம் படிக்கும் அனைவரும் அறிந்து கொண்டுள்ள தாரக மந்திரம் இந்த அண்ணலும் நோக்கினன், அவளும் நோக்கினள் என்பதாகும். கம் பர் வடித்த இந்த வரிகள் எல்லோர் மனதிலும் நிறைந்திருப்பதற்கு அதில் உள்ள கவித்துவச் சிறப்பே காரணமாகும்.

தென்னவன்

# தென்மராட்சி கல்வி வலய
# ஏழிசை மாலை 24

கலைகளுக்கெல்லாம் தாயாக விளங்குவது இசையாகும். இசையினை முழுமையாகப் பயின்றவர் ஏனைய கலைத் துறைகளை இலகுவில் கற்றுவிடுகிறார். இசை வளர்வதற்கு ரசிகர்கள் தேவை இரசிப்புத் தன்மை இல்லாத கலையினை முன்னெடுப்பது கடினமாகும். இசை யென்பது காலம் காலமாக பாரம்பரியத்துக்கு ஏற்ப வளர்க்கப்பட்டு வருகிறது. நீண்ட பாரம்பரியங்களைக் கொண்ட இசையினை நாம் கட்டிக் காப்பாற்ற வேண்டியது அவசியமாகும். இறைவனின் படைப்பில் உருவான அனைத்துப் பொருள்களிலும் உயிரினங்களிலும் அவற்றின் ஒலி வடிவங்களில் இசை வடிவங்களை காண்கின்றோம். காய்ந்த இலையிலும்பாய்ந்தோடும் அருவியி லும் பறவைகளின் மிருகங்களின் சப்தங்களிலும் எழும் ஒலியானது இசை வடிவமாக மாறுகி ன்றன.







நம்வாழ்வில் காணும் சாஸ்திரீய சங்கீதம், நாட்டார் பாடல், தென்மோடி கூத்துக்கள், நாடகங்கள் போன்றவை இசையின் வடிவங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டு நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முன்னைய காலங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் பல்வேறு வகையான கலைஞர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். ஒரு இசைக் கருவியிலிருந்து எழும் நாதத்திற்கு பக்க வாத்தியம் ஒன்று தேவைப்பட்டதால் அவ்வாறான கலைகளைக் கற்பதில் பலர் நாட்டம் கொண்டு கலைகளை வளர்த்துள்ளனர். இன்றைய காலத்தில் சிலசில துறை சார்ந்த கலைஞர்கள் மேலதிகமாகக் காணப்படுகின்ற போதிலும் சில துறைசார் கலைகள் அழிந்து விடும் நிலையில் உள்ளதைக் காணமுடிகிறது. கலைகளை வளர்ப்பதில் மக்களிடம் காணப்படும் ரசிப்புத்தன்மை குறைவடைந்ததால் அவ்வாறான கலைகளைப் பயில முன்வராதமை காரணம் எனலாம்.

**ஏழிசைமாலையின் தோற்றம்**

தென்மராட்சிப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இசைக் கலைகள் நீண்டகாலப் பாரம்பரியத்தைக் கொண்ட வையாக உள்ளன. சிறந்த வாய்ப்பாட்டுக் கலைஞர்களு டன் பக்க வாத்தியங்களை வாசிக்கவும் பிற்பாட்டுப் பாடவுமென பலர் காணப்பட்டனர். ஒவ்வொரு இசைக்கலைஞருக்கும் அணிசேர் கலைஞர்கள் அந்தக் கிராமத்திலேயே காணப்பட்டதால் இசைக்கலை நீண்டகாலமாக வளர்ந்து வந்துள்ளது. இவ்வாறான நீண்டகால பாரம்பரியமிக்க கலைகளை மீண்டும் உயிர்ப்பிக்க தென்மராட்சி கல்வி வலயம் முன்னெடுத்துச் செயல்படுவது தென்மராட்சி மண் பெற்ற பாக்கியமாகும். வலயப் பாடசாலைகளிலும் இசையாசிரியைகள் உள்ளபோதிலும் அவர்களால் பெருமளவு மாணவர்கள் இசையினைப் பயில்கின்ற போதிலும் அவர்களின் தரம் என்னவென்று மதிப்பிட முடியாத நிலை காணப்பட்டது. இந்த நிலையில் தென்மராட்சி கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராகவிருந்த சு.கிருஸ்ணகுமார் பாடசாலைக ளில் கற்பிக்கும் இசை ஆசிரியர்களை வரவழைத்து கலை உலகுக்கு இந்த மண் வழங்கிய சேவையினை மீண்டும் உயிர்ப்பிப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தியபோது இசைத்துறையினை வளர்க்க ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பாடசாலையிலும் இசை நிகழ்வை நடத்த முடிவு செய்தனர். அதன் பயனாக கடந்த 2015 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதே 'ஏழிசை மாலை' என்னும் நிகழ்வாகும். ஏழிசை மாலை நிகழ்வினை நடத்தும் பாடசாலையின் இசை ஆசிரியர் மற்றும் இசைபயில் மாணவர்களின் நிகழ்வுகளுடன் அயல் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் ஆகியோருக்கும் இசை நிகழ்வுகளை நடத்தவேண்டுமெனவும் முதல் மூன்று மாதங்கள் பாடசாலைகளில் பாடசாலை நிகழ்வாகவும் நான்காவது மாதம் வலய நிகழ்வாகவும் மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமையில் நடத்துவதென வும் முடிவு செய்யப்பட்டது. பாடசாலை நிகழ்வுகளில் இசை ஆசிரியர்கள் இசை பயில் மாணவர்கள் ஆகியோரின் நிகழ்வுகளையும் வலய நிகழ்வுகளில் பாடசாலைக்கு வெளியே உள்ள இசைக் கலைஞர்களை வரவழைத்து நிகழ்வுகளையும் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

**24ஆவது மாலை**

அதன் பிரகாரம் பாடசாலைகளில் நடத்தப்படும் 24ஆவது நிகழ்வாக கடந்த வெள்ளிக்கிழமை (29.06.) சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது. கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறை இளநிலை விரிவுரையாளர் எஸ்.எஸ்.உதயகுமாரும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச கலாசார அலுவலர் சிவ.முகுந்தனும் கலந்து கொண்டனர். வழமை போல் ஏழிசை மாலை நிகழ்வினைக் காண ஏராளமானோர் வருகை தந்திருந்தனர்.

நிகழ்வில் கல்லூரி இசை ஆசிரியை திருமதி வரத ஜெனனி தேவராஜனின் இசைக் கச்சேரியும் அதனையடுத்து கல்லூரியின் இசைபயில் மாணவி சோமினி



சுரேந்திரலிங்கத்தின் தனி இசையும் இடம்பெற்றன. இருவரும் ஒருவரையொருவர் இசைத்துறையில் தேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இருவரின் இசை மழையில் நனைந்த ரசிகர்களின் கைகளும் கால்களும் தாளமிசைத்ததைக் காணமுடிந்தது. அவ்வளவு சிறப்பான குரல்வளம் இருவருக்கும் காணப்பட்டது. இருவருக்கும் பாராட்டுக்கள். அடுத்து உசன் இராமநாதன் மகா வித்தியாலய சப்தசுர கன்னிகளின் குழு இசையும் அடுத்து பாடசாலைகளின் இசையாசிரியர்களான பஞ்ச குயில்களின் குழு இசையும் காதுக்கு இனிமை ஊட்டுவனவாகக் காணப்பட்டன. இவர்கள் ஒரு உருப்படியை ஒரே குரலில் மாற்றமின்றி இசைத்தமை பெற்ற பயின்ற கலைகளை வெளிக்கொணர்ந்த குரல்வளம் அனைவரையும் மெய்மறக்கச் செய்து விட்டன எனலாம். ஏழு இசை பயில் மாணவிகளுக்கும் ஐந்து இசை ஆசிரியைகளுக்கும் வாழ்த்துக்கள்.


**உள்ளூர் கலைஞர்கள் வளர்க்கப்பட வேண்டும்**

இந்தியாவைப் பொறுத்த வரையில் இசைக்கென பல பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவற்றுடன் கலைகளை மெருகூட்டும் கான சபாக்களும் நிறையவே உள்ளன. அவை வருடாவருடம் இசை நிகழ்வுகளை நடத்தி இசைக்கலைஞர்க ளின் திறமைகளை வெளிக்கொணருகின்றன. ஆனால் அவ்வாறான கான சபாக்கள் எமது மண்ணில் இல்லாததால் வருடாந்தம் பட்டம் பெற்று வெளியேறுவோரும் இவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவோரும் தமது திற மைகளை வெளிக் கொணர முடியாமல் தவிக்கின்றனர். இதனால் தாம் பெற்ற பட்டத்திற்குச் சம்பந்தமில்லாத அரச தொழில் களை நாடிச் செல்கின்றனர். இசைத் துறையில் பட்டம் பெற்ற பலர் அரச திணைக்கள அலுவலகங்களில் முகாமைத்துவ உதவி யாளர்களாகவும் அபிவிருத்தி அலுவலர்களா கவும் தொழில் பெற்றுச் செல்வதால் அவர்கள் பெற்ற பட்டத்திற்கான பெறுமதி இல்லாமல் போய்விடுகிறது. எமது பிரதேசத்தில் திறமையான கலைஞர்கள் இருந்தபோதிலும் பெருமைக்காகவும் ஆடம்பரத்திற்காக வும் இந்தியாவிலிருந்து புகழ்பெற்ற கலைஞர்களை அழைத்து வந்து இசை நிகழ்ச்சிகளை கோவில் நிர்வா கத்தினர் ஈடுபடுகின்றனர். அவர்களின் இசை ஆற்றலை குறைகூறவில்லை. ஆனால் எமது பிரதேசத்தில் இசைத்துறையில் பட்டம் பெற்ற பலர் தமது திறமைகளை வெளிப்படுத்த முடியாமல் தவிப்பதை எவரும் கண்டு கொள்வதில்லையென்னும் போது கவலையளிக்கிறது.

**இந்தியாவில் இருந்து கலைஞர்களை அழைப்பது ஏன்?**

தென்மராட்சி கல்வி வலயத்தினால் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை நட்ாத்தப்படும் இசை நிகழ்வுகளில் இவ்வாறான சிறந்த இசைக் கலைஞர்களை வரவழைத்து நிகழ்வுகளை நடத்தியிருந்தனர். அவர்களில் கொடிகாமத்தைச் சேர்ந்த செல்வி கஜேந்திரா மற்றும் றொபேட் தவநாதன் ஆகியோரின் இசை நிகழ்வுகளை இரசித்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மீண்டும் அவர்களின் குரல் இசையினை மேடைகளில் கேட்கும் சந்தர்ப்பம் கிடைக்காதா என ஆவலுடன் உள்ளதைக் காணமுடிகிறது. இவ்வாறான கலைஞர்கள் எம் மத்தியில் இருக்கும் போது பல லட்சம் ரூபா செலவில் இந்தியாவிலிருந்து கலைஞர்களை வரவழைப்பது எமது கலைஞர்களுக்குச் செய்யும் துரோகம் எனக் கூறலாம்.

தற்போது யாழ்.குடாநாட்டு கோவில்களில் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் மாவட்டத்தில் வாழும் இசைக்கலைஞர்களை அழைத்து அவர்களின் திறமைகளை வெளிக்கொணர வைக்க வேண்டியது எமது கடமையாகும்.



# இறை அன்பும் இனிய நோன்பும்

மவுலவி அ.செய்யது அலி மஸ்லஹி

புனித ரமழானின் நோன்பு எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுத்தரும் சிறந்த வணக்க வழிபாடாக அமைந்துள்ளது. இறைவனின் அன்பை அடைய நான்கு வழிகள் உள்ளன. அவை: உணவைக் குறைப்பது, உறக்கத்தைக் குறைப்பது, பேச்சைக் குறைப்பது, மக்களுக்கிடையே கலந்திருப்பதை குறைப்பது. இந்த நான்கு அம்சங்களில் ஒரு முஸ்லிமிடம் இடம்பெற்றால் அவர் இறைவனின் அன்பை எளிதாக பெற்றுவிடலாம். இந்த நான்கு அம்சங்களும் புனித ரமழானின் நோன்பில் அமைந்துள்ளது.

**உணவைக் குறைப்பது**

புனித ரமழானில் நோன்பாளிகள் வெகுவாக உணவை குறைத்துக் கொள்கிறார்கள். இவ்வாறு உணவை குறைத்துக் கொள்வதின் மூலம் இறைவனின் நெருக்கத்தை சுலபமாக அடைந்து கொள்கிறார்கள். இதுகுறித்த நபிமொழி வருமாறு:

"எனக்காக நோன்பாளி தமது உணவையும், பானத்தையும், இச்சையையும் விட்டுவிடுகிறார். நோன்பு எனக்கு மட்டுமே உரியது. அதற்கு நானே கூலி கொடுப்பேன்" என்று இறைவன் கூறினார் என்று நபி குறிப்பிட்டார். நோன்பு காலத்தில் உணவைக் குறைத்துக் கொள்வதின் வழியாக நோன்பின் சன்மானத்தை இறைவனின் திருக்கரத்தால் பெற முடிகிறது.

**தூக்கத்தைக் குறைப்பது**

புனித ரமழானில் இரவு வணக்கம் என்பது முக்கியமானது. ஏனைய மாதங்களை விட ரமழானில் இரவு வணக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதனால் வெகுநேரம் தூங்கமுடியாது. "எவர் ரமழான் இரவில் இறை நம்பிக்கையாளராகவும், நன்மையை எதிர்பார்த்தவராகவும் இருந்து (தராவீஹ்) தொழுகிறாரோ, அவர் முன் செய்த (சிறு) பாவங்கள் யாவும் மன்னிக்கப்படும் என நபி (ஸல்) கூறினார்கள்." (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி) புகாரி)

"நபி (ஸல்) ரமழான் நள்ளிரவில் பள்ளிக்குச் சென்று தொழுதார்: அவரைப் பின்பற்றி மக்களும் தொழுதார்கள்." (அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலி) புகாரி)

"பயபக்தியாளர்கள் பொறுமையாளராகவும், வாய்மையாளராகவும், இறைவனுக்கு முற்றிலும் வழிபடுவோராகவும், தான தர்மங்கள் செய்வோராகவும், ஸஹ்ர் நேரத்தில் (வணங்கி, நாயனிடம்) மன்னிப்புக் கோருபவராகவும் இருப்பர்." (திருக்குர்ஆன் 3:17) புனித ரமழானில் நிறை வேற்றப்படும் இந்த செயல்பாடுகள் தான் அவர்களுக்கு இறைவனின் அன்பைப் பெற்றுத்தரப் போதுமானதாக அமைந்துவிடுகிறது.

**பேச்சைக் குறைப்பது**

"எவர் பொய்யான காரியங்கள் செய்வதையும், பொய்யான பேச்சுகளையும் விடவில்லையோ, அவர் தமது உணவையும், நீரையும் விட்டுவிடுவ(நோன்பு வைப்ப)தில் அல்லாஹ்விற்கு எந்தத் தேவையும் இல்லை என நபி (ஸல்) கூறினார்." (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி), புகாரி)

"நோன்பு (பாவங்களிலிருந்து காக்கும்) ஒரு கேடயம் ஆகும். எனவே நோன்பாளி தவறான பேச்சுகளைப் பேசவேண்டாம். முட்டாள்தனமான செயல்களில் ஈடுபடவேண்டாம். யாரேனும் அவருடன் சண்டைக்கு வந்தால், அல்லது ஏசினால் 'நான் நோன்பாளி' என்று இருமுறை கூறட்டும்! என நபி (ஸல்) தெரிவித்தார்." (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி), புகாரி)

நோன்பு என்பது உண்ணாமல், பருகாமல் இருப்பது மட்டுமே அல்ல. கெட்ட வார்த்தைகளை பேசாமலும், பொய் பேசாமலும், புறம் பேசாமலும், அவதூறு பேசாமலும், கோள் பேசாமலும், ஆபாசமாக பேசாமலும், தீச்சொல் பேசாமலும் இருக்க வேண்டும். இவ்வாறு இருப்பதுதான் மெய்யான நோன்பாகும். நோன்பின் ஒழுக்கங்கள் எட்டு. அதில் நாவைப் பேணுதலும் அடங்கும். இறைவனின் அன்பைப் பெற தேவையற்ற பேச்சுகளை தவிர்ந்திருக்க வேண்டும்.

**மக்களுடன் குறைவாகக் கலந்திருப்பது**

புனித ரமழானில் நோன்பாளிகள் தமது நட்பு வட்டாரத்தைச் சுருக்கிக் கொண்டு, இறை நெருக்கத்தை அடையும் வகையில் மக்களுடன் கலந்திருப்பதை தவிர்த்து கொள்கிறார்கள். ரமழானின் மூன்றாவது பத்தில் நோன்பாளிகள் உலகத் தொடர்பைத் துண்டித்து, குடும்ப உறவை தற்காலிகமாக நிறுத்தி வைத்து, இல்லறத்தொடர்பை முற்றிலும் விட்டுவிட்டு, பள்ளிவாசலில் தஞ்சமடைந்து மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை தியானிக்க 'இதிகாப்' இருப்பார்கள்.

இதுகுறித்து குர்ஆன் கூறுவதைக் காண்போம். 'நீங்கள் பள்ளிவாசலில் தனித்து (இதிகாப்) இருக்கும்போது உங்கள் மனைவியருடன் கூடாதீர்கள்' (2:187) 'நபி (ஸல்) சாவடையும் வரை ரமழானின் கடைசிப் பத்து நாள்கள் இதிகாப் இருந்தார். அவருக்குப் பின் அவரின் மனைவியரும் இதிகாப் இருந்தனர்.' (அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலி), புகாரி) கெட்ட சகவாசத்தை விட ஒதுங்கி தனியாக இருப்பதே மேல். அதிலும் ரமழானில் இருப்பது அதைவிடவும் மேலானது.

மேற்கூறப்பட்ட நான்கு அம்சங்களையும் கடைப்பிடித்தால் இறைவனின் அன்பை அடையலாம். மேலும், இறைவனையே பரிசாகப் பெற்றுவிடலாம். இத்தகைய அம்சங்களை கடைப்பிடிக்கக்கூடிய பாக்கியம் புனித ரமழானில் மட்டுமே அரிதாகக் கிடைக்கும்.

> நோன்பு என்பது உண்ணாமல், பருகாமல் இருப்பது மட்டுமே அல்ல. கெட்ட வார்த்தைகளை பேசாமலும், பொய் பேசாமலும், புறம் பேசாமலும், அவதூறு பேசாமலும், கோள் பேசாமலும், ஆபாசமாக பேசாமலும், தீச்சொல் பேசாமலும் இருக்க வேண்டும். இவ்வாறு இருப்பதுதான் மெய்யான நோன்பாகும்.

'சுவையான உணவை தேடுபவன் இறைவணக்கத்தில் இன்பம் பெறமாட்டான். அதிகமாக தூங்குபவன் வாழ்க்கையில் அபிவிருத்தியை அடையமாட்டான். மனிதர்களிடம் புகழைத் தேடுபவன் இறைவனின் பொருத்தத்தை பெறமாட்டான். புறமும், வீண் பேச்சும் பேசுபவன் தீனுல் இஸ்லாத்தில் சாவடைய மாட்டான் என இப்ராகீம் பின் அத்ஹம் (ரஹ்) தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய வெள்ளி

---

# அளவையூர் ஈன்றெடுத்த அற்புதக்கலைஞன்

கே.எஸ்.சிவஞானராஜா

உண்ணாமல் உறங்காமல் ஓயாது இசை வளர்த்த ஒப்பற்ற அதிசயக் கலைஞனான சங்கீத பூசணம், கலாபூசணம் அமரர் விஸ்வநாதன் சிவஞானசேகரம் அளவையூர் ஈன்றெடுத்த ஓர் அற்புதக் கலைஞன்.

அளவெட்டி விஸ்வநாதன் இலட்சுமியம்மா தம்பதிகளின் மகனாக அற்புதம் 1949ஆம் ஆண்டு 7ஆம் மாதம் 13ஆம் திகதி பிறந்தார். ஆரம்பக் கல்வியை சதானந்தா வித்தியாலயத்திலும், உயர்கல்வி அருணோதயக் கல்லூரியிலும் கற்றுக்கொண்டார். மேலும் நல்லூர், தெல்லிப்பழை, கொழும்பு, இணுவில், அளவெட்டி பிரதேச வாரியங்கள் வாயிலாக கலைஞானச் சுடர், கலைச்சுடர், கலாபூசணம், திருநெறிய தமிழிசை வாணர், இசைக் கலாநிதி ஆகிய பட்டங்களுக்குப் பெறுமதியானார்.


வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலும், யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியிலும் மொத்தமாக 33 வருடங்கள் ஆசிரிய சேவைக்கு மகுடம் சூட்டினார். 1984ஆம் ஆண்டு ஜூன் 4ஆம் திகதி தெய்வீக நங்கை சிதம்பரபிள்ளை சிவயோகராணியைத் திருமணம் புரிந்து 3 பெண் இரத்தினங்களுக்குத் தந்தையானார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முதல்தர பண்ணிசைக் கலைஞர் யாழ். பல்கலைக்கழக நுண்கலைக் கழக முன்னாள் இடைவரவுவிரிவுரையாளர், வட இலங்கைச் சங்கீத சபைப் பொருளாளர், தலைமைப் பரீட்சகர், நல்லூர் இளங்கலைஞர் மன்ற நீண்டநாள் உறுப்பினராகவும், விழாக்குழு பொறுப்பாளராகவும், நல்லூர் ஆதீனம், துர்க்கா மணிமண்டப இசை நிகழ்ச்சிப் பொறுப்பாளராகவும் விசேடித்தார். நல்லூர், கும்பழாவளை உற்சவகால இசைவாணராக மட்டுமல்ல திருக்கேதீஸ்வரம் முதலான இலங்கையின் முதன்மை ஆலயங்களில் பண்ணிசை, சங்கீத இசையின் கொடையாளியாகவும், இணுவில் இளந்தொண்டர் சபையின் சங்கீத குருவானவராகவும் மாட்சி பெறுகிறார்.

மனோதர்மக் கலைஞனாக மிளிரும் இவர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இசைக்கச்சேரிகளை கச்சேரி தர்மம் வழுவாது அரங்கேற்றியுள்ளார். சௌக்காலப் பிரயோக அலங்காரங்களினால் இசையைச் செப்பனிடும் இவர் இலங்கைக்கு வரும் இந்தியா ஓதுவார்கள், இசைக்கலைஞர்களுடன் இசைத்து மகிமை சேர்ப்பவராவார். மாருதப்புரவீக வல்லி ஸ்தாபித்து, வணங்கி, வரம்பெற்ற அளவை கும்பழாவளையில் நவசந்திப்பண், தேர் உற்சவ இசையரங்கு, நவராத்திரி இசை ஆராதனை, நாம சங்கீதகீர்த்தனம, கொடிக்கவி பாடுகின்ற அளவையூர் மூத்த பூத்திருக்கின்ற பெருங்கலைஞன்.

நீத்தார் நினைவு

# தமிழ்க் கவிதை அன்றும் இன்றும்



சி.சிவதாசன்


அளவிட்டுக் கூறமுடியாத பழமை வாய்ந்தது தமிழ் மொழி. எளிமையும், இனிமையும் கொண்ட இம் மொழி இயற்கையோடு பின்னிப் பிணைந்த ஒலிகளையும் அழகிய எழுத்து வடிவங்களையும் கொண்டுள்ளது. தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூவகைப் புணர்ச்சியால் சொற்சுவையும், பொருட் சுவையும், ஓசை நயமும், எழிலுணர்வும் தருவது இந்த மொழியின் சிறப்பு என்று சொன்னால் மிகையாகாது. இலக்கணம் என்ற வரையறைக்குள் அமையப்பெற்று யாப்பு என்னும் கட்டுப்பாட்டுக்குள் பழமை, இறமை, பேச்சு, எழுத்து என வளம்பல கொண்டதாக இருந்த காரணத்தால் செம்மொழியென அந்தக் காலத்திலிருந்தே கருதப்பட்டாலும் மிக அண்மைக் காலத்திலேயே "உலகச் செம்மொழி" என்ற அந்தஸ்தைப் பெற்றது. இது காலம் கடந்த செயற்பாடாக இருந்தாலும், வரவேற்கத்தக்க விடயமே ஆகும்.

★★★

தமிழ் இலக்கிய வரலாறு என்னும் போது தமிழ் மொழியின் ஆரம்ப வடிவம் "செய்யுள் வடிவமாகவே" தோற்றம் பெற்றது. எழுது கோலாக எழுத்தாணியும், பதியும் ஆவணப் படுத்தலுக்காக ஓலைச் சுவடிகளும் உபயோகிக்கப்பட்டன. செய்யுள் என்பது பின்னரான காலப்பகுதியில் பாடல், கவிதையென அழைக்கப்படலாயிற்று. உழவர்களின் செயற்பாட்டால் வரம்பு என்னும் நீர்ப் பரப்புக்குள் வளம் பெற்றது போல தமிழ் செய்யுள் அக்காலப் பரப்புள் வாழ்ந்த படைப்பாளிகளான பாவலர்களால் அவர்களின் ஆற்றலால் உருவான தருக்கப் பாடல்கள் "செய்யுள்" எனவும் நீண்ட சரித்திரங்களை இயம்பும் பாடல்கள் "காவியங்கள்" எனவும் வழக்கத்தில் கொள்ளப்படலாயின. நல்ல பல செய்யுள்கள், காவியங்கள் பாவலர்களால் காலத்துக்காலம் பல்வேறு மாற்றங்களை அடைந்த போதிலும் மரபுவழியில் சொற்சுவை, பொருட்சுவை, ஓசைநயம், சீர் அணி மிகுந்தவையாகவே தோற்றம் பெற்றன. சரித்திரங்கள், இதிகாசங்கள் இவை யாவும் மரபு வழியில் வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, கட்டளைக் கவித்துறை, அந்தாதி அறுசீர் விருத்தம், எண் சீர் விருத்தம், ஆசிரியப்பா, என்னும் வடிவங்களில் உருப்பெற்றன.

★★★

வழமைச் செயற்பாடுகளாக ஒருவருடன் ஒருவர் உரையாடுதல், பலர் கூடிக் கதைத்தல், பேச்சுவழக்கென்று இருந்த போதும், எழுத்து வடிவங்கள், கூத்து வடிவங்கள் இவையெல்லாம் செய்யுள் வடிவங்களாகவே இருந்துள்ளன. அணி, அழகு என்பன ஒரு பொருட் சொற்களாகும். எந்தப் பொருள்களும் அழகாயிருப்பின் பிறருடைய ஆவலைத் தூண்டி அவர்பால் ஈர்ப்பினை ஏற்படுத்துகின்றன. மரபு வழியாக வந்த கவிதைகளும் அவ்வாறே அமைகின்றன. மொத்தத்தில் எதுகை, மோனை, உவமானம், உவமேயம், ஓசைநயம், குறில், நெடில், நெடில், சீர் என்ற அணிகள் நிறையப் பெற்றதே அன்றைய செய்யுள் அதன் பின்னரான கவிதை வடிவங்களாக அமைந்துள்ளன. தமிழ்ச் சங்க காலப் பரப்பில் இவை சரியாகப் பேணப்பட்டன. செய்யுள் வடிவங்களில் மாற்றங்கள் எடுத்தன. புதுமைகள் தோன்றின. அவ்வாறு தோன்றிய புதுமையான செய்யுள் வடிவத்தினால் முதலில் பாதிக்கப்பட்ட பாவலர் திருவள்ளுவர் ஆவார்.



அவருடைய ஈரடி வெண்பா வடிவில் குறழினை மரபு வழி தவறியது என அவர் வாழ்ந்த காலத் தமிழ்ச் சங்கம் ஏற்றுக் கொள்ள மறுத்தது. இருந்தும் ஏற்க மறுக்கும் நூல்களை அந்தத் தமிழ்ச் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சங்கப் பலகையானது ஏற்றுக்கொண்டதால் தமிழ்ச் சங்கமும் ஏற்றுக்கொண்டது. அன்றைய கால கூத்து வடிவங்களான தெருக் கூத்து, நாட்டுக் கூத்து, சிந்து இடை நடைக்கூத்து பின்னரான இசை நாடகம் இவையெல்லாம் மரபுவழி செய்யுள் வடிவங்களானவையாகும். மேலும் நாடோடிப் பாடல்கள், பழமொழிகள், நாட்டார் பாடல்கள், விடுகதைகள், காவடிச் சிந்து, நொண்டிச் சிந்து, வழிநடைச் சிந்து, தங்கச்சிந்து, ஆனந்தக் களிப்பு, தெம்மாங்கு என்பனவும் மரபு வழியில் அமைந்த செய்யுள் வடிவங்களே. புதுமைக் கவிதை படைத்தவன் பாரதி என நாம் பெருமைப்படுகிறோம். அந்தப் பாரதியின் காலத்திலிருந்தே "செய்யுள்" வடிவினை நாம் கவிதையென அழைத்து வருகின்றோம்.

★★★

பாரதியின் கவிதைகள் எளிமையான தமிழில் மரபுவழி பிசகாது இருந்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. மரபுவழி தவறாமல் புதுமைகளை ஏற்படுத்திய பாவலன் பாரதியே ஆவான். அவன் பின்னால் வாழ்ந்த பாரதிதாசன் கவிதைகளில் எளிமையும், உணர்ச்சி தூண்டலும் எழுந்து நின்றன. புரட்சி வடிவங்களும் காணப்பட்டன. அதனால் அவன் புரட்சிக் கவிஞன் எனப்பட்டான். 1970ஆம் ஆண்டு காலம் வரை இம் மண்ணில் மட்டுமல்லாது தமிழ்ப் பேசும் நல்லுலகிலும் மரபு வழியிலான கவிதை வடிவங்களே இருந்து வந்தன. கவிதை வடிவங்கள் என்றால் மரபு வழியிலான கவிதை வடிவங்களே இருந்து வந்தன. கவதை வடி வங்கள் என்றால் மரபு வழிக் கவிதைகளே சிறப்புப் பெற்றும் வந்தன. இத்தகைள மரபு வழிக் கவிதை வடிவங்களில் குறில், நெடில் எழுத்துக்கள் முதன்மையாகப் பேணப்பட்டு வந்தன. வெண்பா என்பது நான்கு சீர் கொண்டது. நெடில் எழுத்தில் இருந்தால் மறு ஈரடிகள் குறில் எழுத்திலும் வரலாம். உதாரணமாக கீழ்வரும் வெண்பாவைப் பாருங்கள்

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நானும் கலந்துணக்கு நான்தருவேன் – கோலம் செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு**
**சங்கத் தமிழ் மூன்றும் தா**

இவ் வெண்பாவில் முதலீரடிகள் நெடில் எழுத்தில் தொடங்குவதையும் அடுத்து வரும் ஈரடிகள் குறில் எழுத்தில் இருப்பதையும் காணலாம். இது மரபுவழியில் புகுத்தப்பட்ட சிறப்பு ஆகும். இருந்த போதும் அறுசீர், எண்சீர் விருத்தங்கள் அவ்வாறு அமையாது. கவிதை நெடில் எழுத்தில் தொடங்கினால் ஒவ்வொரு சீர் முடிந்து தொடரும் அடியின் ஆரம்பம் நெடில் எழுத்தில் அமைதல் வேண்டும். அது போல் குறில் எழுத்தில் கவிதை தொடங்குமானால் ஒவ்வொரு அடியின் ஆரம்பமும் குறில் எழுத்திலேயே தொடரும். இதற்கு உதாரணமாகப் பின்வரும் கவிதையை நோக்கலாம்.

**கனிதரும் சோலைகளும் கவினுறு வெளிகளும்**
**காசினியில் எம்பெருமை காற்றோடு பரப்பிடும்**
**தனியாள் வீட்டினுள்ளும் தாங்குநற் கூடைகளில்**
**தானியங்கள் எந்நாளும் தன்னிறைவாய் காணும்**
**தனிசுவை நல்கிடும் நற்பனையின் பயன்களாகும்**
**நல்ல புழுக்கொடியலும் நற்பனாட்டு மிங்கே**
**நனிமிகை யாகவெம் நற்குடிலில் தானுண்டு**
**நானிலத் தோர்க்கிவை நற்பயன் நல்குமே!"**

இந்தக் கவிதையானது எண்சீரில் அமைந்ததாகும். இது தவிர அணிவடிவில் மரபுக் கவிதைகளில் பின்வருமாறும் கவிதைகள் அழகுறும்.

★★★

**வேதனோ வேலனோ விசயனோ என்பாண்**
**விண்ணாளும் இந்திரத் தேவனோ என்பாண்**
**நாதமார் நந்தகோ பாலனோ என்பாண்**
**நாடாள வந்த சீர் மன்னனோ என்பாண்!**

இந்தக் கவிதையில் அணிசீர் ஈற்றில் வருவதையும், எதுகை, மோனை பிசகாமல் கவிதை செல்வதையும் அழகுறக் காணலாம். இன்னுமோர் கவிதையில் காணும் சீர் அழகைக் காண்போம்.

**அன்னை தந்தை பார்த்தெடுத்த அமுதம் – பெண்மைக்**
**காயகுணம் அத்தனைக்கும் இமயம்**
**என்னை வந்து சேர்ந்த நல்ல இதயம் –**
**வண்மை**
**ஏற்ற முறும் மங்கையின்ப உதலம்!**

அன்றைய காலப்பரப்பில் ஆக்கப்பட்ட கவிதைகளின் மரபு வழிச் சிறப்பினையும் பார்த்தோம். தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலைத்து நின்ற மரபு வழிக் கவிதைகளை யாரும் எழுதுவதற்கு முன்வராத நிலையே இன்றுள்ளது. இருந்த போதும் 1970ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப் பகுதியில் எழுந்த புதுக்கவிதை மோகம் அதீத வளர்ச்சி கண்டு வருவதை இன்று நாம் கண் கூடாகக் காண்கின்றோம். புதுக் கவிதையின் ஆரம்பகாலம் மிகவும் பரிதாபகரமானதாகவே காணப்பட்டது. பத்திரிகைகள், இலக்கிய விழாக்கள் போன்றவற்றில் இக்கவிதை வடிவத்துக்கு எதிர்ப்புகள் கிளம்பின.

# தமிழ்க் கவிதை...

இவை அடங்கிப்போக இருவர் முக்கிய காரணமாக இருந்தார். ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுமையைக் கிழப்பிய அவர் பேறு யாருமல்ல மகாகவி ஆவார்.

★★★

**சிறுநண்டு மணல் மீது**
**பம்ஒன்று கீறும்**
**சிலவேளை இதைவந்து**
**கடல்கொண்டு போகும்''**
**எறிகின்ற கடல் என்று**
**மனிதர்கள் அஞ்சார்**
**எதுவந்து தெனின் என்ன?**
**அதை வென்று செல்வார்!**

இந்தக் கவிதையானது மரபுவழிக் கப்பால் மகாகவியால் எழுதப்பட்டது. இவரின் கவிதை "குறும்பா" என்று தமிழ் இலக்கியச் சமூகம் ஏற்றுக்கொண்டது. அதற்குக் காரணம் அவரின் கவிதைகளில் இசை.... மிகுதியாகக் காணப்பட்டதேயாகும். அதன் பின்னர் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வாரப் பத்திரிகைகளில் புதுக் கவிதைகள் இடம் பிடிக்கலாயின. புதுக் கவிதையின் தோற்றம் வெறும் உரை வீச்சாக இருந்தாலும் கால மாற்றத்தின் இலக்கிய வெளிப்பாடே இதுவெனக் கொள்ளலாம். யாப்பு என்னும் மரபு வழி இலக்கண வரையறைக்குள் சிக்குப்படாத சுதந்திரப் பறவை என இதனைக் கூறலாம். மேலும் இக் கவிதை வடிவமானது என்னன கூறுகின்றன என்பதை நாம் நோக்கினால்... சிந்தனையைத் தூண்டும் கருவூலமாக இவை இருக்கின்றது. ஒரு சில வரிகளில் கூட புதுக் கவிதைப் படைப்பாளிகள் கூறும் சிலவரிப் புதுக் கவிதைகள் சிலவற்றை நோக்குவோம்.

**பணக்கார வர்க்கம்**
**கொள்ளை இலாபம் வைத்தால்**
**அதற்குப் பெயர் வியாபாரம்**
**ஏழைகள்**
**அதனை எதிர்த்தால்**
**அதற்குப் பெயர் வன்முறை!**

இன்னுமொரு கவிஞன் பின்வருமாறு கூறுகிறான்.

தென்றல் பூப்படைந்தால்
**புயலாகிப் புறப்படும்**
**மேகம் கருக்கொண்டால்**
**மேதினியை மூழ்கடிக்கும்**
**பேரலைகள் பொங்கிவிட்டால்**
**பேரழிவு பெருகிவிடும்**
**நதிகள் கரைபுரண்டால்**
**நாட்டிலே நாசம் வரும்**
**இயற்கை கோப முற்றால்**
**எல்லாமே அழிந்துவிடும்**

மேலும் ஒரு பெண் கவிஞர் மதுவைப் பற்றி புதுக் கவிதையில் பின்வருமாறு கூறுகின்றார்.



**குடிக்கும் மனிதன் உயிரை**
**அவனை அறியாமலே குடிக்கும்**
**திரவ அரக்கன்!'**

> பாரதியின் கவிதைகள் எளிமையான தமிழில் மரபுவழி பிசகாது இருந்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. மரபுவழி தவறாமல் புதுமைகளை ஏற்படுத்திய பாவலன் பாரதியே ஆவான். அவன் பின்னால் வாழ்ந்த பாரதிதாசன் கவிதைகளில் எளிமையும், உணர்ச்சி தூண்டலும் எழுந்து நின்றன. புரட்சி வடிவங்களும் காணப்பட்டன. அதனால் அவன் புரட்சிக் கவிஞன் எனப்பட்டான்.

இவ்வாறெல்லாம் மிகச் சுருக்கமாக வெண்பா வடிவிலும் பார்க்கச் சிறியதாக புதுக்கவிதைகள் ஆக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் இத்தகைய கவிதைகளில் குறில், நெடில், எதுகை மோனை என்னும் மரபின் யாப்புகள் கையாளப் படவில்லை. எடுத்த விடயத்தை எடுத்த எடுப்பிலே படைப்பாளி வெளிக்கொணரும் விதம் அலாதியானது. அன்றைய காலப் பகுதியில் ஔவையாரும் புதுக்கவிதையின் தோற்றத்தில் கவிதை புனைந்துள்ளார். அதுவும் எல்லோர் மனதிலும் பதியக்கூடியதாக எக் காலத்திலும் அழிக்க முடியாததாக அவை இருக்கின்றன.







# சமூக பிரச்சினைகளை மையப்படுத்தி மூன்று குறும்படங்கள் வெளியீடு

■ வாஸ் கூஞ்ஞ

மன்னார் மாவட்ட இயக்குனர் வை.கஜேந்திரனுடைய இயக்கத்தில் உருவாக்கப்பட்ட மூன்று குறும்படங்கள் கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது.

வெற்றிகலை சங்கத்தின் அனுசரனை மற்றும் தமிழமுது நண்பர் வட்டத்தின் இணை அனுசரனையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் அடி, கௌரவ பிச்சை, மற்றும் குடி ஆகிய மூன்று குறும் படங்கள் ஒரே நேரத்தில் வைபவ ரீதயாக வெளியீடு செய்யப்பட்டது

சமூக ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சினைகளை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட குறித்த மூன்று திரைபடங்களையும் வன்னி மாவட்ட பராளுமன்ற உறுப்பினர் சால்ஸ் நிர்மலநாதன் மற்றும் வடமாகண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் மற்றும் மன்னார் நகர் பிரதேச செயளாலர் எம். பரமதாசன் ஆகியோர் இணைந்து வெளியிட மன்னார் மாவட்ட சமூக பொருளாதர மேம்பாட்டு நிலைய குழுத் தலைவர் யாட்சன் பெற்றுக் கொண்டார்

நிகழ்வின் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட படங்கள் அனைவருடைய பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டதுன் கருத்துரைகள் மற்றும் விமர்சன உரைகளும் இடம்பெற்றமை குறிப்பிடதக்கது.

## மரண அறிவித்தல்

# கந்தையா தருமலிங்கம் (கிளி)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் மற்றும் யாழ். அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தருமலிங்கம் நேற்று (03.07.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மருமகனும் பத்மாவதி (வவா) யின் பாசமிகு கணவரும் தயாபரன் (துயா பிரான்ஸ்), ரதிதேவி (மாலா பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும் சுகனியா, ரமேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் பசுபதி, நாகமுத்து தம்பதிகளின் பெறாமகனும் கமலா, காலஞ்சென்றவர்களான குணரத்தினம், அமுதலிங்கம், கனகாம்பிகை மற்றும் சந்திரகுமாரன், உதயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் துரைராசசிங்கம் (அசோக்), சந்திரவதனி, பரமேஸ்வரி, கௌரி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் பரமலிங்கம் (ஜேர்மன்), பராசக்தி, பரஞ்சோதி (ஹொலன்ட்), பாலினி, கனகலிங்கம் (பிரான்ஸ்), கமலேஸ்வரி (U.K.) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சண்முகரத்தினத்தின் சகலனும் பகீரதி (பிரான்ஸ்), சோபன அம்பிகா, சித்தார்த்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் பகீரதனின் மாமனாரும் அஸ்வினி (பிரான்ஸ்), சகானா (பிரான்ஸ்), சரணியா (பிரான்ஸ்), யானு (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2018) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**12/11, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.**
**021 320 9059, 077 113 2332**

தகவல்:
**மனைவி, குடும்பத்தினர்.**

(CS 17907/15/17)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
18 . 04 . 1932



மறைவு
04 . 06 . 2018

கடந்த (04.06.2018) திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத்தெய்வம்

## அமரர் ஞானவதி (பவளம்) ஞானமுத்து

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04.07.2018) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப. 11.30 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு :** இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனுதாபச் செய்திகளை பல வழிகளிலும் பரிமாறிய அனைத்து உள்ளங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தபாற்கந்தோர் அருகில்**
**மல்லாவி.**
**077 269 6011, 076 479 8111**

**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

# சரவணமுத்து நற்குணம்

**(கந்தானை விமலேந்திரா பிரதேர்ஸ் உரிமையாளர்)**



பிறப்பு 08.07.1933 இறப்பு 01.07.2018

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் தற்போது 396 நல்லூர் பின் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து நற்குணம் 01.07.2018 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சரவணமுத்து - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தானை கணபதிப்பிள்ளை கந்தையாபிள்ளை - நேசரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கனகமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பரமநாதன், நடராசா மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், விமலேந்திரன் (லண்டன்), மகேந்திரன் (கனடா), பாலேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாக்கியத்தின் பெரிய தந்தையும், விஜயலக்ஸ்மி (லண்டன்), ரேணுகா (கனடா), குமுதினி (கனடா), ஶ்ரீறோயஸ் (லண்டன்), ஒப்றி ஶ்ரீகுமார் (கந்தானை), றெபோடிலிமா (றஞ்சன் - லண்டன்), லான்பிராங் (கரன் - கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காயத்திரி (கனடா), சுஜீவன் (கனடா) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ஜெயன் (லண்டன்), சுகந்த் (லண்டன்), ஆரணி (கனடா), அஷான் (கனடா), தர்மியா (கனடா), ஶ்ரீரங்கன் (கனடா), சரண்யா (கனடா), கேஷியா (கனடா) ஆகியோரின் அன்புப்பேரனும், சகுந்தலா (கனடா), தனநாயகி (லண்டன்), முத்துராசா (கனடா), தனலக்சுமி, புனிதவதி (அமெரிக்கா), சுந்தராம்பாள் (கனடா), காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், நல்லம்மா, வைத்திலிங்கம், சுப்பிரமணியம், தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2018) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு 396, நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணிக்கு தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 11 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/17958) (11,17)


**தகவல்:- குடும்பத்தினர்.**

**077 137 5715 - விமலேந்திரன்.**
**077 404 5904 / 075 530 4625 } பாபி - சிவபாக்கியம்**

---

## மரண அறிவித்தல்

மண்ணில்
26 . 07 . 1924



விண்ணில்
01 . 07 . 2018

# நாகமுத்து செல்லத்துரை

(வெடிவைத்தகல்லு, குருந்தடிப் பிள்ளையார் ஆலய பூசகர்)

நெடுங்கேணி வெடிவைத்தகல்லைப் பிறப்பிடமாகவும் மகாறம்பைக்குளம், வவுனியாவைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து செல்லத்துரை 01.07.2018 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், சிதம்பரம், சிவகுரு ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்புலட்மி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற பாலசிங்கம் (பிரான்ஸ்) மற்றும் ஞானப்பிரகாசம் (uk), மனோகரன் (CTB), நிமலநாதன் (சுவிஸ்), கருணாகரன் (uk), பத்மநாதன் (uk), சீதாலட்சுமி (uk), பாக்கியலட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கயிலாசப்பிள்ளை (ஆஸ்திரேலியா), புஸ்பராணி (பிரான்ஸ்), பாலராணி (uk), பாக்கியதேவி, ரதி (சுவிஸ்), தமிழ்மலர் (uk), றமணி (uk), முருகையா (uk), சிவபாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், கலைமகள் (uk), கலைரஜனி (ஆஸ்திரேலியா), சுயாதா (uk), கஜந்தினி (uk), சைலஜா (uk), கௌசிகா (பிரான்ஸ்), ஜானுயா (uk), பிரசன்னா (uk), பிரியங்கா (uk), பிரகாசினி (uk), பிரதீபன், காலஞ்சென்ற பகிரதன் மற்றும் நீகேசன் (சுவிஸ்), நிவிதன் (சுவிஸ்), அபிநயா (சுவிஸ்), தர்சாயினி (uk), கர்சன் (uk), மீனுகா (uk), பிரவீண் (uk), ஜமுனா (uk), யாழினி (ஜேர்மனி), கஜீவன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2018) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மகாறம்பைக்குளம் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மகாறம்பைக் குளம்,**
**வவுனியா.**

தகவல்:
**செ.மனோகரன் (மகன்)**
(C.T.B. முன்னாள் முகாமையாளர், முல்லைத்தீவு)

(cs14355)(13,17)

**077 019 2033**

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலட்சுமி செல்லமுத்து



பாடசாலைவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை வதிவிடமாக கொண்ட திருமதி பாக்கியலட்சுமி செல்லமுத்து 01.07.2018 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் செல்லமுத்துவின் அன்பு மனைவியும், கமலதாஸ், மகிந்தன், யோனித்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், மேரி ஜொனிற்றாவின் அன்பு மாமியாரும், றோசல்யா, றோசியன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடியில் அமைந்துள்ள கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.35, பாடசாலை வீதி,**
**ஆறுகால்மடம்,ஆனைக்கோட்டை.**

**தகவல்:**
**கணவர்.**

## பெண்கணக்காளர் தேவை

அரிசி ஆலைக்கு பெண் கணக்கு உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.- **077 257 5712**

## வேலையாள் தேவை

அரிசி ஆலைக்கு இரவு வேலைக்கு ஆண் வேலையாள் தேவை. சம்பளம் ரூபா 1500. உடனடி வேலை வாய்ப்பு. - **070 397 0888**

## Vacancies
## Pillaiyaar Vilash (Pvt) Ltd
(Pillaiyar Inn)

- Manager
- Receptionist

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
(தகுதியுடையோர் ஆவணங்களுடன் நேரில் வருகை தரவும்)

**077 722 2715, 021 222 2829**

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் ▶ 824
சீட்டிழுப்பு திகதி ▶ 2018.07.02 திங்கட்கிழமை
U 35 47 60 61
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 44,172,508/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்புக

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. கணவன் மனைவிக்குள் பிரச்சினையா!
06. வெளிநாட்டில் உள்ளவர்களிற்கும் உதவிசெய்யலாம்



ரகசியம் பேணப்படும்

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் பதிவு தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை - கண்டி வீதி, அம்பத்தன்ன.
077 327 2302/ 076 466 4153

## கேள்வி அறிவித்தல்
## கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு

தலைவர் மாவட்ட பெறுகைக்குழு / மாவட்ட உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு சார்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கீழ் உள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டு வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.

- நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் உள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்ட வாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
- நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கபடும்.
- ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

1. விலைக்கேள்வியானது தேசியபோட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு எனும் முகவரியில் 03.07.2018 தொடக்கம் முற்பகல் 9.00 மணியிலிருந்து இருந்து மாலை 2.30 வரை விலைக்கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிகதகவல்களை பெற்றுக்கொள்ளலாம்
4. ஆங்கிலமொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை முல்லைத்தீவு கமநலஅபிவிருத்தித் திணைக்களத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 03.07.2018 முதல் 23.07.2018 வரை வேலைநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.30 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000.00 கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 23.07.2018 ஆம் திகதியன்று பி.ப 01.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தினை தபால் உறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் 23.07.2018 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி (Original) தனியாகவும் நகல் (copy) தனியாகவும் இரு உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியானது (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணைபொறுப்பு (Bid Security) 23.10.2018 ம் திகதி வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.
8. VAT பதிவு பத்திரம் உள்ளவர்கள் Bid உடன் இணைக்கவும் இணைக்காத பட்சத்தில் VAT கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.
9. கீழ் குறிப்பிடும் வேலைகளுக்கான உங்களுடைய வாகன தகவல், வங்கி கணக்கு அறிக்கை, கடந்த கால வேலை விபரங்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தரின் முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.
10. குறித்த வேலைகளுக்கான முதற் கூட்டம் (Pre bid Meeting) 10.07.2018 திகதி முற்பகல் 10.00 கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு கேள்வி மனுசமர்ப்பிக்க எதிர்பார்போர் அனைவரும் கலந்து கொள்ளவேண்டியது கட்டாயமாகும். கூட்டத்திற்கு சமுகமளிப்பவருக்கு மதிப்பீட்டின்போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டு தொகை (மில்லியன் வரி நீங்கலாக) | கேள்விப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | வேண்டப்படும் ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைத் தொகை | கமநல சேவை நிலையம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Mu/DAD/ Tender/2018/39-09 | அரசன்குளம் | 3.94Mn | | | 40,000.00 | கொக்குத்தொடுவாய் |
| 2 | Mu/DAD/ Tender/2018/39-10 | சின்னக்குளம் | 4.16Mn | | | 43,000.00 | ஒட்டுசுட்டான் |
| 3 | Mu/DAD/ Tender/2018/39-11 | சூரியனாறு ஏழுவெளி அணைக்கட்டு | 4.23Mn | 23/10/2018 | C8 அல்லது அதற்கு மேல் | 43,000.00 | கொக்குத்தொடுவாய் |
| 4 | Mu/DAD/ Tender/2018/39-12 | சலப்பையாறு ஏழுவெளி அணைக்கட்டு | 4.17Mn | | | 43,000.00 | கொக்குத்தொடுவாய் |
| 5 | Mu/DAD/ Tender/2018/39-13 | அஞ்சிலாக்குளம் கால்வாய் | 2.75Mn | | | 30,000.00 | புதுக்குடியிருப்பு |
| 6 | Mu/DAD/ Tender/2018/39-14 | பேராறு அணைக்கட்டு கால்வாய் | 4.16Mn | | | 43,000.00 | புதுக்குடியிருப்பு |
| 7 | Mu/DAD/ Tender/2018/39-15 | காளி கோவில் அணைக்கட்டு | 3.19Mn | | | 35,000.00 | புதுக்குடியிருப்பு |
| 8 | Mu/DAD/ Tender/2018/39-16 | தச்சடம்பன் அணைக்கட்டு | 4.00 Mn | | | 43,000.00 | ஒலுமடு |
| 9 | Mu/DAD/ Tender/2018/39-17 | விளாப்புக்குளம் அணைக்கட்டு கால்வாய் | 2.50Mn | | | 27,000.00 | ஒட்டுசுட்டான் |
| 10 | Mu/DAD/ Tender/2018/39-18 | விளாப்புக்குளம் அணைக்கட்டு | 4.16Mn | | | 43,000.00 | ஒட்டுசுட்டான் |

**தலைவர்,**
**மாவட்ட பெறுகைக்குழு,**
**கமநலஅபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் பகுதிநேர கல்விப்பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறிக்கான தெரிவுப் பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான தெரிவுப் பரீட்சையானது எதிர்வரும் 07.07.2018 சனிக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கிழகத்தில் நடைபெறவுள்ளது. இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழ்க அனுமதிகள் கிளையுடன் தொடர்புகொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**01.07.2018** (cs.14559) (13.17)

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் உப அலுவலகம்
## ஆதனப்பெயர் மாற்றம்

**ஆதன உரிமையாளர் பெயர் :- சொந்தக்காரர்**
**உரிமை கோருபவர் :- பேரம்பலம்**
**வட்டாரம் - 15, கோட்டைக்காடு சுடலை ஒழுங்கை,**
**ஆதன இலக்கம் :- 21/16**

மேற்படி விவரத்தோடு ஆதனம் காணப்பட்ட போது அதே ஆதனத்தை ஆறுமுகம் தட்சணாமூர்த்தியும் பெண் மனோன்மணியும் என்பவர்கள் ஆதனப் பெயர்மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

குறித்த ஆதனமானது யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் கோவிற்பற்று, கோண்டாவில் இறை "கொட்டைக்காடு" எனப் பெயர்கொண்டதும் இவ் அளவின்படியும் ஆட்சிப்படியும் நிலப்பரப்பு ஆறு குளி 17.60 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் என்.சத்தியமூர்த்தி அவர்களால் 1991.06.05 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 272ஆம் இலக்கப் படத்தில் 3ஆம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான ஆதனம். 1972 ஆம் ஆண்டளவில் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை பேரம்பலத்தின் கொள்விலையும் சொந்தமும் உரிமையும் ஆட்சியுமான ஆதனம் என்றும்

குறித்த பேரம்பலம் இவ்வாதனத்தை சரவணை முத்துக்குமாரு திருநாவுக்கரசுவும் பெண் பூமணி ஆகியோருக்கும் யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு செல்வி. சிசிலியா ஜெயம்தேவி இராயப்பு முகதாவில் 1990.01.10ஆம் திகதி 402 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அறுதி விற்றுள்ளார் என்றும்

குறித்த சரவணை முத்துக்குமாரு திருநாவுக்கரசுவும் பெண் பூமணியும் மேற்படி ஆதனத்தின் மேற்குப்பக்கமாக நிலப்பரப்பு 03 குளி 09 இனை ஆறுமுகம் தட்சணாமூர்த்தியும் பெண் மனோன்மணியும் ஆகியோருக்கு யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு செல்வி சிசிலியா ஜெயம்தேவி இராயப்பு முகதாவில் 1994.06.10 ஆம் திகதி 451 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் தங்களுக்குரிய கொள்வனவும் ஆட்சியுமான ஆதனமென்றும்

குறித்த ஆறுமுகம் தட்சணாமூர்த்தியும் பெண் மனோன்மணியும் இவ்வாதனத்தை சின்னையா சிதம்பரநாதன் முகதாவில் 1994.08.27 ஆம் திகதி முறையே 13035 உம் 13036 உம் இலக்கங்கள் மூலம் கோண்டாவில் கிழக்கு தம்பித்துரை பத்மநாதனுக்கு ஈட்டுறுதி நிறைவேற்றியிருந்தார்கள் என்றும்

மேலும் ஆறுமுகம் தட்சணாமூர்த்தியும் பெண் மனோன்மணியும் மேற்படி ஈட்டுறுதியின் பேரால் கொடுபட வேண்டிய வட்டியையும் முதலையும் தம்பித்துரை பத்மநாதனுக்கு 1995.04.26 ஆம் திகதி கொடுத்து ஈட்டுறுதிகளை இரத்துச் செய்திருந்தார்கள் என்றும்

மேற்படி ஆதனத்தின் தாயுறுதி பதிவு பெற்ற உறுதிகள் 1991 ஆம் ஆண்டு சித்திரை, 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதங்களில் ஏற்பட்ட இடப் பெயர்வுகள் நிமித்தம் அழிந்து விட்டதாகவும், இவ்வாதனம் தங்களின் கொள்வனவும் 17 வருடங்களுக்கு மேற்பட்ட தடையற்ற ஆட்சியுமான ஆதனமானதென்றும் மேற்படி விவரங்களை உள்ளடக்கி ஆறுமுகம் தட்சணாமூர்த்தியும் பெண் மனோன்மணியும் என்பவர்களால் 20.10.2011 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு இராமலிங்கம் சபேசன் முகதாவில் 3470ஆம் இலக்கத்தில் நிறைவேறிய பிரகரடனப்படுத்தும் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

**குறிப்பு** :- யாழ்ப்பாண காணிப்பதிவாளர் நாயகம் அலுவலகத்தினால் பதிவு செய்யப்பட்டதற்கான மேற்காணும் 402/1990.01.10 451/ 1994.06.10 அறுதி உறுதிகள் விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்படவில்லை.

,எனவே குறித்த ஆதனம் மேற்படி விவரங்களை வெளிப்படுத்தி காணப்படுவதால் இவ் ஆதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமாக ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினரூடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரிகளின் பெயருக்கு குறித்த இலக்கமுடைய ஆதனத்தைப் பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த அதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர், நல்லூர் பிரதேசசபை.** (IN77196)(11,17)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### VACANCIES

Applications are invited by me up to 31st July, 2018 from suitably qualified persons for the following posts.

**GRADUATE TRANSLATOR, GRADE II (SINHALA/ TAMIL)**

**Qualifications:**

i) a) A degree of a recognized University with Sinhala/ Tamil as a subject.

**AND**

b) A credit pass in English Language or Literature at the G.C.E. Ordinary Level) Examination or should have passed the G.C.E. (Advanced Level or Higher examination in the English medium.

ii) Preference will be given to graduates who have offered English as a subject for the degree and/or who are proficient in all three languages.

**Age: Not more than 45 years.**

**Salary Scale :** U-MN 3 (II) - Rs.42,885-18X660-54,765 p.m (as at 01.01.2020)

**Selection** : By Test and Interview

**WORKS SUPERINTENDENT (CIVIL), GRADE II – (Vavuniya Campus)**

**Qualifications:**

a) National Diploma in Technology (NDT) or equivalent qualifications **and** have at least four years experience in the relevant field after obtaining such qualifications.

NOTE: Period of in-plant training will not be counted for the four years' experience.

**OR**

b) National Certificate in Technology (NCT) or equivalent qualifications **and** have at least ten years experience in the relevant field after obtaining such qualifications.

**Age: Not more than 40 years.**

**Salary Scale** : U-MN 2 (II) - Rs.37,275- 18x495 - 46,185 p.m (as at 01.01.2020)

**Selection** : By Interview

**SUPERVISOR (CIVIL), GRADE III / SUPERVISOR (ELECTRICAL), GRADE III**

**Qualifications:**

a) National Certificate in Technology or equivalent qualifications with 3 years experience may be obtained while following the NCT course;

**OR**

b) G.C.E(Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with at least 5 years' experience as a Supervisor in the relevant field in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment.

**Age: Not more than 40 years.**

**Salary Scale :** U-MT1 (IIIA) - Rs.31,625-7x300;10x355-37,275 p.m (as at 01.01.2020)

**Selection** : By Interview

**BOOK KEEPER, GRADE II SEG.'B'**

**Qualifications :**

G.C.E. (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with at least three credit passes including credit passes in Sinhala/Tamil/English Language or Literature and Arithmetic/Commercial Arithmetic/Mathematics.

**AND**

**EITHER** (a) The National Certificate in Business Studies of the Sri lanka Technical College/Poly-technical Institute under the Ministry of Higher Education/ Ministry of Labour & Vocational Training;

**OR** (b) Passes in three subjects including Accountancy and Business Studies on one and the same occasion at the G.C.E. (Advanced Level) Examination.

**Age: Not more than 40 years**

**Salary Scale :** U-MN1 (IIIA) - Rs.30,725-17x300-35,825 p.m (as at 01.01.2020)

**Selection** : By Test in Accounts and Interview

**AGE LIMIT :** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

Allowances approved by the University Grants Commission.
Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
Gratuity payment.
Employment trust fund.
Free Medical Care.

Applications should be on **specified forms** issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Deputy Registrar / Establishments [Non –Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed Rs.15/- Stamped envelope of 23X10 cm in size. Only Applications sent on the **specified** form will be accepted. (**Please annex copies of relevant documents**). The envelope containing the duly filled application form must bear **Title of the Post** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Deputy Registrar / Establishments [Non –Academic] of this University **on or before 31/07/2018.**

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

REGISTRAR
03.07.2018


**CANADA , USA**
**study & work visa**
**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online form filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street, Colombo -13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 077 791 1649
Office : 0113 020 892


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிவகுரு சிவக்கொழுந்து**

தோற்றம்
21.02.1928

மறைவு
15.07.2017

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அம்மாவே!
உங்கள் நினைவுகளில்
வாழ்கின்றோம் அம்மா!

(cs 17964) (13,17)

**குடும்பத்தினர்.**
இல. 24/3, மதவடி ஒழுங்கை,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
22 . 05 . 1943



உதிர்வு
04 . 06 . 2018

## அமரர் இளையதம்பி பஞ்சலிங்கம்

கடந்த 04.06.2018 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கு அமரர் இளையதம்பி பஞ்சலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (04.07.2018) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

04.06.2018 அன்று மரணச் செய்திகேட்டு உடன்ஓடோடி வந்து உதவிகள் புரிந்த அயலவர், உற்றார், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்களுக்கும், தபால் மூலம், தொலைபேசி மூலம், இணையதளம் மூலம் துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் தனிப்பட்ட ரீதியாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


**நீர்வேலி தெற்கு,**
**நீர்வேலி.**

(CS/17966)11,17)

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பாமகள்

# விஞ்ஞானத்தின் பயணப் படிமுறைகள்



### சீன விஞ்ஞானம்

சீன விஞ்ஞானம் அனுபவ அடிப்படையைக் கொண்டது. கோட்பாடுகள் பெரிதும் புராதன மானவையாகவே இருந்தன. வானியலில் அவர்கள் ஈடுபட்டிருந்தபோதும், கணித முறைகளை அவர்கள் குறைவாகவே கையாண்டனர். வானியல், மருத்துவம், பொறியியல், ஒளியியல், காந்தவியல், போர்த் தளபாடம், வெடிமருந்து, எழுதுதாள், நாள்காட்டி போன்ற பலதுறைகளில் விஞ்ஞானக் கருதுகோள்களை உருவாக்கி உலகுக்கு அளித்த பெருமையை சீனா தட்டிக் கொள்கின்றது. கி.மு. 2 ஆம், 3 ஆம் நூற்றாண்டளவில் சீனர்கள் நாள்காட்டிகளை துல்லியமாகக் கணித்தனர். நாள்கள், மாதங்களை மட்டுமன்றி சந்திர, சூரிய இயக்கங்கள் சந்திர, சூரிய கிரகங்கள் பற்றிய தகவல்களையும் சரியாகக் குறிப்பிட்டனர்.

நட்சத்திரங்களை இனங்காண்பதற்கும், அவற்றின் நிலையையும் இருப்பிடத்தையும் அறிவதற்கும் கி.மு. 4 ஆம் நூற்றாண்டளவில் சீனர்களால் நட்சத்திர அட்டவணைகள் தொகுக்கப்பட்டது. கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் சீனர்கள் காந்தவியல் கண்டுபிடிப்பை உலகுக்கு அளித்தனர். காந்தக் திசைமானியை கண்டுபிடித்ததன் ஊடாக கப்பலோட்டுதல், வானியல், நில அளவை, போர் நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு பெருதொண்டு ஆற்றினர். உலகில் அச்சுக்கலையை அறிமுகம் செய்தவர்கள் சீனர்கள் ஆவர். செதுக்கப்பட்ட கற்கள், முத்திரைகள் கொண்டு அச்சுப்பதித்துக் கோர்த்த நூற்சுவடுகள் பல அகழ்வுகள் மூலம்கண்டெடுக்கப்பட்டுள்ளன. எழுதுதாள், எழுதுகருவிகள் போன்றவற்றையும் சீனர்களே அறிமுகம் செய்தனர்.

### வெடிமருந்துக் கலையும் மருத்துவ முறையும்

சீனர்களின் மற்றுமோர் கண்டுபிடிப்பு நெருப்புமருந்து என அழைக்கப்படும் வெடிமருந்துக் கலையாகும். இரசாயன மூலகங்களை அறிந்திருந்த சீனர்கள் நெருப்பு மருந்தின் ஊடாக வெடிமருந்து உற்பத்தி செய்யும் கலையை உலகுக்கு அறிமுகம் செய்தனர். இந்தக் கண்டுபிடிப்பு ஐரோப்பாவில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில்தான் அறிமுகமாகியது. சீனர்களின் மருத்துவம் வேதகால நாகரிகத்தை ஒத்தது. இயற்கை மருத்துவ முறையை யும், ஊசி முறை மருத்துவ முறையையும் நன்கு பிரயோகித்து வந்தனர். இன்றும்கூட சீன ஊசிமுறை மருத்துவம் பல நாடுகளிலும் நடைமுறையில் காணப்படுகின்றன.


பாரம்பரிய சீன மருத்துவ முறைக்கு நீண்ட வரலாறு உண்டு. பழைய நாகரீகத்தைச் சேர்ந்த 800 வைத்திய நூல்களை சீனா பெற்றுள்ளது. இவற்றுள் அனேகமானவை சிகிச்சை மருத்துவம் பற்றி எழுதப்பட்டவையாகும். இந்த நூல்கள் சீனாவின் பாரம்பரிய மருத்துவக் கலையைக் கூறுகின்றன. சுகாதாரம், சிகிச்சை முறைகள், நோயின் அறிகுறிகள் முதலியவற்றை இந்த நூல்கள் விளக்குகின்றன. சீனர்களின் கைவினைத்திறன் மற்றும் தொழிநுட்ப அறிவுக்கு மிக முக்கியமான சான்று சீனப்பெருங் சுவர் ஒன்றே ஆகும். இந்தச் சுவர் உலக அதிசயங்களில் ஒன்றாக அமைகின்றது.

### அரேபியர் கால விஞ்ஞானம்

கி.பி. 600 க்கும் 13ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்துக்கும் இடைப்பட்ட காலம் பண்டைய ஆரேபியரின் விஞ்ஞான அறிவின் எழுச்சிக் காலமாகும். கிரேக்கச் சிந்தனைகளை அரேபியர்கள் நூல்வடிவில் மொழிபெயர்த்து அவற்றை அனுபவ பூர்வமாகத் தொகுத்து அளித்தார்கள். பைதரகரசு, அரிஸ்டோட்டில், ஆக்கிமிடிஸ், பிளேட்டோ, தொலமி போன்றோரின் மூல நூல்கள் அரபு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டதால், வானியல், ஒளியியல், இரசாயனவியல், மருத்துவம், கேத்திர கணிதம், அட்சர கணிதம் போன்ற துறைகளில் அரேபிய விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தது. புவியியல், வானியல் போன்ற அறிவுத்துறைகளில் அரேபியர்கள் மிகவும் அறிவுடையவர்களாக விளங்கினர். தமது உயிர் வாழ்க்கைக்கும், சமய வாழ்க்கைக்கும் வானியலையும், கணிதத்தையும் நன்கு பயன்படுத்தினர்.

இதற்காக வானிலை அவதான நிலையங்களை அமைத்திருந்தனர். வானிலை ஆய்வுக்காக நுட்பமான ஆய்வுக்கருவிகளைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தினர். நுட்பமான வானியல் அட்டவணைகளையும், நட்சத்திர அட்டவணையை அனுபவரீதியாகத் தொகுத்துப் பயன்படுத்தினார்கள். கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ரோஜா பேக்கன் என்ற விஞ்ஞானியின் ஒளியியல் கணிதக் கருத்துக்களை ஆதாரங்களாகக் கொண்டு ஒளி பற்றிய ஆய்வில் சிறப்பான பங்கு வகித்தனர். கி.பி. 965 ஆம் ஆண்டில் பிறந்த 'இன்னு அல் ஹைத்தாம்' கணிதம், பௌதீகம், வானியல், மருத்துவம் போன்ற துறைகளில் அறிஞராக விளங்கினார். இவரது ஒளியியல் தொடர்பான ஆய்வுகள், கருத்துக்கள் சமகாலத்தில் வாழும் பௌதீகவியலாளர்களால் வரவேற்கப்படுகின்றன.

அரேபியர்களின் மற்றுமொரு சிறப்பானதொரு பங்களிப்பு இரசாயனவியலுக்குரிய கருத்துக்களை முன்வைத்தமையாகும். அரேபியர்கள் இரவாதத்தை அனுபவபூர்வமாக ஆய்வுகூட பரிசோதனைகள் மூலம் நிறுவ முயன்றனர். 'மூஸா அல் - கவாரிஸ்மி' அட்சரகணிதத்திலும், எண்கணிதத்திலும் நூல்களை எழுதினார். இந்த நூல்களில் கணிசமான அளவு புதிய விடயங்கள் இருந்தன. ஜாபீர் பின் அப்துல்லா தலைசிறந்த வானியல் கணிதவியலாளராகக் கருதப்படுகின்றார். இவர் திரிகோண கணிதத்தில் புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்தார். அபுமூஸா ஜாபீர் இப்னுகையான் புகழ் பெற்ற இரசவாதியும் இரசாயனவியலாளரும் ஆவார். இவர் இரசாயன ஆய்வில் நீள்தல், ஒடுக்கம் ஆகிய இரண்டிற்கும் விஞ்ஞான ரீதியான விளக்கமளித்தார். ஆவியாகி நீள்தல், உருகுதல், படிகமாதல் ஆகியவற்றிற்கான முறைகளையும் அவர் செம்மைப் படுத்தினார். எனவே வானியல், புவியியல், கேத்திர கணிதம், வடிவ கணிதம், ஒளியியல், இரசவாதம், வைத்தியம் போன்ற துறைகளில் அரேபியரின் பங்களிப்பு சிறப்பாக அமைந்திருந்தது என்றால் அது மிகையாகாது.



### மத்திய காலம்

இந்தக்காலத்தில் தொழிநுட்பம் சார்ந்த விஞ்ஞான வளர்ச்சியே முக்கியத்துவம் பெற்றுள்ளது. இக்காலத்தில் திசையறி கருவி, வில்லைகள், அச்சுக்கலை, நேரமறிதல், இரசாயனமுறைகள் மற்றும் உபகரணங்கள் போன்றவை கண்டுபிடிக்கப் பட்டன. இதன் விளைவாக 16 ஆம் நூற்றாண்டில் தோன்றிய கல்வி மறுமலர்ச்சியுடன் விஞ்ஞானப் புரட்சியும், விஞ்ஞானப் புரட்சியின் விளைவாக ஐரோப்பாவில் இரு சம்பிரதாயங்களும் தோன்றின.

> மறுமலர்ச்சிக் காலத்தில் விஞ்ஞானம் படிப்படியாக முன்னேறத் தொடங்கியது. மத்தியகாலத்தில் கூடுதலாக அறியப்பட்டிருந்த ஆதாரமற்ற கருத்துக்களும், கோட்பாடுகளும் செல்வாக் கிழந்தன. நவீன விஞ்ஞானத்திற்குரிய புதிய கருத்துக்களும், அணுகு முறைகளும் துளிர்விட்டன. கணிதம், வானவியல், வெப்பவியல், பௌதீகவியல் போன்ற துறைகளில் பல மாற்றங்களும் அபிவிருத்திகளும் உருவாகத் தொடங்கின. கொப்பனிக்கஸ், தைகோடிபிறாகே, கெப்லர், கலிலியோ, நியூட்டன் ஆகியோர் இக்காலத் திற்குரிய முதன்மை விஞ்ஞானிகள் ஆவர்.

### நவீன விஞ்ஞானம்

மறுமலர்ச்சிக் காலத்தில் விஞ்ஞானம் படிப்படியாக முன்னேறத் தொடங்கியது. மத்தியகாலத்தில் கூடுதலாக அறியப்பட்டிருந்த ஆதாரமற்ற கருத்துக்களும், கோட்பாடுகளும் செல்வாக்கிழந்தன. நவீன விஞ்ஞா னத்திற்குரிய புதிய கருத்துக்களும், அணுகுமுறைகளும் துளிர்விட்டன. கணிதம், வானவியல், வெப்பவியல், பௌதீகவியல் போன்ற துறைகளில் பல மாற்றங்களும் அபிவிருத்திகளும் உருவாகத் தொடங்கின. கொப்பனிக்கஸ், தைகோடிபிறாகே, கெப்லர், கலிலியோ, நியூட்டன் ஆகியோர் இக்காலத்திற்குரிய முதன்மை விஞ்ஞானிகள் ஆவர்.

# தியானத்துக்கான எளிய வழிமுறை

தியானம் இருப்பதற்கு சில வழிமுறைகளை முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். அவற்றைப் பற்றி பார்க்கலாம்.

உங்கள் இஷ்ட தெய்வத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளவும். உங்கள் தெரிவு குலதெய்வமாகவோ, உங்களுக்கு பிடித்த வேறு தெய்வமாகவோ இருக்கலாம்.

தியானத்திற்காக ஒரு நாளில் இரண்டு நேரங்களை தேர்வு செய்து கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக காலை 5 மணி, மாலை 7 மணி. முடிந்தவரை இதே நேரத்தில் தினமும் தியானத்தில் அமர வேண்டும்.

வீட்டின் ஒரு இடத்தை தியானத்திற்காக தேர்ந்தெடுங்கள். அது பூஜை அறையாகவோ, வேறு அமைதியான இடமாகவோ இருக்கலாம். பூஜை அறை இல்லையென்றால், இஷ்ட தெய்வத்தை வைப்பதற்கு ஒரு சிறு இடத்தை ஏற்படுத்திக் கொள்ளவும்.

அங்கு ஆசனத்தை விரித்து அதில் அமரவும். தலை, கழுத்து, மற்றும் முதுகெலும்பு நேராக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். கைகள் மடி மீது இருக்கட்டும். கண்களை மூடிக் கொள்ளவும்.

சூரியன், நிலவு, நட்சத்திரங்கள், மேகங்கள் எதுவும் இல்லாத பரந்த எல்லையற்ற ஆகாயம் மங்கிய ஒளியில் இருப்பதாக சில நிமிடங்கள் கற்பனை செய்யவும். இது உங்கள் உடலையும், உள்ளத்தையும் தளர்த்தி அமைதிப்படுத்தும்.

இப்போது உங்கள் உணர்வு மையத்தை இதயத்துக்கு எடுத்துச் செல்லவும். பன்னிரண்டு



இதழ்கள் கொண்ட சிவப்புத் தாமரையை அங்கு கற்பனை செய்யவும். உங்கள் இஷ்ட தெய்வம் அங்கு அமர்ந்திருப்பதாக எண்ணுங்கள்.

இப்போது இஷ்ட தெய்வத்திடம் மனமுருகிப் பிரார்த்தனை செய்யவும். நல்ல உடல், அமைதியான மனம், நம்பிக்கை, பக்தி, விவேகம், பற்றின்மை ஆகியவற்றுக்காக பிரார்த்திக்கவும்.

ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் இஷ்ட தெய்வத்தை தியானிக்கவும். மனம் அங்கும் இங்கும் ஓடினாலும் அதை இழுத்து வந்து இஷ்ட தெய்வத்திடம் நிறுத்துங்கள்.

பின்பு இஷ்ட தெய்வத்தின் நாமத்தை ஜெபம் செய்யவும். உங்கள் இஷ்ட தெய்வம் ராமராக இருந்தால் 'ராம.. ராம' என்று தொடர்ந்து ஜெபம் செய்யவும். குறைந்த பட்சம் 108 முறையாவது ஜெபம் செய்ய வேண்டும். அதிகமாக செய்ய விரும்பினால் அது 108ன் மடங்காக இருக்கட்டும்.

இப்போது மானசீக பூஜை செய்யலாம். சந்தனம், பூ, ஊதுபத்தி, தீபம், நைவேத்தியம் ஆகிய ஐந்து பூஜை பொருள் களால் செய்யப்படுகின்ற பூஜையாக அது இருக்கட்டும்.

முடிவாக தியானத்தின் பயன்களை இஷ்ட தெய்வத்தின் திருவடிகளில் சமர்ப்பிக்க வேண்டும்.

மனக்கட்டுப்பாட்டையும், மன ஒருமைப்பாட்டையும், மன அமைதியையும் பெற தியானமும், ஜெபமும் உதவுகின்றன.

---

## மோத...

தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் எமது பத்திரிகையின் உயர் மட்டப் பத்திரிகை ஆசிரியர்களைத் தொடர்பு கொள்ள முடியும். அதைவிடுத்து இலங்கையின் ஊடகவியலாளர்களுக்குப் பகிரங்க அச்சுறுத்தல் விடுக்க வேண்டாம்.

இவ்வாறு 'நியுயோர்க் டைம்ஸ்" பன்னாட்டு நாளிதழின் ஆசிரியர் மைக்கல் ஸ்லெக்மன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம் தொடர்பில் நியுயோர்க் டைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. அது தொடர்பில் மகிந்த ராஜபக்ச தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் நியுயோர்க் டைம்ஸ் நாளிதழின் ஆசிரியர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

இலங்கையின் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது எமது பத்திரிகையால் ஜூன் மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம் தொடர்பான செய்திக்கான தகவல் பங்களிப்பை மேற்கொண்ட இலங்கை ஊடகவியலாளர்கள் இருவருக்குப் பகிரங்க அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான இவ்வாறான அச்சுறுத்தல் நடவடிக்கைகள் ஏற்கப்பட முடியாதவை. இத்தகைய செயற்பாடுகள் ஊடக சுதந்திரத்துக்குத் தடையாக அமைவதுடன், ஊடகங்களை அமைதிப்படுத்தும் விதமாகவும் அமைந்துள்ளன. செய்தியை அறிந்துகொள்வதில் இலங்கை மக்கள் கொண்டுள்ள உரிமையை மறுதலிப்பதாகவும் உள்ளது.

இலங்கையின் ஊடகவியலாளர்கள் எமது நிறுவனத்துக்கோ அல்லது வேறு நிறுவனத்துக்கோ எவ்வித அச்சுறுத்தல்களும் இன்றி சுதந்திரமாகச் செயற்படுவதனை உரிய அதிகாரசபைகள் உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். எமது பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின் நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் உயர்மட்ட ஆசிரியர்களைத் தொடர்புகொள்ள முடியும். அதனை விடுத்து இலங்கை ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகள் ஏற்கப்பட முடியாதவை - என்றுள்ளது. (ற-31)

## டெனிஸுக்கு...

அமைச்சர் பா. டெனிஸ்வரனின் முன்னைய் துறைகளை அவருக்கு ஒதுக்கியதன் அடிப்படையில் 5 அமைச்சர்கள் கொண்ட மாகாண அமைச்சர் வாரியத்தின் விவரத்தைத் தருமாறு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கோரியுள்ளார் என அறிய முடிகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக முன்னாள் மாகாண அமைச்சர் டெனிஸ்வரன் தாக்கல் செய்திருந்த மனு மீதான கட்டளையை மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியது. முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தம்மைப் பதவியில் இருந்து நீக்கியது தவறு என்று உத்தரவிடக் கோரி, வடக்கு மாகாண முன்னாள் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். நீதியரசர்கள் குமுதினி விக்ரமசிங்க, ஜானக டி சில்வா ஆகியோரைக் கொண்ட அமர்வு இந்த வழக்கை விசாரித்து கட்டளை வழங்கியது. அந்தக் கட்டளை, வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கொழும்பிலுள்ள ஆளுநர் அலுவலகத்துக்கு கட்டளை நேற்றுக் காலை கிடைத்தது.

டெனிஸ்வரனின் துறைகளில், போக்குவரத்து அமைச்சை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தன்வசம் எடுத்துக்கொண்டார். விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் மீன்பிடி அமைச்சும் இணைக்கப்பட்டு அமைச்சர் கந்தையா சிவநேசனுக்கு வழங்கப்பட்டது.

மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கல் - விநியோகம் தொழிற்துறை, தொழில் முனைவோர் மேம்படுத்தல் ஆகியவற்றுடன் வர்த்தக வாணிபத்தை இணைத்து அமைச்சர் அனந்தி சசிதரனுக்கு வழங்கப்பட்டது.

தற்போது டெனீஸ்வரன் மீளவும் அமைச்சரவையில் இணைக்கப்பட்டால் அமைச்சர் ஒருவர் பதவி விலகவேண்டும்.

5 அமைச்சர்களாக மாற்றம் செய்யும்வரையில் உத்தியோக பூர்வமாக வடக்கு மாகாண அமைச்சரவை இயங்க முடியாது. அமைச்சரவையினை 5 பேராக மாற்றும் பொறுப்பு நீதிமன்ற ஆணையின்படி ஆளுநருக்கே வழங்கப்பட்டுள்ளதனால் அதனை நிறைவேற்றவேண்டிய கட்டாயம் ஆளுநருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக டெனிஸ்வரன் உள்ளடங்களாக ஏனைய அமைச்சர்களின் பெயரை உடனடியாகப் பரிந்துரைகுமாறு முதலமைச்சரை தற்போது ஆளுநர் கோரியுள்ளார். (ற-21,105)

## மணிவண்ணனின்...

உறுப்புரிமையை நீக்கக் கோரி நேற்று முன்தினம் கொழும்பு மேல்முறையீட்டு நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், தெரிவத்தாட்சி அலுவலகர் உள்பட்டோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதியாத ஒருவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டமை உள்ளுராட்சி தேர்தல் விதியை மீறும் செயல் என மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணனின் முகவரியை தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஊடாக அறிவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன என்ற தகவல்கள் வெளியாகி இருந்தன. (ற-21,8,37)

## பெரமுனவின்...

மகிந்த ராஜபக்ச, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச உட்படக் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். உள்ளுராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமை வழங்கப்படவுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ச நேரடி அரசியலுக்கு வரும் காலம் வந்துள்ளது என்றும். அவர் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும் நிகழ்வில் கலந்துகொள்வது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்றும் அந்தக் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். (ற-31)

## பொலிஸ்...

ளார். உயிரிழந்தவர் திருகோணமலையைச் சேர்ந்த நஸீர் (வயது 25) எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டார் என்று கூறப்படுகின்றது. உடற்கூற்றுப் சோதனைகள் நாளையே நடைபெறவுள்ளன.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் கடமையிலிருந்தபோதே உயிரிழந்துள்ளார். மல்லாகத்தில் உள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தபோதே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்த நிலையில், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். உடல் உடற்கூற்றுச் சோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்தவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் உறவினர்கள் நேற்று மாலை மருத்துவமனை வளாகத்தில் குழுமியிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ற-21,37,29,106)

## பெரும் குற்றம்...

ளது. அதில் உள்ளதாவது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அநேக விடயங்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. இலங்கை அரசு இந்தப் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியது மட்டுமல்லாது பிரேரணையை நிறைவேற்றுவதற்கு மேலதிக கால அவகாசத்தையும் கோரியிருந்தது.

அந்தக் கோரிக்கையை பன்னாட்டுச் சமூகம் ஏற்று அனுமதித்தும் இருந்தது. அரசு தமது வாக்குறுதிகளிலிருந்து பின்வாங்க முடியாது. கடந்தகாலச்சம்பவங்கள் மீள் நிகழாமையை உறுதி செய்யும் முகமாக ஒரு புதிய அரசியல் யாப்பு அங்கீகரிக்கப்படவேண்டும். மனித உரிமைகள் சபையின் பிரேரணையில் உள்ள அம்சங்களில் இது உள்ளடக்கப்பட்டுள்ளது. புதிய யாப்பு தொடர்பில் 1988ஆம் ஆண்டிலிருந்தே பல்வேறு கருமங்கள் இடம்பெற்று வந்துள்ளன. தற்போது அதை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசியல் விருப்பும் தைரியமுமே தேவைப்பாடாக உள்ளது.

வடக்கு கிழக்கில் மந்த கதியில் காணி விடுவிப்புகள் இடம்பெறுகிறது. எமது காணிகளில் இராணுவம் பண்ணைகள் நடத்துவதை அனுமதிக்க முடியாது. எமது மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் இத்தகையான பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

அரசானது தீவிரவாதப் போக்காளர்களின் பேச்சுக்களுக்கு தேவையற்ற முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றமையானது இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்குத் தடையாக

அமைகின்றது. இந்த அரசைப் பதவிக்கு கொண்டுவருவதில் பெரும்பங்காற்றிய எமது மக்கள் கடந்த காலத்தில் அரசு முன்னேற்றங்களை வெளிக்காட்ட முடியாமையால் அதிருப்தி அடைத்துள்ளார்கள். எமது இளைஞர்கள் தொடர்ந்தும் வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள். ஒரு சில விடயங்கள் செய்யப்படுவதன் முக்கியத்துவத்தை இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது அந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் சபையில் இருந்து ஐக்கிய அமெரிக்கா விலகியிருந்தாலும் 2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் நடைமுறையாக்கம் தொடர்பில் அரசின் மீதான பன்னாடுகளின் ஈடுபாடு தொடர்ந்தும் மாற்றமடையாமல் இருக்கும் என்று ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி தெரிவித்தார் - என்றுள்ளது. (ற-21)

## மரண அறிவித்தல்

மலர்வு 28 . 04 . 1938



உதிர்வு 30 . 06 . 2018

### சி.ம.கணபதிப்பிள்ளை சிவலிங்கம்

இல.77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் மோட்டோர்ஸ் உரிமையாளர் சி.ம.கணபதிப்பிள்ளை சிவலிங்கம் கடந்த (30.06.2018) சனிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிள்ளையார் விலாஸ் உரிமையாளர் சி.ம.கணபதிப்பிள்ளை அன்னலெட்சுமி தம்பதி களின் அன்பு மகனும் காலஞ்சென்ற டெனியா தாமோதரம் பிள்ளை மற்றும் இராசம்மா தம்பதிகளின் அன்புமருமகனும் திருமதி இராசலெட்சுமியின் அன்புக்கணவரும் சிவாநந்தன், சிவகுமாரன், சிவஅன்பு சிவசோதி, சிவபாலன் (கனடா), சிவசக்தி (கனடா) சிவரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் பாக்கியத்தின் பெறாமகனும் பிள்ளையார் இன் உரிமையாளர் றெட்ணேஸ்வரனின் சித்தப்பாவும் சாரதாதேவி, மலர்விழி, சர்மிலா, ராகினி (கனடா), விஜேந்திரன் (கனடா), லகுசியாமா ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவானுஜன், சிவருஜன், சிவனிஜன், நிருஜிகா, சிவநீவன், பவானிகா (கனடா), கர்நிகன் (கனடா), சிவாஜனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**(சிவலிங்கம் மோட்டோர்ஸ்)**

**021 222 3212**

## உணவகம் வாடகைக்கு

A9 வீதி, கிளிநொச்சி புதிய வைத்தியசாலைக்கு அருகில் 30 வருடமாக இயங்கிக் கொண்டிருக்கும் அடிப்படை வசதிகள் கொண்ட உணவகம் வாடகைக்குண்டு.

**தொடர்பு - 076 9845 575**













## பெண் வேலையாள் தேவை

கடை ஒன்றிற்கு 8.30 மணியில் இருந்து 5.30 மணிவரை வேலை செய்யக்கூடிய பெண் தேவை. சம்பளம் 18 000/= மதிய உணவும் வழங்கப்படும்.

**தொடர்பு - 075 988 0000**

## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து பணிபுரிய பணிப்பெண் தேவை.

**தொடர்பு - 077 3633 233**

## பெயர்மாற்றம்

இல.51, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் வசிக்கும் **சித்திரா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **இந்திரா** என மாற்றம் செய்வதுடன் சகல ஆவணங்களிலும் இந்திரா என ஒப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**இந்திரா**

(CS/17955)(11,17)

## பெயர்மாற்ற அறிவித்தல்

இல.56/31, 5th Cross Street (5 ஆம் குறுக்குத்தெரு), யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **பொன்னம்மா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **றெஜினா பொன்மணி** என மாற்றம் செய்ய உள்ளதை இலங்கை ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் **றெஜினா பொன்மணி** என கையொப்பமிடுவேன் என்பதை அறியத் தருகின்றேன்.

(CS/17959)(11,17)

## மரண அறிவித்தல்

### முத்து செல்லத்துரை (யோவேல்)



மந்திகையைப் பிறப்பிடமாகவும் அம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து செல்லத்துரை கடந்த (02.07.2018) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் கேமசபேஸ்வரி (றெபேக்கா) யின் அன்புக் கணவரும் செல்வக்குமார், ராசாத்தி, மோகன், இராணி, மதி வண்ணன், சிறீ, அரவிந்தரூபன், காந்த ரூபன், சிவவதனி (ஜேர்மனி), சிவ கர்ணன், நிசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமலர், இராசலிங்கம், சோபனா, கிளைமன், சுமதி, கிருஸ்ண வேணி பிரியா, சோபிகா, தர்மிலன் (ஜேர்மனி), வசந்தகலா ஆகியோரின் அன்புமாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (05.07.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் (அம்பன்), காலை 10.00 மணியளவில்நடைபெற்றுமந்திகைகருகம்பன்மயானத்தில்நல்லடக்கம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அம்பன், குடத்தனை.**
**071 424 0593**

**தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(ANE 518/15/17)

## மரண அறிவித்தல்



### திருமதி இராசலெட்சுமி குலநாயகம்

புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை, 3ஆம் யூனிற்றையும் கந்தர்மடம், யாழ்ப்பாணத்தையும் வசிப்பிடங்களாகவும் கொண்ட திருமதி இராசலெட்சுமி குலநாயகம் கடந்த (01.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பராசக்தி தம்பதிகளின் அன்பு மகளும் சுருவிலைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான தம்பு - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குலநாயகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, நடராசா, சிங்கராசா, தியாகராசா, சேனாதிராசா மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தயாளன் மற்றும் அகிலன் (கனடா), சாந்தினி (உள்ளூராட்சித் திணைக்களம், கைதடி), சசிதரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் வத்சலா (லண்டன்), சசிகலா (கனடா), கலாநிதி கே.ரி. கணேசலிங்கம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சுபாந்தினி (கனடா) ஆகியோ ரின் பாசமிகு மாமியாரும் ஷறோன், ஷாரங்கி, அஸ்வினா, மெலனி, அபிலாஷ், அகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற இராஜநாயகம் மற்றும் இராஜலட்சுமி, சிவபாக்கியம், சிவலிங்கம், சந்தானலட்சுமி, காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, கந்தசாமி மற்றும் விஜயலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2018) புதன்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**42, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.**

**தகவல்: கே.ரி.கணேசலிங்கம்**
**077 504 8894**

## விஜயகலா "பல்டி"

வந்துவிட்டது. அது எனது நோக்கமல்ல என்று தெரிவித்துள்ளார் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்.

புலிகளின் மீள் உருவாக்கம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து தெற்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவும் நேற்று அது தொடர்பில் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தினார். சந்திப்பின் போது இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு அவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடினார்.

மறுமுனையில் உரையாடும் விஜயகலாவினுடைய பதில் செய்தியாளர்களுக்கு விளங்கும் வகையில் அவுட் ஸ்பீக்கிரை ஓன் செய்தே ரஞ்சன் ராமநாயக்க உரையாடினார்.

அதிலேயே மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

புலிகள் தொடர்பில் கூறிய கருத்தை மீளப் பெறவேண்டும் என்று பிரதி அமைச்சர் பலமுறை இராஜாங்க அமைச்சர் விஜயகலாவிடம் கேட்டார். யாழ்ப்பாணத்தில் பிரச்சினைகள் உள்ளன. உடனடியாகக் கொழும்புக்கு வரமுடியாது என்று மறுத்த இராஜாங்க அமைச்சர் தொடர்பைத் துண்டித்தார்.

சிறுமி றெஜினா கொலை செய்யப்பட்ட போதும், அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டங்களிலும் மகளிர் விவகாரங்களுக்குப் பொறுப்பாக உள்ள இராஜாங்க அமைச்சர் விஜயகலா கலந்து கொள்ளவில்லை. கொழும்பில் இருந்தார் என்று கூறப்பட்டது. தற்போது யாழ்ப்பாணத்தில் பிரச்சினைகள் இருக்கிறது என்று கூறி கொழும்பு செல்ல மறுப்பது தொடர்பில் பலரும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

(ந-21,8)

## கலா, விக்கி...

தலைப்புலிகளின் மீள் உருவாக்கம் தொடர்பில் இவர்களே கருத்துக் கூறி வருகின்றனர்.

இவ்வாறு பிரதி அமைச்சரும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமானால் வடக்கு, கிழக்கில் விடுதலைப்புலிகளை மீள் உருவாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் கருத்துத் தெரிவித்தார். அது தொடர்பில் ரஞ்சன் ராமநாயக்க நேற்றுச் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தனது பதவிப்பிரமாணத்துக்கு ஏற்காத வகையில் கருத்து கூறியுள்ளார். இது தொடர்பில் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். பதற்றத்தில் இவ்வாறு பேசியதாக இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார். வடக்கில் இடம்பெற்று வரும் போதைப் பாவனை மற்றும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பிரபாகரன் மீண்டும் வரவேண்டுமெனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

புலிகளின் மீள உருவாக வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோரை மறுவாழ்வு பெறுவதற்கு அனுப்பவேண்டும்.

தற்போது ஹிட்லரின் ஆட்சி வேண்டுமென்று பௌத்த மதகுரு கூறுகின்றார். அதேபோன்று பிரபாகரனின் ஆட்சி வேண்டுமென்று கோரப்படுகின்றது. இவை தவறான செயற்பாடுகளாகும். நான் அந்தக் கூட்டத்தில் இருந்திருந்தால் இராஜாங்க அமைச்சரின் பேச்சை இடைமறித்து இவ்வாறு பேசுவதுதவறு என்றுகூறியிருப்பேன். இராஜாங்க அமைச்சர் தான் கூறிய கூற்றை மீளப் பெறவேண்டும். என்றார். (ந-71)

## விஜயகலா...

களில் பங்கேற்பதற்கும் தடைவிதிக்கவேண்டும் என்று வலியுறுத்தி பொது எதிரணியினரான மகிந்த அணியினர் நேற்று சபைக்குள் போராட்டத்தில் குதித்தனர்.

பொது எதிரணியோடு கைகோத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட அணியின் உறுப்பினர்களும் சபாபீடத்துக்கு முன்திரண்டு விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக கோசம் எழுப்பினர். இதனால், பெரும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டதால் நாடாளுமன்றத்தை இன்று பகல் ஒருமணிவரை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒருமணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல் ஆகியன முடிவடைந்த பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்று ஆரம்பமானது. இதன்போதே ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி சர்ச்சைக்குத் துவக்கப்புள்ளி வைத்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின்ரான எஸ்.எம்.மரிக்கார்.

இதையடுத்து பொது எதிரணியின் ஏனைய உறுப்பினர்களும் இவ்விவகாரம் குறித்துக் கருத்துகளை வெளியிட முற்பட்டாலும் அதற்கு சபாநாயகர் இடமளிக்கவில்லை. சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பொது எதிரணி உறுப்பினர்கள் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லை. ஒழுங்குப் பிரச்சினையை அடிக்கடி எழுப்பி சபாநாயகருடன் வாதிட்டதுடன், சபைக்கு நடுவே வந்து கோசமெழுப்பினர். செங்கோலைத் தூக்குவதற்கு விமல் வீரவன்ஸ முற்பட்டதால் படைக்கலச் சேவிதர்கள் அதற்குப் பாதுகாப்பளித்தனர். முடியாத கட்டத்தில் 1.55 மணிக்கு சபை நடவடிக்கையை தற்காலிகமாக ஒத்திவைத்தார் சபாநாயகர்.

மீண்டும் 2.15 இற்கு சபை கூடியது. இது சம்பந்தமாக தலைமை அமைச்சருடன் பேசினேன். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்தார் என்று சிறப்பு அறிவிப்பொன்றை விடுத்தார் சபாநாயகா. இருந்தும் மகிந்த அணி அடங்காமல் மறுபடியும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப எத்தனித்தது. சபாநாயகர் கடுந்தொனியில் கட்டளை பிறப்பித்தும் அமைதி காக்க மறுத்தனர். இந்த விடயம் பற்றி இனியும் பேச இடமளிக்கமுடியாது என்பதில் சபாநாயகரும் உறுதியாக இருந்தார்.

விமல் தலைமையில் எதிரணி உறுப்பினர்கள் சபாபீடத்துக்கு முன்பு வந்து சபாநாயகருடன் வாதிட்டது. விமலும், பிரசன்னவும் தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்துவதைக் கேட்கக்கூடியதாக இருந்தது.

இவ்வேளையில் விஜயகலாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென அத்துரெலிய ரத்தன தேரரும் வலியுறுத்தினார்.

சபாபீடத்துக்கு நடுவிலிருந்த பிரசன்ன ரணவீர எம்.பி, செங்கொலைத் தூக்கியதால் சர்ச்சை பூதாகரமானது. இதையடுத்து 2.20 மணியளவில் சபை நடவடிக்கைகள் இன்று மதியம்வரை ஒத்திவைக்கப்பட்டன. விமலின் வார்த்தைப் பிரயோகமானது வெட்கப்படவேண்டியது என்று சபாநாயகர் தெரிவித்ததுடன், கீழ்த்தரமாகச் செயற்பட வேண்டாம் எனவும் கூறினார். (ந)

## ஞானசாரரை...

அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அததில் உள்ளதாவது?

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நல்லவவர், வல்லவர், அவரை நாம் அவசரப்பட்டுக் கொன்று புதைத்து விட்டோம். உண்மையில் அவர் இன்னமும் உயிருடன் இருந்திருக்க வேண்டும். இன்று உள்ள பல பிரபல சிங்கள அரசியல் தலைவர்களை விடப் பிரபாகரன் சிறந்தவர். பிரபாகரன் கொண்ட கொள்கையில் நேர்மையாக இருந்தார்.

இவ்வாறு சொன்னது யார்?. மனோ கணேசனோ, விஜகலாவோ அல்ல. இந்தக் கருத்தை பகிரங்கமாக ஊடகங்களின் முன் பொதுபல சேனைவின் பொதுச் செயலர் ஞானசார தேரர் என் அமைச்சுக்கு வந்து சொன்னார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம், மாவட்டத்தில் உடைந்து நொருங்கியுள்ள சட்டம், ஒழுங்கு நிலைமையைக் கண்டித்து யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக, ஒரு தாயாக, ஒரு சகோதரியாக தன் கோபத்தை வெளிப்படுத்திய விஜகலா மகேஸ்வரனை மட்டும் பிடித்துக்கொண்டு விமர்சிப்பது ஏன்?. புலிகள் இயக்கம் தடை செய்யபட்டுள்ளதால், அதைப்பற்றி விஜயகலா பேசுவது சட்டவிரோதம் எனக் கூறலாம். அப்படியானால் அன்று ஞானசாரர் என்னிடம் கூறியதும் சட்ட விரோதம் அல்லவா?

உண்மையில் விஜயகலா தன் கருத்தைச் சொல்வதற்குச் சரியான சொற்களைப் பயன்படுத்தத் தவறி இருக்கலாம். ஒரு ராஜாங்க அமைச்சரான அவரது கருத்தில் உரிய முதிர்ச்சி இல்லாமல் இருக்கலாம். ஆனால், விஜயகலாவின் கோபம் மிகவும் நியாயமானது. உண்மையில் யாழில் சட்டம் ஒழுங்கு உடைந்து நொறுங்கிப் போயுள்ளது. சிறுமிகள் முதல் வயதான பெண்கள் வரை மனித மிருகங்களால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். நடைபெற்ற பாலியல் சம்பவங்கள் என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளன.

உண்மையில், இன்று யாழில் சட்டம், ஒழுங்கு சீரழிந்து உள்ளது என்பது அப்பட்டமான உண்மை. இந்த மிருகங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்க பொலிஸ் துறை தவறி விட்டது. யாழ்ப்பாண அரசியல் தலைவர்களும், தெருவில் இறங்கி தம் எதிர்ப்பை வெளிபடுத்தி ஒரு மக்கள் எதிர்ப்பு இயக்கத்தை நடத்தி இருக்கவேண்டும். பொலிஸ் செய்யட்டும் எனப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. தொழிற்படாத பொலிஸை தொழிற்பட வைக்க வேண்டும். ராஜாங்க அமைச்சர் விஜயகலாவின் கருத்தை விட்டுவிட்டு, யாழ்ப்பர்ண்த்தில் சட்டம், ஒழுங்கு சீரழிவே இன்று தேசிய பேசுபொருளாக மாறி இருக்க வேண்டும். என்றுள்ளது. (ந-21)


Vacancy


Restaurant Waiters உடனடியாகத் தேவை.

Send Your CV'S to.
hr@thethinnai.com or post it to

The Thinnai
86, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை செல்லத்துரை



தோற்றம் 12.03.1925

மறைவு 03.07.2018

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மற்றும் அன்னச்சத்திர ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை நேற்று (03.07.2018) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை ஆச்சிமுத்து தம்பதியரின் சிரேஸ்டபுத்திரனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சின்னாச்சி தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற தெய்வானைப் பிள்ளையின் அன்புக்கணவரும் தேவராணி (ஓய்வு நிலை ஆசிரியை), பாரதிதாசன், காலஞ்சென்ற சண்முகதாசன் (நிறுவுனர், அல்டிஎலக்ரோனிக்ஸ், யாழ்ப்பாணம்) மற்றும் கோகிலராணி, மோகனதாசன், கண்ணதாசன், முருகதாசன், ஐங்கரதாசன், யமுனாராணி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, பகவதி, கணேஷ், குமாரசாமி, பரிபூரணம் மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, நாகரத்தினம் மற்றும் அன்னம்மா காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் அருளானந்தம், தேவராசா ஆகியோரின் மைத்துனரும் தியாகராசா, வரதராணி, ஜெயரஞ்சினி, பேரின்பநாதன், வாசுகி, அமரலக்ஸ்மி, கிருசாந்தி, ரஜனி, குணேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் ராகுலன், நளாயினி, சுகந்தன், பிரசாந்தன், மயூரதன், திவ்வியா, திவாஸ்கர், நிரோஸ். சோபிகா, நிஷா, கஜேந்திரன், மயூரி, ஜனனி, தேனுஷா, நிவேதிதா, நஜீஸ்கன், அபிஷேக், மிதுஷேக், தனுஷேக், வினோத், வினோபா, வினோஜன், அமேசா, நவீன், பிரவீன் ஆகியோரின் அன்புப்பேரனும் பவந்தி, அரவின், லியானா, அபிலாஸ், ராகித்தியன், தரணிகா ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2018) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று க்கொள்ளவும்.

51/3, அன்னச்சத்திர ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 103 2484, 076 194 8756

தகவல்:
குடும்பத்தினர்.

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜீலை 4

**வசந்தசிறி வி.க. தாச்சித் தொடர்**

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தென்றல் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து யுவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்தை விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது.

**கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் கூடைப் பந்தாட்டச் சங்கத்தால் தனது அங்கத்துவக்கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கூடைப்பந்தாட்டத்தொடரின் ஆட்டங்கள் பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று .வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை இடம் பெறும் ஆட்டத்தில் யமகா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பட்டபிளை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சரஸ்வதியின் கரப்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 99ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவர் கேம் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று, புதன்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளன. இதன்படி இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் உள்ளூர் அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை சனசமூக நிலைய அணி மோதவுள்ளது.

தொடர்ந்து இடம்பெறும் வடக்கு மாகாண ரீதியாக நடைபெற்ற 5 வீரர்கள் பங்குபற்றிய தொடரின் இறுதியாட்டத்தில் கோண்டாவில் கிங் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை யு.கே. விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் 4 வீரர்கள் பங்குபற்றும் தொடரின் இறுதியாட்டத்தில் கோண்டாவில் கிங் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வரணியுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)



# யங்ஸ்ரார் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜீலை 4

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 99ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 23 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரில் கைதடி யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கைதடி யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் ஸ்ரார் அணி 3.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ராயேஸ் 7 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் துவாரகன் 3 இலக்குகளையும், கஜன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கைதடி யங்ஸ்ரார் அணி 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக சயன் 7 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ரமேஸ் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக கைதடி யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வீரன் துவாரகன் தெரிவானார். (ம-23)

# கண்ணகி வென்றது

யாழ்ப்பாணம், ஜீலை 4

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கண்ணகி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

வசந்தசிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வைகறை விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில் 5:3 என்ற புள்ளிகளின் அடிப்டையில் கண்ணகி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)

# கலையொளி அணி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜீலை 4

கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட்டில் இணுவில் கலையொளி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இணுவில் கலையொளி அணியை எதிர்த்து ஐயனார் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கலையொளி அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கோகுலன் 13, மைக்கேல் 12




ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நம்பி, கண்ணா, அப்பு ஆகியோர் ஒவ்வொரு இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஐயனார் அணி 5.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 15 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அதிகபட்சமாக உத்தமன் 6, கண்ணா 3 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சிறி 3, ஜீவா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இதனால் இணுவில் கலையொளி அணி 31 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)

# நாவலர் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஜீலை 4

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நாவலர் அணி வெற்றிபெற்றது.

வசந்தசிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவலர் அணியை எதிர்த்து சாந்தை அணி மோதியது. 8:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நாவலர் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# கார்மேல் போய்ஸ் அணி இறுதியில்

யாழ்ப்பாணம், ஜீலை 4

கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் கார்மேல் போய்ஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கார்மேல்ஸ் போய்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் காமாட்சி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெயரூபன் 18, மோகன் 3 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கார்மேல்ஸ் போய்ஸ் அணி சார்பில் பிறக்கன் 3 இலக்குகளையும், கஜன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்று 2 இலக்குகளால் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. அதிகபட்சமாக சுரேந்திரன் ஆட்டம் இழக்காமல் 13, தீபன் 5 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சிந்து 5 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம-422)



# காலிறுதியில் பெல்ஜியம்

## கடைசி நிமிடத்தில் தோற்றதால் கதறி அழுதனர் ஜப்பான் வீரர்கள்




உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் கடைசி நிமிடத்தில் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது பெல்ஜியம்.

பெல்ஜியத்தை எதிர்த்து ஜப்பான் மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல் பரப்புகள் பரஸ்பரம் ஆக்கிரமிக்கப்பட்டன. எனினும் கோலெதுவும் பதிவாகவில்லை. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி.

ஆனால் இரண்டாவது பாதி முதல் பாதிக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் அமைந்திருந்தது. இரண்டு அணிகளதும் தடுப்பு அரண்கள் பலவீனமானதொரு நிலையிலேயே இருந்தன. 48ஆவது நிமிடத்தில் கராஜுசி ஜப்பானின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அடுத்த நான்கு நிமிடங்களில் டக்சி ஜப்பானின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். ஆக, பெல்ஜியம் கோல் கணக்கை ஆரம்பிக்கும் முன்னர் ஜப்பான் இரண்டு கோல்களைப் பதிவுசெய்து முன்னிலை பெற்றிருந்தது.

70ஆவது நிமிடம் வரையில் ஜப்பான் 2:0 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது. இறுதி இருபது நிமிடத்தில்தான் தனது கதை முடியப்போகிறது என்பதை அது அறிந்திருக்கவில்லை. 70ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் ஜன்வெர்டோகன். மௌறன்ஸ் 74ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். தற்போது கோல் கணக்கு 2:2. ஐந்து நிமிடங்களில் அனைத்தும் மாறியது. எந்த அணியும் வெற்றிபெறலாம் என்கிற நிலை. எனினும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் 2:2 என்ற நிலையிலேயே இருந்தன. மேலதிகமாக வழங்கப்பட்ட நான்கு நிமிடங்களின் நான்காவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் கோலைப் பதிவுசெய்து ஜப்பானை அதிர்ச்சிகரமாக வெளியேற்றினார் நாச்சர். (ம)

### கதறியழுத வீரர்களும் ரசிகர்களும்

ஜப்பான் அணியின் அதிர்ச்சித் தோல்வியை அடுத்து அந்த அணியின் வீரர்களும், ரசிகர்களும் கதறி அழுது தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள்.

ஆட்டத்தின் பெரும்பாலான நிமிடங்களில் ஜப்பான் ஆதிக்கம் செலுத்தியது. 70ஆவது நிமிடத்தில் ஜப்பான் 2:0 என்று முன்னிலையில் இருந்ததால் அந்த அணி தோற்பதற்கான வாய்ப்பு மிகக்குறைவு என்றே கருதுப்பட்டது. எனினும் நம்ப முடியாத வகையில் பெல்ஜியம் திடீர் எழுச்சி கண்டு ஜப்பானை வீழ்த்தியது. இந்தத் தோல்வியை அடுத்து ஜப்பான் வீரர்கள் அழுதனர். அந்த அணியின் ரசிகர்கள் கதறி அழுது தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள். (ம)





# அதிகம் நடிக்கிறார் நெய்மர் அது ஆரோக்கியமானதல்ல!

## மெக்சிக்கோவின் பயிற்சியாளர் காட்டம்



"மைதானத்தில் நெய்மர் அதிகம் நடிக்கிறார். அவரின் நடிப்பு கால்பந்தாட்டத்துக்கு நல்லதல்ல" என்று தெரிவித்தார் மெக்சிக்கோ அணியின் பயிற்சியாளர் கோர்லோஸ். நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் மெக்சிக்கோவை எதிர்த்து பிரேசில் மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் மெக்சிக்கோவை வென்று காலிறுதிக்குத் தகுதிபெற்றது பிரேசில். பிரேசில் அணியின் தலைவர் நெய்மர் பலமுறை மெக்சிக்கோ வீரர்களால் தரையில் வீழ்த்தப்பட்டார். இதனால் பிரேசில் ஏகப்பட்ட 'பிரீகிக்'குகளை வாங்கிக் குவித்தது. இவ்வாறிருக்க நெய்மர் பெரியளவில் தாக்கப்படவில்லை. அவர் அவ்வாறு நடிக்கிறார் என்று தெரிவித்தார் கார்லோஸ்.

"நெய்மரின் இந்த நடிப்பு கால்பந்தாட்டத்துக்கு நல்லதல்ல. இது கால்பந்தாட்டத்துக்கு அவமானம். அந்த ஒரு வீரரால் நாங்கள் நிறைய நேரங்களை இழந்தோம். கால்பந்தாட்டம் ஆழ்ந்து சிந்தித்து விளையாட வேண்டிய விளையாட்டு. இரைச்சலுடன் விளையாடக் கூடாது. எல்லா மக்களும், குழந்தைகளும் பார்க்கும் ஆட்டத்தில் நடிப்பு இருக்கக் கூடாது. இதனால் எங்களது ஆட்ட வேகத்தில் தாக்கம் ஏற்பட்டது. ஆட்டம் முழுவதும் பிரேசிலுக்கு சாதகமாக இருந்தது" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# காலிறுதியில் சுவீடன்

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றது சுவீடன்.

இரண்டும் சமபலமுள்ள அணிகள். இதனால் ஆரம்பம் முதல் மிகச் சிறந்த போராட்டத்தை இரண்டு அணிகளும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. முதல் பாதியில் சுவீடனை விடவும் சுவிற்சர்லாந்து அணியே அதிகப்படியான பந்துடைமையைக் கொண்டிருந்தது. எனினும் அந்த அணியால் கோலெதையும் பதிவுசெய்ய இயலவில்லை. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.



இரண்டாம் பாதியில் சுவீடன் அணியின் நட்சத்திர வீரர் ரொட்ரிக்காஸ் அவ்வப்போது சுவிற்சர்லாந்துக்கு அச்சுறுத்தலைக் கொடுத்துக் கொண்டிருந்தார். ரொட்டிக்காஸை மையப்படுத்தியதாக சுவீடன் அணியின் ஏனைய வீரர்களின் நகர்வுகள் இருந்தன. எனில். இடைவேளையின் போது சுவீடன் பெரிதாக ஏதோவொன்றைத் திட்டமிட்டிருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

ஆட்டத்தின் 66ஆவது நிமிடத்தில் எமில் போர்ஸ்பேர்க் சுவீடனின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். சுவிற்சர்லாந்தின் 'பொக்ஸ்' பகுதிக்குள் வைத்து மார்செஸிடம் இருந்து பந்தை இடதுகாலால் பெற்று பின் வலது காலுக்கு மாற்றி சிறு உந்துதலுடன் அந்தக் கோலைப் பதிவு செய்திருந்தார் அவர். தனது கோல் பரப்பில் அதுவும் 'பொக்ஸ்' பகுதிக்குள் இத்தனை நகர்வுகளின் பின்னரான கோலொன்று பதிவாக சுவிற்சர்லாந்து அனுமதித்தமை அந்த அணியின் இயலாத தன்மையே.



அதன் பின்னர் சுவீடனின் ஏக ஆதிக்கம் தொடர்ந்தது. வழங்கப்பட்ட மேலதிக நிமிடங்களின்போது சுவீடனின் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய அந்த அணியின் வீரர் முன்னேறிச் சென்றபோது சுவிற்சர்லாந்து வீரர் மிச்செல் லாங் அவரைப் 'பவுல்' செய்தார். இதையடுத்து சிவப்பு அட்டையை வாங்கிக் கொண்டார். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சுவீடன். (ம)


விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

A/L 2018 தொழில் நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான
விசேட செயலமர்வு

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 6,7,8 | பொறியியற் தொழினுட்பவியல்<br>உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் |
| 9,10 | தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 12,13,14 | I.C.T, விவசாயம்,புவியியல், ஊடகக்கற்கை |

நேரம் காலை 8.30 - 2.00

குறிப்பு :
- பாடங்கள் ஒவ்வொன்றும் அலகு ரீதியாக தெளிவுபடுத்தப்படும்
- ☆ எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்களும் அதற்குரிய விடைகளும், விளக்கங்களும் வழங்கப்படும்
- ☆ அலகு ரீதியான பாட விடயச் சுருக்கங்களை உள்ளடக்கிய கையேடுகள் வழங்கப்படும்
- ☆ முற்பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கே கையேடுகள் வழங்கப்படும்.

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்

தொடர்புகளுக்கு 0772487774



UDUVIL GIRLS' COLLEGE
Prize Giving - 2018
Chairperson
Rt.Rev.Dr.D.S.Thiagarajah, Ph.D
(Bishop, Jaffna Diocese of the Church of South India)
Chief Guest
Hon.Shankar Balachandran
(Consul General of India, Consulate of India, Jaffna)
Please grace our special occasion with your presence to be held on
Thursday, the 5th of July, 2018, in the Jubilee Hall, at 3.00 p.m
Principal, Staff & Pupils



வட இந்திய காசியாத்திரை

ஆரம்பம் 04.08.2018 யாத்திரீகர் 15 நாள்கள் 16

தரிசிக்கும் இடங்கள் :- டெல்லி : நாராயணர் கோயில். இந்திராகாந்தி வீடு. நேரு வீடு. இந்திராகாந்தி சுடப்பட்ட இடம். ஹரித்துவார் (7 இடங்கள்) ரிஷிகேஷ் (7 இடங்கள்) கங்கா பூசை (ஆர்த்தி) குருச்சேத்திரம் பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடங்கள் பிரம்ம தீர்த்தம் நீராடல் கங்கைகளில் நீராடல். காசியில் 15 இடங்கள். கங்கா பூசை. கயா. புத்தகயா. அலகாபாத். (கங்கா. யமுனா. சரஸ்வதி) திருவேணிசங்கமம். சீத்தாமடி. ஆக்ரா (தாஜ் மஹால்). மதுரா கிருஸ்ண ஜென்மபூமி. பிரேமந்திர். பிரமாண்டமான கிருஸ்ணர் கோயில். செங்கோட்டை. இராமேஸ்வரம். உத்திரகோசமங்கை. திருப்புலாணி. நவபாஷாணம். பஞ்சமுக ஆஞ்சநேயர். அப்துல்கலாம் மணி மண்டபம். மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம். மற்றும் வேறு பல இடங்களும் காணலாம்.

ஒரு நாள் சென்னையில் சொப்பிங்
பெற்றுக்கொள்ளும் ரூபாய்க்கு எமது சேவைகள்

4 விமான பயண டிக்கட். மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு. காப்பி. டீ. குடிநீர் 2 பேருக்கு. வெஸ்ரன்கொமட். குளியலறை. இணைந்த அறைகள். பயணம் முழுவதும் A/C வாகன வசதி. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ். செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும்.

"சென்றவர்களை கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11.
T.P - 077 768 0102, 077 736 2154
E.mail : sriranganathan2601@gmail.com
sriranganathan1944@gmail.com
Facebook : Sridevisriranganathan.thuraiappa
(in/6922) (13.17)



A/L 2018 வரலாறு
மாபெரும் கருத்தரங்கு
காலம் :- 07.07.2018 (சனிக்கிழமை)
08.07.2018 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- காலை 8.30 - மாலை 4.30 வரை
இடம் :- D.M.I, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
வளவாளர்கள் :- யாழின் முதல்தர வரலாற்று ஆசிரியர் :-
M.பத்மன் M.A (History)
இவருடன் S.சுஜிகரன் (B.A)
வெளி மாணவரும் பங்கு பற்றலாம்.



ஷாம்சனின் SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
ஆசிரியர்கள், அரச தனியார் அலுவலர்கள்
பட்டதாரிகள், உயர்கல்வி மாணவர்கள்
வெளிநாடுசெல்வோர், இளைஞர் யுவதிகள்
சனி, ஞாயிறு பிரிவுகள் - 07. 07. 2018
சனி, ஞாயிறு 3 மாத பயிற்சி
பிரிவு1: 08-10 பிரிவு2: 03-05
செவ், வியாழன் பிரிவுகள் - 10. 07. 2018
செவ், வியாழன் 3 மாத பயிற்சி
பிரிவு1: 08-10 பிரிவு2: 10-12
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
SAAMSON 279, வெலிங்டன் சந்தி, யாழ்நகர். 077 1570 486 021 3203313


## 18 உதைகளை வீணாக்கிய சுவிஸ்



கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் மொத்தமாக 18 உதைகளை சுவிற்சர்லாந்து அணி வீணாக்கியது.

இந்த ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் சுவீடன் வெற்றிபெற்றது. முதல்பாதியில் சுவிற்சர்லாந்து அதிகப்படியான பந்துடைமையை கொண்டிருந்தது என்கிற அடிப்படையில் அந்த அணி மொத்தமாக 18 உதைகளை சுவீடனின் கோல்கம்பங்களை நோக்கி முன்னெடுத்தது. எனினும் அவற்றில் ஒன்றுகூட கோலாக மாற்றப்படவில்லை. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.